

# பா/வாதரவத்தை விக்கினேஸ்வரா வித்தியாலயம்

## புத்தூர்



# 1910 - 2010



# நூற்றாண்டு விழாச் சிறப்பு மலர்

25.10.2010



# யா/வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயம்

# நூற்றாண்டு விழாச் சிறப்பு மலர்

## 1910 – 2010

J/VATHARAWATTAI VIGNESWARA VIDYALAYAM
Duty First and Foremost!
PUTTUR
ESTD. 1910

வெளியீடு
யா/வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயம்
புத்தூர்

25.10.2010

## பாடசாலைக் கீதம்

**இராகம் : நாத நாமக் கிரியை** **தாளம் : திஸ்ரஜதி ஆதி**

வளம்பெருகும் புத்தூரில் வாதர்வூர் இலங்கும்,

வள்ளலங்கு விக்(கி)னேசு வரன் அருளி விளங்கும்

ஏழு கன்னி மார் ஒரு பால் எழுந்தருளிக் காக்கும்

எங்கல்விச் சாலைதனில் ஏர்புகழை அளிக்கும்

பொறியாளர் வைத்தியர்கள் போதிக்கும் ஆசார்


பொற்கலனாய் அமைந்தார்கள் , போலிகளைப் பேசார்.

அறிநூலும் அருநிதியும் ஆன்றோரும் வேண்டும்

அருங்கல்வி நற்செயலும் ஆர்வமுடன் வேண்டும்

விக்(கி)னேசு வரவித்தி யாசாலை வாழ்க

விநாயகரும் கன்னியரும் விதந்தருளி வாழ்க.



Our Principal
Mr.J.A.Thavanayagam

## மகுடவாசகம் MOTTO

### கடமையே கண்

### Duty First and Foremost!

## எமது நோக்கு Our Vision

அறிவுடன் ஆற்றலும், கலையுடன் பண்பாடும் அமைவுறப் பெற்று, சமநிலை ஆளுமை கொண்ட நற்பிரசைகளைச் சமூகத்திற்கு வழங்கல்.

Generating good Citizens endowed with knowledge and capabilities, art and culture and a balanced personality.

## எமது பணி – Our Mission

1. பயனுறுதிமிக்க கற்றற் செயற்பாடுகளினூடாக தேர்ச்சி இலக்கினை நோக்கிப் பயணித்தல்.

   Progressing towards Competency Goals through effective learning activities

2. விளைதிறன் மிக்க கற்றற் பேறுகளைக் கொண்ட மாணவர் மையக் கற்றற் செயற்பாடுகளைத் திட்டமிட்டுச் செயற்படுத்தல்.

   Planning and implementing student–centred learning activities which have productive learning outcomes

3. நல்லொழுக்கம், மானிட விழுமியம், தலைமைத்துவம், 21ஆம் நூற்றாண்டின் தொழில் மற்றும் வாழ்வியல் உலகிற்கான பிரவேசம், சவால்களை வெற்றி கொள்ளும் திறன் ஆகியன கற்றற் பேறுகளில் பிரதிபலிக்கச் செய்தல்.

   Reflecting in learning outcomes high moral standards, human values, leadership qualities, requisites for entry into the world of work and life in the 21st century and ability to overcome challenges

4. இணைபாடவிதானச் செயற்பாடுகளில் முழுமையான பங்களிப்புக்கும், ஆற்றல் வெளிப்பாட்டுக்கும் வழிப்படுத்தல்.

   Guiding for full involvement in co – curricular activities and for bringing out full potentials

# மலரின் உள்ளே


| | |
|---|---|
| 1) அதிபரின் உள்ளத்திலிருந்து | i-ii |
| 2) மலர்க் குழுவிடமிருந்து | iii |
| 3) மலர்க்குழு உறுப்பினர்கள் | vi |
| 4) ஆசிச் செய்திகள் | v-vi |
| 5) வாழ்த்துச் செய்திகள் | vii - xxii |
| 6) வித்தியாலயத்தை வழிநடத்திய அதிபர்கள் | xxiii - xxiv |
| 7) யாஃவாஃவிஃவி ஆரம்பமும் வளர்ச்சியும் ஒரு நோக்கு | 1-8 |
| 8) முக்கிய வரலாற்று நிகழ்வுகள் | 9 |
| 9) நூற்றாண்டில் மேற்கொள்ளப்பட்டவேலைத்திட்டங்கள் | 10 |
| 10) என் அனுபவ எண்ணங்கள் | 11-13 |
| 11) எனது மனப் பதிவுகளிருந்து | 14 |
| 12) **Reminiscences of my days at Vatharavatte Vigneswara Vidyalaya.** | 15-16 |
| 13) நல்ல மனம் | 17-20 |
| 14) நனோ தொழினுட்பம் | 21-22 |
| 15) அபிவிருத்திப் பாதை நோக்கி | 23-27 |
| 16) சிந்தனைக்கு சில நிமிடங்கள் | 28 |
| 17) வாதரவத்தைக் கிராமம் அன்றும் இன்றும் | 29-36 |
| 18) பள்ளி வாழ்விலும் சேவையிலும்...... நினைவுகள் | 37-42 |
| 19) The World Of Electronics | 43-44 |
| 20) வாழி விக்னேஸ்வரா வித்தியாலயம் | 45 |
| 21) சிறுபட்டி | 46-47 |
| 22) பல்லாண்டு வாழி | 48 |
| 23) எதிர்காலம் உன்னிடம் | 49 |
| 24) வானிசைக்க வாழ்த்துப்பாடி | 50 |
| 25) கல்வி | 51 |
| 26) EARTH'S OCEANS | 52-53 |

| | |
|---|---|
| 27) Model English Compostion | 54-55 |
| 28) Honesty is Best Policy | 56 |
| 29) Quotation From Shekespare | 57 |
| 30) சோழர் காலம் ஓர் அறிமுகம் | 58-59 |
| 31) பெரிய புராணமும் வன் பக்தியும் | 60-63 |
| 32) வாதரவத்தை பிரதேச நோக்கு | 64-69 |
| 33) அன்னையே உன்னை | 70-71 |
| 34) யாழ்ப்பாணத்திற்கு இரணை மடு நீர் வந்தால் | 72-73 |
| 35) கிறிக்கெற் | 74 |
| 36) ஹிப்போக்கிரட்டீஸ் | 75-76 |
| 37) கல்வியின் சிறப்பு | 77 |
| 38) நாடுகளின் சிறப்புக்கள் | 78 |
| 39) காலத்தில் பணியாற்றிய ஆசிரிய மணிகள் | 79-82 |
| 40) நூற்றாண்டில் இடமாற்றம் பெற்றுச் சென்ற ஆசிரியர்கள் | 83 |
| 41) நூற்றாண்டின் ஆசிரியர் குழாம் | 84 |






## அதிபரின் உள்ளத்திலிருந்து....

நூறாண்டு கால கல்விப்பயணத்தை இப்பிரதேசத்தில் நிறைவு செய்து நிற்கும் எம் வித்தியாலயத்தின் நூற்றாண்டு மலருக்கு நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெருமகிழ்வடைகின்றேன். இந்நூற்றாண்டு கால வேளையில் இவ்வித்தியாலயத்தின் அதிபராக பணியாற்றுவதில் எனது மகிழ்ச்சி இரட்டிப்பானதாகும்.

தனித்து விடப்பட்டுள்ள இவ்வறிய கிராமியச் சூழலில் இப்பாடசாலை தனது கல்விப் பயணத்தை ஆரம்பிக்க அடித்தளமிட்ட மெதடிஸ்த மிஷனரியினரின் பணி மகத்தானது என்பதுடன் என்றும் நன்றியுடன் நினைவு கூரப்பட வேண்டியதுமாகும்.

இப்பாடசாலையின் வரலாற்றில் ஏறத்தாழ அரைநூற்றாண்டுக்கு மேலான காலம் மெதடிஸ்த மிஷனரியினரின் நிர்வாகத்துக்குட்பட்டிருந்தமை இங்கு சிறப்பாகக் குறிப்பிடப்பட வேண்டிய தொன்றாகும். இக்காலப்பகுதியிலும் பின்னர் அரசாங்கப் பாடசாலையாகப் பொறுப்பேற்கப்பட்டு செயற்பட்டு வந்த வேளையிலும் பல்வேறு வசதியீனங்கள், பிரச்சினைகள் மத்தியிலும் மிகுந்த பொறுப்புணர்வோடு பணியாற்றி பாடசாலையை நிலைக்கத்தக்க வளர்ச்சிக்கு முன்னெடுத்துச் செல்ல வழிகோலியுள்ள முன்னாள் அதிபர்கள், ஆசிரியர்கள்அனைவரதும் அர்ப்பணிப்பான சேவையினை இவ்வேளையில் மிகுந்த நன்றியுடன் நினைவு கூருகின்றேன்.

இப்பாடசாலைப் பொறுப்பை யான் ஏற்றுக் கொண்ட பின்னரான இக் குறுகிய காலப்பகுதியில் நிலைக்கத்தக்க வளர்ச்சியை நோக்கிய பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அவை செயற்படுத்தப்பட்டும் வருகின்றன. தரமான கல்வியை வழங்குதல், உயர்ந்த பெறுபேற்று நிலையைப் பேணுதல் என்பன எமது முக்கிய இலக்குகளாகும். அத்துடன் பாடசாலையின் பால் சமூகத்தின் ஈடுபாட்டை மிகுந்த அளவில் ஏற்படுத்துவதில் நாம் பெருமளவுக்கு வெற்றி கண்டுள்ளோம். பழைய மாணவர் சங்கம் உருவாக்கப்பட்டு மிகுந்த ஈடுபாட்டோடு செயற்பட்டு வருகின்றது. அத்துடன் பாடசாலைக்கான பல்வேறு உதவிகளை வழங்குவதற்கு சமூகத்திலிருந்து பலரும் முன்வருகின்ற நிலை தோன்றியுள்ளது.

மேலும் பௌதீக வளத்தை மேம்படுத்துவதிலும், வசதிகளை உருவாக்குவதிலும் பாரிய வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. 1974ஆம் ஆண்டில் அரசாங்கத்தால் சுவீகரிக்கப்பட்ட பொழுதிலும் பாடசாலைப் பயன்பாட்டுக்குட்படாது இழுபறி நிலையிலிருந்த கிழக்கு புற காணித்துண்டுகள் பிணக்குகள் தீர்க்கப்பட்டுப் பாடசாலைக் காணியுடன் இணைத்து எல்லையிடப்பட்டுள்ளன. யுனிசெவ் நிறுவனத்தின் உதவித்திட்டத்தில் பாடசாலையின் குடிநீர், சுகாதார வசதிகள் முழுமையான அளவில் நிறைவேற்றப்பட்டுள்ளன. குடிநீர் விநியோகத்துக்கென தண்ணீர்த்தாங்கி நிர்மாணிக்கப்பட்டு பாவனைக்குட்படுத்தப்பட்டுள்ளது. ஆண்களுக்கான மலசலகூடம் தற்போது நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது. உலக உணவுத் திட்டத்தின் உதவியுடன் சமையற்கூடம் நிர்மாணிக்கப்பட்டு பயன்படுத்தப்படுகின்றது.

SEMP-EKSP திட்டத்தின் மூலம் கணினிக் கூடம் நிர்மாணிக்கப்பட்டு பயன்பாட்டுக்குரியதாக்கப்பட்டுள்ளது. செயலிழந்திருந்த கணனிகள் திருத்தப்பட்டு மாணவர்களின் ICT கற்கைக்கு வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. பழைய மாணவர்களிடமிருந்து போட்டோப் பிரதி இயந்திரமொன்று நன்கொடையாக கிடைக்கப் பெற்றுள்ளது. அத்துடன் விஞ்ஞான ஆய்வு கூடத்துக்கான கட்டுமாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன். எதிர்வரும் டிசம்பர் மாதத்திற்குள் முழுமையாக நிறைவு செய்யப்படவுள்ளன.

இணைப்பாடவிதானச் செயற்பாடுகளில் மாணவர்களது திறமைகள் மேம்பட்டு வருகின்றன. மெய்வல்லுனர் போட்டிகளில் தேசிய மட்டம் வரை செல்வதற்கான தகுதியை எமது மாணவர் தொடர்ச்சியாக பெற்று வருகின்றனர். இருந்தும் அவர்களுக்கான போதிய பயிற்சிகள் வழங்கப்படக்கூடிய வாய்ப்புக்கள் எம்மிடம் இல்லை. அத்தகைய வசதிகள் ஏற்படுத்தப்படல் வேண்டும்.

மேலும் வகுப்பறைப் பற்றாக்குறை தற்போது நாம் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினையாகவுள்ளது. புதிதாக வகுப்பறைக் கட்டடத் தொகுதி ஒன்றை அமைக்கும் போதே இப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியும்.

இக்கிராமத்தின் சிறார்களின் கல்விக்கான வாய்ப்பை வழங்கும் தனியொரு பாடசாலையாக விளங்கும் இப்பாடசாலை எதிர்காலத்தில் சகல வளங்களும் பெற்று சீரிய கல்வியைச் சிறப்புடன் வழங்கும் மகாவித்தியாலயமாக உயர்வு பெற்று மிளிர வேண்டுமென்பதே எமது இலக்காகும். அதற்காக நாம் அனைவரும் ஒன்றிணைந்து உழைத்து இச்சீரிய பணியினைச் செவ்வனே நிறைவேற்றுவோமாக.

**திரு.யோ.அ.தவநாயகம்,**
**அதிபர்,**
**யா/வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயம்,**
**புத்தூர்.**

## மலர்க்குழுவிடமிருந்து....

எமது பாடசாலையின் நூறாண்டுச் சிறப்புடீ மலரை மிகுந்த சிரமத்துடன் வெளிக்கொணர்ந்து தங்கள் கைகளில் தவழ விட்டிருப்பதில் நாம் பெருமகிழ்வடைகின்றோம்.

எமது பாடசாலை நூற்றாண்டைக் கடந்து நின்ற போதிலும் வரலாற்றில் இது ஓர் கன்னி முயற்சியேயாகும்.

பொருளாதாரரீதியிலும், தகவல்களைத் திரட்டுவதிலும், அச்சிடல் பணிகளிலும் நாம் பல்வேறு நெருக்கடிகளை எதிர் கொண்ட போதும் சோர்வடையாது முன்னெடுத்த முயற்சியால் இச் சிறிய மலரை எம்மால் வெளிக் கொணர முடிந்தது.

பாடசாலையின் வரலாற்றுத் தகவல்கள், ஆசிரியர், மாணவர்களது ஆக்கங்கள் என்பனவற்றுக்கு முக்கியத்துவம் வழங்கி வெளியிட விரும்பினோம் அவ்வகையில் எமது பணியை குறிப்பிடத்தக்க அளவுக்கு நிறைவு செய்திருக்கின்றோம். என்றே நம்புகிறோம். எதிர்காலச் சந்ததியினருக்கான வரலாற்று ஆவணமாக மிளிரும் என்பது எமது நம்பிக்கையாகும்.

மலரின் வருகைக்காக எம்மோடுழைத்த அனைவருக்கும் இவ்வேளையில் எமது நன்றிகள் உரித்தாகுக.

**– மலர்க்குழு –**

# நூற்றாண்டு விழாச் சிறப்பு மலருக்கான மலர்குழு உறுப்பினர்கள்

**ஆலோசனையும் வழிப்படுத்தலும்**

திரு.J.A தவநாயகம் (அதிபர்)

மலர்குழு உறுப்பினர்கள்

திரு.மு.யோரின்பமூர்த்தி (ஆசிரியர்)

திரு.க.கிருபாகரன் (ஆசிரியர்)

திரு.து.ஜீவானந்தன் (ஆசிரியர்)

இணை உறுப்பினர்கள்

திரு.க.சுந்தரவேல் (பா.அ.ச)

செல்வி.இ.லஜிதா (ப.மா.ச)

உ
சிவமயம்
குருபாதம்

# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

ஸ்தாபகர்: ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்
குருமஹா சந்நிதானம் ஆதிமுதல்வர்

ஆதீன முதல்வர்: ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்
இரண்டாவது குருமஹா சந்நிதானம்

தொலைபேசி:

நல்லூர், யாழ்ப்பாணம்,
இலங்கை.



## நல்லை ஆதீன குரு முதல்வர் வழங்கிய அருளாசிச் செய்தி

அன்புசார் பெருந்தகையீர்;

யாழ்ப்பாணம் புத்தூர் வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயம் இன்று தனது 100வது அகவையை அடைந்திருப்பதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். மனிதனின் கண்ணெனப் போற்றும் கல்வியை அனைவரும் கற்றுக் கொள்ளும் வகையில் பல கல்லூரிகள் இன்று கல்விக்காக பணியாற்றுகின்றன. தமிழினத்தின் தனிப் பெரும் சொத்தாகிய கல்வியை 100 ஆண்டுகள் இப்பாடசாலை பிரதேச மக்களின் வளர்ச்சிக்காக வழங்கியமை அனைவருக்கும் மகிழ்ச்சியை தருகின்றது. எம் சமயத்தின் இறைவனாகிய விநாயகப் பெருமானின் பெயரினால் இயங்கும் இப்பாடசாலை சமயம், ஒழுக்கம் அனைத்தையும் வளர்த்தமை பெருமைக்குரிய விடயமாகும். கற்றறிந்தாரின் சிறப்பினை,

**"தாம்இன் புறுவது உலகுஇன் புறக்கண்டு**
**காமுறுவர் கற்றறிந்தார்."**

எனும் வள்ளவர் வாக்கு நமக்கு உணர்த்துகிறது. இப் புனிதப் பணியை நூற்றாண்டுகள் செய்த அதிபர், ஆசிரியர்கள், இன்றைய அதிபர், ஆசிரியர்கள், நலன் விரும்பிகளை இறைவன் ஆசீர்வதிப்பாராக இக் கல்விப்பணி தொடர்ந்தும் நடைபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக**
**ஞானசம்பந்த பரமாச்சாரிய ஸ்வாமிகள்,**
**இரண்டாம் குருமஹாசந்நிதானம்,**
**நல்லை ஆதீனம்.**

# METHODIST CHURCH SRILANKA

## PUTTUR MISSION

Rev. Kumar Thangarajah
(Christy Kumar)
Priest in charge

Mission Centre
St. Luke's Methodist Church
Puttur

....... / ....... / 20........



## புத்தூர் மெதடிஸ்த மிஷன் பொறுப்புக் குருவின் ஆசிச் செய்தி

எமது மெதடிஸ்த மிசனரிகளால் வாதரவத்தை கிராமத்தில் உருவாக்கப்பட்ட இப்பாடசாலை தனது 100வது ஆண்டு விழாவை கொண்டாடுவதையிட்டு இப்பிரதேசத்தின் மெதடிஸ்த திருச்சபை குருவானவர் என்கிற முறையில் மிகவும் உவகை அடைகிறேன்.

யாழ்ப்பாண குடாநாட்டில் எமது திருச்சபை ஊடாக பல பாடசாலைகளை நிறுவுவதற்கு காரணகர்த்தாவாக இருந்த வண் பீற்றர் பேர்சிவல் அடிகளாரே இப்பாடசாலையையும் நிறுவினார் என்று வரலாறு எமக்கு சொல்கிறது. இவர் புத்தூர் மெதடிஸ்த ஆலயத்தில் 1842 ம் ஆண்டு தொடக்கம் 1951 ம் ஆண்டு வரை குருவானவராக பணிபுரிந்த காலகட்டத்தில் இவரின் முயற்ச்சியினால் புத்தூர், ஆவரங்கால், சிறுப்பிட்டி, நீர்வேலி போன்ற இடங்களிலும் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

இப்பாடசாலையானது இவ்விழாவை முன்னெடுக்கின்ற இந்நாட்களில் தங்கள் நிறுவனராகிய வண் பீற்றர் பேர்சிவலை அவசியம் நினைவு கூர வேண்டும். தொடர்ந்தும் இப்பாடசாலை முன்னேற்ற பாதையில் செல்ல வல்ல கடவுள் அருள் புரிவாராக.

தங்களின் பணியில்
அருட்திரு C.K.தங்கராஜா,
பொறுப்புக்குரு.
மெதடிஸ்த ஆலயம்,
புத்தூர்.

කාර්යාලය / அலுவலகம் / office: 2669277, 2690800

පොදු / பொது / General: 2669269, 2689360, 2689361

ෆැක්ස් / பக்ஸ் / Fax: 2669278

නිවස / வதிவிடம் / Residence: 2503467

Mobile: 0777781891

E-Mail: deva@slt.lk

ෆැක්ස් / பக்ஸ் / Fax: 2585255

ඩග්ලස් දේවානන්ද පා.ම.

டக்ளஸ் தேவானந்தா பா.உ.

DOUGLAS DEVANANDA M.P.

සම්ප්‍රදායික කර්මාන්ත හා කුඩා ව්‍යවසාය සංවර්ධන අමාත්‍ය

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர்

MINISTER OF TRADITIONAL INDUSTRIES AND SMALL ENTERPRISE DEVELOPMENT


ඔබේ අංකය/உங்களது இல/ Your No : මගේ අංකය/எனது இல/ My No : දිනය/திகதி/ Date :

## பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கௌரவ டக்ளஸ் தேவானந்தா அவர்களது வாழ்த்துச் செய்தி.



யாழ் குடாநாட்டில் பின்னடைந்த நிலையில் காணப்படுகின்ற ஒரு பகுதியில் பல்வேறு துறைகளில் முன்னேறி வருகின்ற வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயம் தனது நூறு ஆண்டுகளைப் பூர்த்தி செய்து இன்று அதனைக் கொண்டாடுவதையிட்டு நான் மிகுந்த மகிழ்ச்சி அடைவதுடன் இதன் வளர்ச்சியில் பங்காற்றி உழைத்துள்ள அனைவருக்கும் எனது நன்றியையும் பாராட்டினையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

1990 வருடம் திண்ணைப் பள்ளியாக ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை 1910ம் வருடம் மெதடிஸ்த மிஷன் பொறுப்பில் வந்த பின்னர் 1962ம் வருடம் அரச சுவீகரிப்பிற்கு உட்பட்டுள்ளது.

1966ம் வருடம் யா/வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயம் என்ற பெயரினைப் பெற்று இன்று வரை மிகவும் நல்ல நிலையில் துறைசார் இலக்கு நோக்கி முன்னேறி வருவதை என்னால் அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

தரம் 1முதல் தரம் 11 வரை சுமார் 250 மாணவர்கள் பயிலும் இப்பாடசாலையானது போதுமான அளவில் வளங்களைக் கொண்டிராவிடினும் கல்வி மற்றும் விளையாட்டுத் துறைகளில் உரிய முன்னேற்றத்தைக் கொண்டிருப்பது போற்றத்தக்கதாகும்.

யாழ் குடாநாட்டின் கல்வி நிலையை மேம்படுத்தும் எனது பாரிய திட்டத்திற்கு அமைவாக இப்பாடசாலையினது வளர்ச்சி குறித்து தொடர்ந்தும் எமது பங்களிப்புக்கள் வழங்கப்படும் எனக் கூறி இப்பாடசாலையின் வளர்ச்சியில் உழைத்துள்ள முன்னாள் அதிபர்கள், ஆசிரிய சமூகத்தினர், மாணவர்கள், பெற்றோர், அதேபோன்று தற்போதைய அதிபர், ஆசிரிய சமூகத்தினர், மாணவர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர் மற்றும் நலன் விரும்பிகள் அனைவரினதும் உழைப்பிற்கு நன்றி கூறி இந்த மலரை வெளிக்கொணர்வதில் உழைத்துள்ள அனைவரையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

டக்ளஸ் தேவானந்தா பா.உ.
செயலாளர் நாயகம் - ஈ.பி.டி.பி
பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும்
சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர்
இணைத் தலைவர் — யாழ் - கிளிநொச்சி தேர்தல் மாவட்ட இணைப்புக் குழு



## கல்வி அமைச்சின் செயலாளரிடமிருந்து.....

இப்பாடசாலை மெதடிஸ்த மிசனறிமாரினால் 1910 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு மெதடிஸ் மிசன் ஆரம்பப் பாடசாலையாக அக் கிராமத்தவர்களிற்கு கல்வி அறிவை ஊட்டி முன்னேற்றி வைத்தமைக்கு மிசனறிமார்களின் தியாகம் பாராட்டிற்குரியதாகும்.

பாடசாலை சுவீகரிப்பின் போது இப் பாடசாலை அரசாங்கப் பாடசாலையாக இயங்கி ஊர் மக்களின் விருப்பத்திற்கமைய யா/வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயம் என பெயர் மாற்றப்பட்டது.

கடின உழைப்பும் புத்திக் கூர்மையும் உடைய மாணவ சமூகத்தைக் கொண்ட இவ் ஊர் பாடசாலையை அறிவுக் கூடமாக மாற்றமடையச் செய்திருப்பது அனைவரும் அறிந்த உண்மையாகும். இங்கு கற்று முடிக்கும் மாணவர்கள் பெரும்பாலானோர் உயர் தர வகுப்பிற்கு தகுதி பெற்று யாழ்ப்பாணம், புத்தூர் ஆகிய இடங்களில் கற்று பல்கலைக் கழகம் புகுந்து பொறியியல் துறையிலும், மருத்துவத் துறையிலும், வர்த்தகம் மற்றும் கலைத்துறையிலும் தேர்ச்சி பெற்று தேசத்திற்கும் ஊரிற்கும் சேவை செய்வது போற்றுதற்குரியதொன்றாகும். மற்றைய பாடசாலைகளை போல் உயர்தர வகுப்புக்களைத் தொடங்கி பின்னர் மூடுகின்ற முயற்சியை கல்லூரி சமூகத்தினர் தொடங்காதிருப்பது பிள்ளைகளின் உயர் கல்விக்கு ஆர்வமான ஆதரவை காட்டுவது வரவேற்பிற்குரியதாகும். இப் பாடசாலையின் தேவைகருதி பௌதீக வளங்கள் படிப்படியாக வழங்கி வருவது கண்கூடு. ஊரவர், அதிபர், ஆசிரியர் குழாம் பாடசாலைக்கு வழங்கி வரும் ஆதரவை மெச்சுவதுடன் நூற்றாண்டு விழா சிறப்புற அமைய மனம் நிறைந்த வாழ்த்துக்களை நல்குகின்றேன்.

**இ.இளங்கோவன்,**
**செயலாளர்,**
**கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு,**
**வடமாகாணம்.**



# மாகாணக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

தனித்துவமான பல அம்சங்களைக் கொண்ட வாதரவத்தைக் கிராமத்தில் கல்விச் சேவை நிலையமாக வளர்ந்து வரும் வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலய நூற்றாண்டு விழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பேருவகையடைகிறேன். 1910 இல் மெதடிஸ்தமிஷனால் ஆரம்பிக்கப்பட்ட இவ்வாரம்ப பாடசாலை இன்று தரம் - 2 பாடசாலையாக வளர்ச்சி பெற்றுள்ளது.

பல்வேறு வசதியீனங்கள் மத்தியிலும் இக்கிராம மக்களும் இவ்வித்தியாலயமும் யாழ்ப்பாணத்தில் தமது திறமைகளை வெளிக்காட்டுவதன் மூலம் தமக்கென ஒருதனியிடத்தினைப் பெற்றுள்ளனர். இவ்வித்தியாலய மாணவர்கள் கல்வியிலும், இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் சராசரியான திறமைகளை வெளிப்படுத்தியிருப்பினும் மேலும் கடின உழைப்பின் மூலம் உன்னத நிலையை அடைய முயற்சிக்க வேண்டும்.

இவ்வித்தியாலய வளர்ச்சியில் கடந்த ஒரு நூற்றாண்டு காலமாக உழைத்த அனைவருக்கும் நன்றி கூறுகிறேன். இப்பொழுது பணிபுரியும் அதிபர், ஆசிரியர், பெற்றோர் அனைவரும் உற்சாகமாகப் பணியாற்றி மாணவர் உயர்வடைய வழிகாட்டுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வித்தியாலயம் பல வளங்களையும் பெற்று இன்னும் பல நூற்றாண்டுகள் சீரோடும், சிறப்போடும் பணியாற்ற இறைவன் அருள் புரிவாராக.

**ப.விக்னேஸ்வரன்,**

**மாகாணக் கல்விப் பணிப்பாளர்,**

**வடமாகாணம்.**

**20.09.2010**



## அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி

பண்பாடும், பாரம்பரியச் சிறப்பும் மிக்க யாழ். குடாநாட்டிலே, வயல்களும், வளமிகு தோட்டங்களும் அணிசெய்யும் செழுமை மிகு புத்தூரெனும் பதியின்கண் அமைந்துள்ள வாதரவத்தை எனும் கிராமத்திற்குக் கல்விச் செல்வத்தை அள்ளி வழங்கும் யா/வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயம் நூறு அகவையைப் பூர்த்தி செய்து விழாக் காணும் இவ்வேளை வெளியிடப்படுகின்ற மலருக்கு வாழ்த்துக் கூறுவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

வாதரவத்தை கிராம மக்களுக்கு எண்ணும், எழுத்துமீந்த யா/வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயம், ஆரம்பத்தில் மெதடிஸ்த மிஷன் ஆரம்பப் பாடசாலை என்னும் பெயரில் மெதடிஸ்த மிஷனால் ஆரம்பிக்கப்பட்டு 1962ல் அரசாங்கத்தால் சுவீகரிக்கப்பட்டதன் பின்னர் யா/வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயம் எனும் பெயரில் இயங்கத் தலைப்பட்டது. ஆரம்ப வகுப்புக்கள் இடைநிலை வகுப்புக்கள் என்று தனது வளர்ச்சியைப் படிப்படியாய் அதிகரித்த யா/வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயம் இன்று கல்விப் பொதுத்தராதர சாதாரண வகுப்பு வரையான மாணவர்களைக் கொண்டதாய் உயர்வடைந்துள்ளதுடன் சிறந்த பெறுபேறுகளுடன், உயர்தர கல்விக்கான தகைமைகளுடன் கூடிய மாணவர்களை உருவாக்கும் உன்னத கைங்கரியத்திலும் முன்னிற்கின்றது. தன் கிராமத்து மக்களின் அடிப்படைக் கல்விக்கு நூற்றாண்டு காலமாய் அடித்தளமிட்டு வரும் இவ்வித்தியாலயம் காலத்தின் தேவைக்கேற்ப இன்னும் பல பரிணாம வளர்ச்சிகளைக் காண வேண்டியகட்டாயத்தில் உள்ள தென்பதை நாமறிவோம்.

தன் நூற்றாண்டு நிறைவு விழாவையொட்டி யா/வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயத்தினரால் வெளியிடப்படும் மலர் சிறக்கவும், இவ்வித்தியால்யம் மென்மேலும் வளர்ந்து, வெகுவிரைவில் மகாவித்தியாலமாய் மலரவும் மனமுவந்து வாழ்த்துகின்றேன்.

**திருமதி.இமெல்டா சுகுமார்,**
**அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலர்,**
**யாழ் மாவட்டம்.**



# மனித வளத்தை மாண்புறச் செய்யும் கலாலயம்

யா/வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயம் தனித்து நிற்கும் ஊர் ஒன்றில் இயங்கும் பாடசாலையாகும். இப்பாடசாலையிலிருந்து ஏனைய பாடசாலைகள் தொலைவில் இருப்பதால் இவ்வூர் மாணவர்கள் இங்கேயே கல்வி கற்க வேண்டிய கட்டாயம் உள்ளது. இவ்வூரில் நீர் ஒரு பிரச்சினையாக இருந்தது. அத்துடன் ஏனைய வளங்களும் குறைவு. இவ்விதமான வளங்கள் குறைந்த இடத்தில் இயங்கும் அதிகஸ்டப்பிரதேச பாடசாலையில் க.பொ.த(சா/த) வரை கல்வி கற்று யா/புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தாக் கல்லூரியில் க.பொ.த(உ/த) கற்று பல்கலைக்கழகம் சென்ற மாணவர்கள் அதிகம். எனவே மனித வளத்தை மாண்புறச் செய்வது இக்கலைக்கூடமாகும். இப்பாடசாலையில் ஆசிரிய வளம், பௌதீக வளம் என்பன பற்றாக்குறையாக இருப்பினும் சாதனைகள் பல உண்டு. கல்விச் சாதனைகளுடன் இணைப்பாடவிதான சாதனைகளையும் தரும் இப்பாடசாலையை வளர்த்த அதிபர்களும் ஆசிரியர்களும் அர்ப்பணிப்பாக சேவையாற்றினர் என்றால் மிகையாகாது. தற்போதைய அதிபரும் இப்பாடசாலையின் சாதனையை அதிகரிக்கப் பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார். இச்சாதனைகள் அதிகரிப்பதுடன் பௌதீக மனித வளங்களையும் நிறைவாகப் பெற்றுக் கல்வித் தொண்டாற்ற எனது வாழ்த்துக்கள்.

**"உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்**
**பிற்றைநிலை முனியாது கற்கை நன்றே"**

**திரு.வே.தி.செல்வரத்தினம்,**
**மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்,**
**யாழ்ப்பாணம்.**



## வலயக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

மருத நிலமும் நெய்தல் நிலமும் மருவி மாண்புற விளங்கும் கிராமம் வாதரவத்தை, பண்பட்ட உள்ளம், கனிந்து வந்தோரை அகமகிழ்ந்து அரவணைக்கும் பண்பு இக்கிராம மக்களின் இயற்கைப் பண்பு. இயற்கைப் பண்பு இலங்கும் இம் மக்களின் விரிந்த, பரந்த உள்ளங்களின் வெளிப்பாட்டுக்கு இலக்கணம் யா/வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயம்.

இப்பாடசாலை நூறாண்டுகளுக்கு முன் சிறார்களின் எதிர்காலத்தையும், கிராமத்தின் எழுச்சி, முன்னேற்றத்தையும் எண்ணி மெதடிஸ்த மிஷனால் ஆரம்பிக்கப்பட்டு, பின்னர் அரசுடமையாக்கப்பட்டது. ஆற்றங்கரையிலும் அரசமரத்தடியிலும் அமர்ந்து அருளாட்சி புரியும் விநாயகன் பெயரால் புதுப்பெயர் புனைந்து விக்னேஸ்வரா என விளங்குவது இப்பாடசாலைக்கு மேலும் பெருமை சேர்ப்பதாகும்.

வளர்ந்து வரும் வளமான இப்பாடசாலைக்கு இடைநிலை வகுப்புக்கள் இணைக்கப்பட்டது. இம்மாணவர்களுக்கும், மக்களுக்கும் மன நிறைவான கொடை. பிஞ்சுக் குழந்தைகள் பல காத தூரம் நடந்து பயின்று வருவதைத் தடுத்து உளச் சோர்வில்லாமல் ஊக்கத்துடன் கற்க உதவியது. இப்பணி பாடசாலையின் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் உரமூட்டியது.

நகர்புறப் பாடசாலையை நாடி நாள் தோறும் அலையும் மாணவர்களுக்கு ஓர் எடுத்துக் காட்டாக இப்பாடசாலை திகழ்கின்றது. வருடா வருடம் கணிசமான தொகை மாணவர்களை க.பொ.த உயர்தரம் கற்க உந்து சக்தியாக மிளிர்கின்றது. எதிர்காலத்திலும் இப்பாடசாலை தரத்திலும் செயலிலும் உயர்நிலை பெற வேண்டுமென இந் நூற்றாண்டு விழாக் கொண்டாடும் இத் தருணத்தில் வாழ்த்துகின்றேன்.

**திருமதி.அருளேஸ்வரி வேதநாயகம்,**
**வலயக் கல்விப் பணிப்பாளர்,**
**யாழ்ப்பாணம்.**



## வலி. கிழக்கு கோப்பாய் பிரதேச செயலரின் வாழ்த்துச்செய்தி

வலி. கிழக்குப் பிரதேசத்தில் காணப்படும் தரமான பாடசாலைகளில் ஒன்றாக யா/வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயம் திகழ்கிறது. க.பொ.த சாதாரணப் பெறுபேறுகளில் இப்பாடசாலையின் கல்வித்தரம் தெள்ளத் தெளிவாகத் துலங்குகிறது. இதற்கு இப்பாடசாலையின் அதிபர்களும், ஆசிரியர்களும், பிரதேச மக்களும் எடுக்கின்ற அக்கறையே காரணமாகும். மெதடிஸ்தமிஷனின் நன்னோக்கோடு மிகவும் பின்தங்கிய இப்பிரதேசத்தில் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை இன்று விக்னேஸ்வரா வித்தியாலயம் எனப் பெருவளர்ச்சி பெற்றிருக்கிறது. அதிகஷ்டப்பிரதேசத்தில் இப்பாடசாலை அமைந்திருந்த போதிலும் அதன் கல்வித்துறை, விளையாட்டுத்துறை உயர்வாகக் காணப்படுவது குறித்து மகிழ்வடைகிறேன்.

இப்பிரதேசம், பூகோள ரீதியிலும், காலநிலையிலும் பாதகமான அமைப்பையே கொண்டுள்ளது. அதனால் இப்பிரதேசமக்கள் கூலித்தொழிலை அடிப்படையாகக் கொண்ட வறுமைக் கோட்டின் கீழ் வாழ்பவர்களாகவே காணப்படுகின்றனர். எனினும் தமது பிள்ளைகளின் கல்வி மேம்பாட்டிலும், சமுதாய மேம்பாட்டிலும், சமூக ஒற்றுமை, பேணுவதிலும் சிறப்பாகக் காணப்படுகின்றனர்.

ஏனைய பிரதேசங்களைப் போலன்றி இப்பிரதேச மாணவர்கள் இப்பாடசாலையில் மட்டுமே க.பொ.த சாதாரண தரம் வரை கற்றுத் தேறுகின்றனர். இப்பிரதேசத்தில் இப்பாடசாலை அமைந்தது இப்பகுதி மக்களுக்குக் கிடைத்த ஒரு வரப்பிரசாதமே ஆகும். எனவே இப்பாடசாலை மகாவித்தியாலயமாக மலர்ந்து மேலும் பல மாணவர்களுக்கு பல்லாண்டு காலம் சேவை வழங்க வாழ்த்துகின்றேன். மேலும், நூற்றாண்டு மலர் மூலம் இப்பாடசாலை வரலாற்றை ஆவணப்படுத்தும் நல் உள்ளங்களுக்கும் என் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு.C.A.மோகன்றாஸ்,**
**பிரதேச செயலர்,**
**வலி.கிழக்கு,**
**கோப்பாய்.**



## கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

இப்பாடசாலை நூற்றாண்டைக் காண்பதையிட்டு மகிழ்வடைகின்றேன். நூற்றாண்டு விழா நடைபெறுவதையிட்டு பல்வேறு நிழச்சிகள் ஒழுங்கு செய்யப்பட்டிருப்பதை யாம் அறிவோம். இப்பாடசாலையின் பாரம்பரியம் பேணப்படுவதையிட்டும் கணித, விஞ்ஞான பாடங்களில் சிறப்பான தேர்ச்சியை பல்லாண்டு காலமாகப் பெற்றுவருவது கண்கூடு.

நகரப்பாடசாலைகளுடன் ஈடுகொடுக்கும் வகையில் இம் மாணவர்களின் தேர்ச்சி மட்டம் உயர்வாகக் காணப்படுவதையிட்டு மகிழ்வடையும் அதேநேரம் இப்பாடசாலையின் நூற்றாண்டு விழா மலருக்கு வாழ்த்துக் கூறுவதில் மகிழ்வடைகின்றேன்.

**திரு. சின்னத்தம்பி சித்திரவடிவேல்,**
**கோட்டக் கல்விப் பணிப்பாளர்,**
**கோட்டக் கல்வி அலுவலகம்,**
**கோப்பாய்.**



## வலி. கிழக்கு பிரதேச சபைச் செயலாளரின் வாழ்த்துச் செய்தி

வலி கிழக்கு பிரதேசத்தில் இயங்கும் பாடசாலைகளில் பெரும்பாலானவை வசதி வாய்ப்புக்களுடன் இயங்குகின்றன. எனினும் போக்குவரத்து வசதி, மின்சார வசதி, குடிநீர் வசதி குறைவாக உள்ள வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயம் ஏனைய பாடசாலைகளுடன் ஒப்பிடும் போது சிறப்பான முறையில் சேவையாற்றி வருகின்றது. இவ் வித்தியாலயம் ஆரம்ப காலங்களில் ஓலைக் கொட்டில்களாக இருந்து 60களின் பின் தனியே ஒரு கட்டிடத்தில் இயங்கி தற்போது மூன்று கட்டிடங்களில் இயங்கி வருவதுடன், இடைநிலை பாடசாலைகளுடன் கல்வியில் போட்டியிடுவதுடன் பல கல்விமான்களையும் உருவாக்கியுள்ளது.

இங்கு கல்வி கற்கும் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உறுதுணையாகவுள்ள அதிபர், ஆசிரியர்களுடன் இணைந்து பொதுமக்களும் சிறப்பாக சேவையாற்றி வருவது மகிழ்ச்சிக்குரிய தொன்றாகும்.

இவ்வித்தியாலயம் மேலும் பல வசதிகளைப் பெற்று இனிவரும் காலங்களில் சிறப்பாக சேவையாற்ற வாழ்த்துவதோடு ஒரு சகாப்தத்தினை நிறைவு செய்யும் இவ்வித்தியாலயத்திற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

**திரு.தம்பையா நடராசா,**
**செயலாளர்,**
**வலி.கிழக்கு பிரதேச சபை,**
**புத்தூர்.**



# முன்னாள் அதிபர் சு. முத்துக்குமாரசுவாமி அவர்களின் வாழ்த்துச் செய்தி

ஒரு கிராமத்தின் அறிவுசார் எழுச்சிக்கு ஆதாரமாக அமைபவை அக்கிராமத்தின் கல்வி நிறுவனங்களே. வாதரவத்தைக் கிராமத்தைச் சேர்ந்த பலர். உலக அரங்கில் சிறப்புறப் பிரகாசிப்பதற்கான அடிப்படையை இங்குள்ள ஒரே பாடசாலையான விக்னேஸ்வரா வித்தியாலயமே வழங்கியது. இன்றும் வழங்கிக் கொண்டிருக்கின்றது.

1983 - 1990 வரை இங்கு அதிபராக சேவையாற்றும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. தேடலில் ஆர்வம், பெரியாரைக் கனம் பண்ணல், ஒழுக்க உயர்வு போன்றன. வாதரவத்தைக் கிராமப் பிள்ளைகளுடன் உடன் ஒட்டிப் பிறந்த குணங்கள். இவையும் பாடசாலைச் சமூகத்தினரின் ஒத்துழைப்பும் எனது பணியை செவ்வனே நிறைவேற்ற உதவியாய் அமைந்திருந்தன.

இப் பாடசாலையில் கல்வி கற்ற பலர் இன்று கல்வியில் உயர்நிலை பெற்று நிர்வாக அதிகாரிகளாக, பொறியியலாளராக, விரிவுரையாளராக, ஆசிரியராக உயர்வு பெற்று பாடசாலைத் தாய்க்கு பெருமை சேர்த்துக் கொண்டிருக்கின்றனர்.

இப் பாடசாலை மாணவர் பலர் பல்வேறு போட்டிகளிலும் முன்னுரிமை பெற்று பிரகாசித்து வருகின்றனர்.

அதிபர் திரு.J.A.தவநாயகம் சிறந்த ஆளுமைத் திறன் மிக்கவர். அவரது வழிகாட்டலில் எங்கள் பாடசாலை உன்னத உயர்வுகள் காணவும் நூற்றாண்டு விழாச் சிறக்கவும் எனது மனம் நிறைந்த நல்வாழ்த்துக்கள்.

**மருத்துவ மனைச்சாலை,**
**அச்சுவேலி.**

**திரு.சு.முத்துக்குமாரசுவாமி,**
**முன்னாள் அதிபர்,**
**(1983 - 1990)**



## முன்னாள் அதிபர் திரு. கா. தருமரத்தினம் அவர்களின் வாழ்த்துச் செய்தி

வாதரவத்தை பிரதேசத்தின் கல்வி வளர்ச்சிக்கு அருந் தொண்டாற்றி வரும் யா/வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயம் எனது வாழ்வுடன் உணர்வு பூர்வமாக இணைந்து நிற்கின்றது. பயிற்றப்பட்ட கணித ஆசிரியராக (1978 - 1982) உப அதிபராக (1990 - 1996) அதிபராக (2002 - 2009) கடமையாற்றி இந்த பாடசாலையின் வளர்ச்சியிலும் சிறந்த பங்காற்றியதை பழையமாணவர்கள் என்னிடம் பாராட்டும் அன்பிலிருந்து புரிந்து கொள்ள முடிகின்றது. சமாதான காலத்திலும் யுத்த காலத்திலும் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங் கொடுத்து இயங்கி வந்தோம். பல்வேறு தேவைகளை திணைக்களத்தின் ஊடாகவும் பிற நிறுவனங்கள், பழைய மாணவர்கள் உதவியோடும் பெற்று வித்தியாலயத்தின் உயர்வுக்காக உழைத்தோம்.

வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயம் இன்று நன்கு செழித்து வளர்ந்து அக்கிராம மக்களுக்கு கல்வி நிழல் கொடுக்கும் பெருவிருட்சமாகி நிற்கின்றது. இதன் வளர்ச்சியில் உழைத்த அதிபர்கள், ஆசிரியர்கள் நன்றியுடன் நினைவு கூரப்பட வேண்டியவர்களாககின்றனர்.

இவ்வித்தியாலயம் இறையருளால் பலபல சாதனைகள் படைத்து அவ்வூர் மக்களுக்கு நடுவூர் பழுத்த நல்ல கனிமரமாகப் பல்லாண்டு காலம் உதவ வாழ்த்துவதுடன், நூற்றாண்டு மலருக்கும் வாழ்த்துக்களை கூறுகின்றேன்.

சிறுப்பிட்டி,<br>
நீர்வேலி.

திரு.கா.தருமரத்தினம்,<br>
(ஓய்வு பெற்ற அதிபர்)<br>
(2002 - 2009)



## மகா வித்தியாலயமாக மலர வேண்டுமென வாழ்த்துகின்றேன்

வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலய நூற்றாண்டு விழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

வாதரவத்தைக் கிராமத்தின் மத்தியில் அமைந்து அப்பிரதேச மக்களுக்கு ஒரு கலங்கரை விளக்குப் போல இக்கல்விக் கூடம் விளங்குகின்றது. இக்கல்விக் கூடமானது அகவை நூறு கண்டு நூற்றாண்டு விழாக் காணக் கால் பதித்து நிற்பது இவ்வூர் மக்களுக்கு பெருமையே. நானும் இப்பகுதியில் கிராம உத்தியோகத்தராக கடமையாற்றுகின்றேன். என்ற வகையில் மகிழ்ச்சியடைகின்றேன். இப்பாடசாலையானது நீண்ட பாரம்பரியத்தைக் கொண்டு விளங்கினாலும் அதன் வயதுக்கேற்ப வளர்ச்சியடையாதது கவலைக்குரிய விடயமாகும். எனினும் மாணவர்கள் கல்வி, விளையாட்டுத் துறைகளில் தேசிய மட்டம் வரை செல்வதற்கு விக்னேஸ்வராவின் அர்ப்பணிப்புள்ள கல்விப் பணியே காரணம் எனலாம்.

ஒவ்வொரு மாணவனும் தன் சூழலிலேயே கல்வியில் தன்னிறைவு காணக் கூடிய விதத்தில் பாடசாலை ஊடாகப் பல்கலைக்கழகம் புகும் வாய்ப்பைப் பெற வேண்டும் அதன் பெருமையைப் பாடசாலை தன்னகத்தே கொள்ள வேண்டும் என வாழ்த்துகின்றேன்.எதிர்காலத்தில் ஆல் போல் விழுது விட்டு அறுகு போல வேர் ஊன்றி ஒரு மகா வித்தியாலயமாக வளர வேண்டுமென வாழ்த்துகின்றேன். மேலும் நூற்றாண்டு விழாவையொட்டி உதயமாகும் மலருக்கும் எனது வாழ்த்துக்கள் உரித்தாகுக.

**வாழ்க! வளர்க! விக்னேஸ்வரா.**

**நன்றி**

**திரு.ஐ.சிவானந்தம்,**
**கிராம உத்தியோகத்தர்,**
**வாதரவத்தை.**

# சாதனை படைத்த கல்விக் கூடம்

வாதரவத்தை விக்கினேஸ்வரா வித்தியாலயம் இந்த ஆண்டு தனது நூற்றாண்டு நிறைவை பூர்த்தி செய்கின்றது. இந்நிறைவையொட்டி பாடசாலையின் பழைய மாணவனாகிய நான் வாழ்த்து தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

எமது கிராமம் நீர்வளம் நிலவளம் நிறைந்த பிரதேசமாக திகழ்ந்தாலும் எம்மக்கள் கல்வியில் குறிப்பிட்டுக் கூறுமளவுக்கு முன்னேறி இருப்பதற்குக் காரணம் மேற்படி பாடசாலையை அடித்தளமாகக் கொண்ட கல்வியே. இக்கல்வி காரணமாகத்தான் எமது கிராமம் பல கல்விமான்களைத் தன்னகத்தே கொண்டு தனக்கும் பெருமை சேர்த்திருக்கின்றது.

நாம் கல்வி கற்ற காலப்பகுதியில் ஓலையால் வேயப்பட்ட ஒரு மண்டபத்தில் 5ம் தரம் வரை இருந்த எமது பாடசாலை இன்று 11ம் தரம் வரை கற்பிக்கப்படும் பாடசாலையாக வளர்ச்சி கண்டுள்ளது. முன்பு 6ம் வகுப்பிலிருந்து புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரிக்கு நடந்து சென்று கல்வி கற்ற நாங்கள் இன்று 12ம் வகுப்புக்கு கல்வி கற்கவே எமது பிள்ளைகளை புத்தூருக்கு அனுப்பும் பேறைப் பெற்றிருக்கின்றோம்.

பல கல்விமான்களை உருவாக்கிய எமது பாடசாலை மாவட்ட மட்டத்திலும் மாகாண மட்டத்திலும் கல்வித்துறையிலும் விளையாட்டுத் துறையிலும் பல சிறப்புக்களைப் பெற்றுச் சாதனைகள் பல படைத்திருக்கின்றது. இவை தொடர வேண்டும்.

போக்குவரத்து வசதிகள் மற்றும் ஏனைய வசதிகள் குறைந்த எமது கிராமத்தில் கடமையாற்றுகின்ற ஆசிரியர்களின் அர்ப்பணிப்புடன் கூடிய சேவையே எமது பாடசாலையின் வளர்ச்சிக்கு மூல காரணம். இந்த நூற்றாண்டு நிறைவுக்காலத்தில் அவர்களைப் பாராட்டவும் போற்றவும் நாம் கடமைப்பட்டுள்ளோம்.

தனது கல்விச் சேவையில் நூற்றாண்டைக் கண்ட எமது பாடசாலை மேலும் மேலும் வளர்ச்சி பெற்று பலநூறு ஆண்டுகள் அதன் சேவை தொடர வாழ்த்துகின்றேன்.

**திரு.மா.இரத்தினசிங்கம்,**
**தலைவர்,**
**கிராம அபிவிருத்திச் சங்கம்,**
**விவசாயிகள் சம்மேளனம்,**
**வாதரவத்தை.**



# பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளரிடமிருந்து...

எமது கிராமத்தில் அமைந்துள்ள யா/வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயம் 100 ஆவது ஆண்டில் கால் பதித்து நிற்பதை எண்ணி நாம் அனைவரும் மனமகிழ்வடைவதோடு பெருமிதம் கொள்கின்றோம். இவ்வேளையில் பாடசாலைச் சமூகத்தினர் அனைவருக்கும் இம்மலர் வாயிலாக நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நூறாண்டுகளாக எமது கிராமத்தில் பல்வேறு சிரமங்களையும் பாரிய சவால்களையும் எதிர்கொண்ட போதும் கல்விப் பணியில் தளர்வடையாது அர்ப்பணிப்போடு உழைத்து பாடசாலையை வளர்த்தெடுத்த கடந்த கால அதிபர்கள் ஆசிரியர்களை இவ்வேளையில் நன்றியுடன் நினைவு கூறுகின்றேன்.

மேலும் இப் பாடசாலையை உன்னத நிலைக்கு உயர்த்திச் செல்லும் நோக்கோடு இன்று மிகுந்த அர்ப்பணிப்போடு உழைத்து வரும் அதிபர், ஆசிரியர்கள் அனைவரையும் நன்றியுடன் வாழ்த்துகின்றேன்.

எதிர்காலத்தில் இப்பாடசாலையை வளம்மிக்க பாடசாலையாக மாற்ற வேண்டும் அதன் அவசிய தேவைகள் அனைத்தும் நிறைவேற்றப்படல் வேண்டும். அதற்காக பெற்றோர்களும் பழைய மாணவர்களும் குறிப்பாக புலம் பெயர் நாடுகளில் வசித்து வரும் பழைய மாணவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து உழைக்க, உதவ முன்வரவேண்டும். இதுவே எமது கிராமத்துக்கு நாம் செய்யும் புனிதப்பணியாக அமையும்

"அனைவருக்கும் நூற்றாண்டு வாழ்த்துக்கள்"

திரு.க.சுந்தரவேல்,
பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர்,
உபதவிசாளர் வலிகிழக்கு மத்தியஸ்த சபை.

## பழைய மாணவர் சங்கத்தின்
## வாழ்த்துச் செய்தி

யா/வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயத்தின் அகவை நூறில் வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றது எமது சங்கம். வாதரவத்தைப் பிரதேசத்தின் ஏக அன்னையாக, அறிவாலயமாக கல்விப் பணியாற்றியமையானது பாராட்டப்பட வேண்டியது. எத்தனையோ மாணவர்களின் அறியாமையை நீக்கி ஒளி விட்டுப் பிரகாசிக்கும் அன்னை இந்தக் கிராமத்தின் கலங்கரை விளக்கென்றால் அது மிகையாகாது. எத்தனையோ பல அறிஞர்களையும் கல்விமான்களையும் பிரசவித்து பலரதும் வாழ்வில் ஒளியூட்டி எட்டுத்திக்கும் அவர்களது நாமம் நிலைத்து நிற்பதை யாவரும் அறிவர். பாடச் செயற்பாடுகள், இணைப்பாடச் செயற்பாடுகள் என்ற வகையில் பல பிரபல பாடசாலைகளுக்கு சளைத்தவர்கள் நாமல்லர் என்ற விதமாக இவ் அன்னையின் செல்வங்கள் செயற்படுவது பெருமை தரும் விடயமாகும்.

பௌதீக, மனித வளம் மற்றும் நிதி ரீதியான வளங்கள் வரையறையாக இருந்த காலம் முதலே கல்விப் பாரம்பரியம் உயர்நிலையில் இருந்து வருவது பாராட்டப்பட வேண்டியதாகும். காலத்துக்கு காலம் அர்ப்பணிப்பான சேவையை ஆற்றி வரும்அதிபர், ஆசிரியர்களைப் பாராட்டாமல் இருக்க முடியாது. ஏனைய பாடசாலைகளுடன் போட்டி போடும் அளவுக்கு இந்தப் பாடசாலையின் செயற்பாடு அமைந்துள்ளது. கோப்பாய் பிரதேசத்தில் மட்டுமல்ல யாழ்ப்பாண மாவட்டத்திலேயே இப் பாடசாலையின் புகழைப்பற்றிப் பேசாதவர்கள் யாரும் இருக்க முடியாது.

பழைய மாணவர்கள் பலர் உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் வாழ்ந்து வருகின்றனர். கடந்த காலங்களில் அவர்களின் பங்களிப்புகள் அன்னைக்கு அவ்வளவு கிடைக்கத்தவறியுள்ள போதிலும் நூற்றாண்டு காலத்தில் பலரதும் ஒத்தழைப்புகள் அன்னையின் எதிர்கால சுபீட்சத்துக்குப் பறைசாற்றுவதாக அமைகின்றது. திரு.இ.தயாபரன், திரு.பா.கணேசலிங்கம், திரு.செ.சிவனேசராசா, திரு.க.தவராசா, திரு.கு.கானமூர்த்தி, திரு.கு.பாஸ்கரமூர்த்தி, திருமதி.ந.சத்தியலோஜினி, திருமதி.இந்திரக்கரசி, திருமதி. நந்தினி, அமரர்ச.கிருஸ்ணபிள்ளையின் ஞாபகார்த்தமாக அவரது புதல்வர்கள் என பலரும் வெளிநாடுகளில் இருந்து தமது நிதி

ரீதியான பங்களிப்புக்களை இதுவரை நல்கியுள்ள போதும் ஏனையவர்களும் காலக்கிரமத்தில் தங்களின் பங்களிப்புக்களை மேற்கொள்வதாக உறுதி மொழி தந்துள்ளனர்.

பாடசாலையின் வளங்கள் அதிகரிக்கப்பட்டு கற்றல், இணைப்பாடச் செயற்பாடுகள் மேலும் மெருகூட்டப்பட்டு அன்னையின் வளர்ச்சிக்குப் பக்க பலமாகச் செயற்படுவதே எமது சங்கத்தின் நோக்கம். அது மட்டுமல்ல உயர்கல்வி பெறும் எம் மாணவர்களுக்கான புலமைப்பரிசில் திட்டமொன்றையும் காலவோட்டத்தில் நடைமுறைப்படுத்த உத்தேசித்துள்ளோம். இதுவரை காலமும் பாடசாலையின் கிழக்குப் புறமாக அமைந்த காணி சர்ச்சை நிலையிலேயே காணப்பட்டது. நூற்றாண்டு காலத்தில் அக்காணியும் அன்னைக்கு உரியதாக எல்லைப்படுத்தப்பட்டுள்ளதும் மகிழ்ச்சி தரும் விடயமாக அமையப் பெற்றுள்ளது. அன்னைக்கு எடுக்கும் விழா வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது என்பதால் சிறப்பாகவும், இனிதாகவும் அமைந்து அன்னையவள் புகழ் பரப்ப எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

நன்றி

**பழைய மாணவர் சங்கம்,**
**யா/வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயம்,**
**புத்தூர்.**

## வித்தியாலயத்தை வழி நடாத்திய அதிபர்கள்

1. திரு. வல்லிபுரம் (கொட்டடி) 1910 - முதல் தலைமை ஆசிரியர்
2. திரு. N.A.இராமலிங்கம் - 1931
3. திரு. S.தம்பித்துரை உரிய காலப்பகுதியை
4. திரு. S.சின்னப்பு (1944) உறுதிப் படுத்த முடியவில்லை
5. திரு. J.K.சிவப்பிரகாசம் - 13.12.1955
6. திரு. வே.சின்னத்தம்பி - 1956.01.13 - 31.08.1964
7. திரு. த.கந்தசாமி - 1964.09.01 - 31.05.1965
   (பதில் தலைமை ஆசிரியர்)
8. திரு. சி.கந்தசாமி - 1965.06.01 - 30.06.1970
9. திரு. வீ.இளையதம்பி - 1970.07.01 - 31.12.1970
   (பதில் தலைமை ஆசிரியர்)
10. திரு. த.கந்தசாமி - 1971.01.01 - 30.07.1971
    (பதில் தலைமை ஆசிரியர்)
11. திரு. க.இராசதுரை - 1971.08.01 - 31.05.1979
    (அதிபர்)
12. திரு. நா.அருளம்பலம் 1979.06.01 - 07.02.1983
    (பதில் அதிபர்)
13. திரு. ச.குமாரசாமி - 1983.02.08 - 11.05.1983
    (பதில் அதிபர்)
14. திரு. சு.முத்துக்குமாரசுவாமி - 1983.05.12 - 06.08.1990
    (அதிபர் சேவை)
15. திரு. சண்முகரட்ணம் - 1990.08.07 - 09.05.1991
    (அதிபர் சேவை)
16. திரு. S. சிவலிங்கராசா - 1991.05.10 - 21.02.2002
    (அதிபர் சேவை)
17. திரு. கா. தருமரத்தினம் - 2002.02.22 - 06.07.2009
    (அதிபர் சேவை)
18. திரு. யோ.அ. தவநாயகம் - 2009.07.07 - இன்று வரை
    (அதிபர் சேவை)

# முன்னாள் அதிபர்கள்

1. திரு. வல்லிபுரம் (கொட்டடி) 1910 - முதல் தலைமை ஆசிரியர்
2. திரு. N.A.இராமலிங்கம் - 1931
3. திரு. S.தம்பித்துரை உரிய காலப்பகுதியை
4. திரு. S.சின்னப்பு (1944) உறுதிப் படுத்த முடியவில்லை
5. திரு. J.K.சிவப்பிரகாசம் - 13.12.1955
6. திரு. வே.சின்னத்தம்பி - 1956.01.13 - 31.08.1964
7. திரு. த.கந்தசாமி - 1964.09.01 - 31.05.1965 (பதில் தலைமை ஆசிரியர்)
8. திரு. சி.கந்தசாமி - 1965.06.01 - 30.06.1970
9. திரு. வீ.இளையதம்பி - 1970.07.01 - 31.12.1970 (பதில் தலைமை ஆசிரியர்)
10. திரு. த.கந்தசாமி - 1971.01.01 - 30.07.1971 (பதில் தலைமை ஆசிரியர்)



திரு. க.இராசதுரை
1971.08.01 - 31.05.1979
(அதிபர்)



திரு. நா.அருளம்பலம்
1979.06.01 - 07.02.1983
(பதில் அதிபர்)



திரு. ச.குமாரசாமி
1983.02.08 - 11.05.1983
(பதில் அதிபர்)



திரு. சு.முத்துக்குமாரசுவாமி
1983.05.12 - 06.08.1990
(அதிபர் சேவை)



திரு. S.சண்முகரட்ணம்
1990.08.07 - 09.05.1991
(அதிபர் சேவை)



திரு. S. சிவலிங்கராசா
1991.05.10 - 21.02.2002
(அதிபர் சேவை)



திரு. கா. தருமரத்தினம்
2002.02.22 - 06.07.2009
(அதிபர் சேவை)




## J/Vatharawattai Vigneswara Vidyalayam Staff - 2010

**Seated : Mr.P.Paramsothy, Mr.K.Seyon, Mr.K.Kirubakaramoorthy, Mr.A.Thavanayayam(Principal)**
**(L-R) Mr.M.Perinpamoorthy, Mr.R.Chandraraj, Mr.S.Ponsivanesan.**

**Standing : Mr.T.Murugaiya, Mr.T.Sayanthan, Mrs.Jamalda Jebaratnathas,**
**1st row(L-R) Mrs.sathyabama Thavakumar, Miss.Vithya Kumarasamy, Miss.Kalasini Sinnarajah,**
**Mrs.Elakkunadevi Kanagalingam,Mr.R.Kokulan.**

**Standing : Mr.N.Sivakaran, Mr.A.Sivasutharshan, Mr.S.Indrakumar, Mr.P.Piratheepan,**
**2nd row(L-R) Mr.T.Jeevananthan, Mr.S.Ravichandran, Mr.K.Kirubakaran, Mr.K.Saravaneswaran.**

# யா/வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயம்

## ஆரம்பமும் வளர்ச்சியும் – ஒரு நோக்கு

திரு.J.A தவநாயகம்
அதிபர்
யா/வாதரவத்தை விக்கினேஸ்வரா வித்தியாலயம்.

**பிரதேச அமைவு**

யாழ்ப்பாணக் குடா நாட்டின் வலி கிழக்குப் பெருநிலப் பிரதேசத்தின் மத்தியிலுள்ள புத்தூரின் கிழக்குப் புறத்தே தொலைதூரத்தில் கடல்நீர்க் களப்புக்களும், வறள் நிலப்பரப்பும் கொண்ட குக்கிரமமாக வாதரவத்தைக் கிராமம் அமைந்துள்ளது.

J/ 280 கிராம சேவகர் பிரிவு முழுமையாக இக் கிராமத்தை உள்ளடக்குகின்றது. வாதரவத்தைக் கிராமம் வாதரவத்தை, பெரியபொக்கணை, வீரவாணி என மூன்று பகுதிகளை உள்ளடக்கியதாகும். இம் மூன்று குடியிருப்புப் பகுதிகளையும் பாதைகள் இணைக்கின்ற போதும் களப்புக்கள் பிரித்து நிற்கின்றன. மாரிகாலத்தில் கடல்களாகக் காட்சி தரும் களப்புக்கள் கோடை காலத்தில் வற்றி வரண்டு வெடித்துக் சிதறிக் காணப்படுவதுடன் பாதசாரிகளின் குறுக்குப் பாதைகளாகவும் விளங்குகின்றன.

வாதரவத்தை, பெரிய பொக்கணை, வீரவாணி ஆகிய மூன்று பகுதிகளையும் உள்ளடக்கியதாக இப்பிரதேசத்தில் ஏறத்தாழ 300 குடும்பங்களே இன்று வசிக்கின்றன. இப்பிரதேசத்தின் பொருளாதாரம் சார்ந்த காரணிகளின் தாக்கங்களும், கடந்த கால அசாதாரண நிலைமைகளும் இப்பிரதேச மக்களின் வெளியேற்றத்துக்கு காரணமாக அமைந்து விட்டன. வாதரவத்தை, வீரவாணி, பெரியபொக்கணை ஆகிய மூன்று பகுதிகளையும் உள்ளடக்கிய பிரதேசத்தினைச் சார்ந்ததாக விளங்கும் ஓரே ஒரு பாடசாலையாக வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயம் அமைந்துள்ளது. நூற்றாண்டு காலம் தனித்துவமாக கல்விப் பணியாற்றிய பெருமையோடு இன்று மிளிர்ந்து நிற்கும் கலைக்கூடமாக இது திகழ்கின்றது.

**பாடசாலையின் அறிமுகம்**

க.பொ.த.சாதாரண தரம் வரையான வகுப்புக்களைக் கொண்ட வகை II தரத்தையுடைய பாடசாலையாக இது விளங்குகின்றது. இவ் வித்தியாலயம் தனது நூறாண்டு கால கல்விப் பயணத்தில் பல்வேறு சாதனைகளுக்கூடாக தடம் பதித்து வளர்ந்து வளமிக்க பாடசாலைகளின் மத்தியில் தனித்துவம் மிக்கதாக இன்று வரை திழ்ந்து வருகின்றது.

க.பொ.த. சாதாரணப் பரீட்சையில் வருடாந்தம் கணிசமான எண்ணிக்கையானோர் உயர்தரம் கற்கும் தகுதி பெற்று வெளியேறுகின்றனர். அது மாத்திரமன்றி பல்வேறு ஆற்றல்களில் தம்மை முன்னிலைப்படுத்துபவர்களாக இம்மாணவர்கள் விளங்குகின்றனர். கோட்டமட்டம், வலயமட்டம், மாகாணமட்டத்திலான பல்வேறு போட்டிகளில் தமது திறமைகளை இன்றும் வெளிக்காட்டி நிற்கின்றனர்.

**வித்தியாலயத்தின் ஆரம்பம்**

இலங்கையின் பாடசாலைகளின் வரலாற்றை நோக்கின் பெரும்பாலும் அவை தனிநபர்களின் முயற்சியால் அன்றேல் பல்வேறு சமய நிறுவனங்களின் ஏற்பாட்டினால் தோற்றுவிக்கப்பட்டமையை அறிய முடியும். ஆரம்பத்தில் திண்ணைப் பள்ளிக் கூடங்களாக, பிரிவேனக்களாக, மத்ரஸாக்களாக இயங்கியவை பல பின்னாளில் பாடசாலைகளாக பரிணமித்துள்ளன. மேலைத்தேய சமய நிறுவனங்கள் சுதேச சமய நிறுவனங்கள் என்றவாறு பல்வேறு சமயம்சார் நிறுவனங்கள் பாடசாலைகளைத் தோற்றுவித்து கல்விப் பணியாற்ற விளைந்துள்ளன. இதுவே இலங்கையின் பாடசாலைக் கல்வியின் ஆரம்பமாகவும் அமைந்தது. அந்த வகையில் வாதரவத்தைப் பிரதேசத்தில் 1910 ஆம் ஆண்டில் மெதடிஷ்த திருச்சபையினால் ஒரு கல்விக் கூடம் ஆரம்பிக்கப்பட்டது.ஆயிரத்து எண்ணூறுகளின் நடுப்பகுதியில் புத்தூரில் கால்பதித்து புத்தூர் மெதடிஸ்த மிஷன் தென்மராட்சிப் பிரதேசத்திற்கான போக்குவரத்து மார்க்கத்திலிருந்த வாதரவத்தைப் பிரதேசத்தில் ஒரு பாடசாலையை ஆரம்பிக்க விழைந்திருக்கின்றது. ஓலைக்கொட்டிலில் ஆரம்ப வகுப்புக்களுடன் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை வாதரவத்தை மெதடிஸ்த மிஷன் தமிழ் கலவன் பாடசாலை(Vatharawathai M.M.T.M School) என அழைக்கப்பட்டது. இப்பாடசாலையின் முதல் அதிபராக யாழ் கொட்டடியைச் சேர்ந்த வல்லிபுரம் என்பவரும் ஆசிரியராக அவர் மனைவியுமே பணியாற்றி வந்தனர்.

1910 ஆம் ஆண்டில் மெதடிஸ்த மிஷன் இப்பாடசாலையை ஆரம்பிப்பதற்கு முன்னதாகவே இப்பிரதேசத்தில் கல்வித் தேவை உணரப்பட்டுள்ளதை அறியமுடிகின்றது. வாதரவத்தை ஊரவரான திருவாளர் ஐயம்பிள்ளை வல்லிபுரம் என்பவரால் ஊர்ப்பிள்ளைகளுக்கு திண்ணைப் பள்ளிக் கூடத்தில் எண் எழுத்து என்பன கற்பிக்கப்பட்டு வந்ததாக அறிய முடிகின்றது. இத்திண்ணைப் பள்ளிக்கூடமே பின்னாளில் மெதடிஸ்தமிஸன் பாடசாலைக்கான அடித்தளமாக அமைந்தது எனவும் உணரலாம்.

**அரச பாடசாலையாக மாற்றப்பட்டமை**

பல்வேறு சமய நிறுவனங்களால் நிரவகிக்கப்பட்டு வந்த பாடசாலைகள் பலவும் இலங்கையில் ஆட்சியிலமர்ந்த அரசாங்கத்தின் கல்விக் கொள்கைகளுக்கு அமைவாக அரசபாடசாலைகளாக பொறுப்பேற்கப்பட்டன.

1960 களின் முற்பகுதியில் நாடெங்கிலும் பாடசாலைகள் சமய நிறுவனங்களிடமிருந்து அரசாங்கத்தால் சுவிகரிக்கப்பட்டன. அந்த வகையில் 11.06.1962 இல் வாதரவத்தை மெதடிஸ்த மிஸன் தமிழ் கலவன் பாடசாலை (J/ Vatharawatthai M.M.T.M.School) அரசாங்கத்தால் சுவீகரிக்கப்பட்டது. இதன் மூலம் அரை நூற்றாண்டுக்கு மேலாக மெதடிஷ்த மிஷனால் நிருவகிக்கப்பட்டு வந்த இப்பாடசாலை அரச பாடசாலையாக மாறியது.

அரசபாடசாலையாக மாறிய பின் பாடசாலையை மேம்படுத்துவதற்கான தேவைகளில் விசேட கவனம் செலுத்தப்பட்டது.அதுவரை ஓலைக் கொட்டில்களில் இயங்கி வந்த இப்பாடசாலைக்கு நிரந்தர கட்டடம் ஒன்றைக் கட்டுவதற்கான

தேவை உணரப்பட்டது. அந்தவகையில் அரசாங்கத்தினால் 930 சதுர அடி விஸ்தீரணம் கொண்ட நிரந்தரக் கட்டடம் ஒன்று அமைக்கப்பட்டது. இதுவே இப்பாடசாலையின் ஆரம்பக் கட்டடமாக அமைந்தது. பின்னாளில் 1970 களில் வேறு இருபுதிய கட்டடங்கள் கோப்பாய் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் அமரர் சி.கதிரவேற்பிள்ளை அவர்களின் பெருமுயற்சியினால் நிர்மாணிக்கப்பட்டது. அன்னாரை பாடசாலைச் சமுகம் இன்று நன்றியுடன் இந்நாளில் நிறைவு கூருகின்றது.

**பெயர்மாற்றம் செய்யப்பட்டமை :-**

யா/வாதரவத்தை மெதடிஷத மிஸன் தமிழ் கலவன் பாடசாலை என்ற பெயருடன் இயங்கி வந்த இப்பாடசாலை 01.01.1966 முதல் யா/வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயம் என்ற தற்போதைய பெயரைத் தனதாக்கிக் கொண்டது. சமய நிறுவனங்களால் நிருவகிக்கப்பட்டு வந்த பல பாடசாலைகள் அரசாங்கத்தால் சுவீகரிக்கப்பட்டு பல தசாப்தங்களைக் கடந்தும் இன்றுவரை ஆரம்பகாலப் பெயர்களிலிலேயே இயங்கி வருகின்றமையை பல பிரதேசங்களிலும் காணமுடியும். எனினும் வாதரவத்தை மெதடிஸ்த மிஸன் ஆரம்பப்பாடசாலை என்ற பெயர் தொடர்ந்து நிலைக்காமல் மாற்றம் பெற்றதற்கு எத்தகைய நிலைமை காரணமாயிற்று என்பது நோக்கத்தக்கது. மெதடிஸ்த மிஸன் பாடசாலையை நிருவகித்து வந்த போதிலும் சமயப் பிரச்சாரத்தினை மேற்கொள்ளுமளவுக்கு போதுமான கவனம் செலுத்தவில்லையோ அன்றேல் பிரதேச மக்கள் தமது சுதேச மதத்தில் பற்றுறுதிமிக்கவர்களாக நின்று தமது தனித்துவத்தை பேணி வந்தனர் என்றோ எண்ணத்தோன்றுகின்றது. அதன் விளைவாகவோ, என்னவோ பின்னாளில் தமதுகுல தெய்வமான பிள்ளையார் பெயரினை பாடசாலைக்குச் சூட்டி வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயம் என மாற்றிக் கொண்டனர் என நம்பலாம்.

**இடை நிலை வகுப்புக்களின் ஆரம்பம்.**

ஆரம்பப் பாடசாலையாக இயங்கி வந்த பாடசாலை 1970 இல் இடைநிலை வகுப்புக்களை ஆரம்பித்துக் கொண்டது. 1970களின் ஆரம்பத்தில் ஆரம்பமான இடைநிலை வகுப்புகள் படிப்படியாக வளர்ந்து 1974 இல் முதற் தடவையாக க.பொ.த.(சா/த)ப் தரப் பரீட்சைக்குத் தோற்றும் நிலையை அடைந்தது. தரம் 9 இல் நடைபெற்ற தேசிய கல்வி பொதுத் தராதரப் (NCGE) தொடர்ந்து இன்றுவரை க.பொ.த. சா.தரப் பரீட்சைக்கு (G.C.E O/L) தோற்றி வருகின்றனர்.

**கஸ்டப்பிரதேசப் பாடசாலை.**

வாதரவத்தைப் பிரதேசம் சாதாரண வசதி வாய்ப்புக்களற்ற பிரதேசம் என்றவகையில் அதிகஷ்ட பிரதேசம் என்ற பிரகடனம் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. மேலதிக அலவென்ஸ் 2500/= வழங்கப்பட்டு இங்கு கற்பிக்கப்படும் ஆசிரியர்கள் ஊக்குவிக்கப்படுகின்றனர். இந்நடைமுறை தொண்ணூறுகளின் பிற்பகுதியிலிருந்தே நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

யாழ்ப்பாணம் பருத்தித்துறை பிரதான வீதியிலிருந்து 5km தூரத்தே கிழக்குப்புறத்தில் போக்குவரத்து வாய்ப்புக்கள் எதுவும் அற்று குன்றும் குழியும், சேறும் சகதியுமான வீதியும், மாரிகாலத்தில் கடலுக்கும் நிலத்துக்கும் வேறுபாடின்றி வெள்ளக் காடாய் காட்சியளிக்கும் நிலைமைகள், விவசாயத்துக்குப் பொருத்தமற்ற உவர்க்கழி, மண்ணைவாரி கண்களில் இறைக்கும் பரந்த வெளிக்காற்று சுயதொழில் வாய்ப்பின்றி கூலித் தொழிலாளர்களாய் பணியாற்றும் வறுமைக் கோட்டைத் தாண்டமுடியாத சமூகம், குடியிருக்கக் கையேந்தி நிற்கும் பரிதாபநிலை இவையனைத்தும் இணைந்து கஸ்டப்பிரதேசம் என்ற முத்திரையை இப்பிரதேசத்துக்கு குத்தியதால் இப்பாடசாலை கஸ்டப்பிரதேசம் பாடசாலை எனும் நாமத்தினைப் பெற்றுக் கொண்டது. எனினும் இங்கு கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு ஊக்குவிப்புக்களோ, வேறு வசதி வாய்ப்புக்களோ வழங்கப்பட்டதாக இல்லை. அதேவேளை நகர்ப்புறப் பாடசாலையிலிருந்து இப்பாடசாலைக்கு ஆசிரியர்களுக்கு தண்டனை இடமாற்றம் வழங்கும் நிலை நீண்டகாலமாக இருந்து வந்தது.. இந்நடைமுறை மெதடிஸ்த மிஸன் காலத்திலேயே இருந்து வந்ததாக அறிய முடிகின்றது.

தண்டனை இடமாற்றம் வழங்கும் பாடசாலையாகக் கருதப்பட்டு வந்ததனால் ஆசிரிய பற்றாக்குறை தொடர்ந்து நிலவி வந்தது, இருப்பினும் தொண்ணூறுகளின் பிற்பகுதிகளிலிருந்து கஸ்டப்பிரதேச, அதிர்கஷ்டப்பிரதேச பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு விசேட கொடுப்பனவு வழங்கும் நடைமுறை அமுலுக்கு வந்தமை இப்பாடசாலைக்கு பெரும் வரப்பிரசாதமாக அமைந்தது. இப்பாடசாலை அதிகஷ்டப் பிரதேச பாடசாலையாகக் கருதப்பட்டு ரூபா 2500/= விசேட கொடுப்பனவு மாதாந்தம் ஆசிரியர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வருகின்றது. இந்நடைமுறை ஆசிரியர் பற்றாக்குறைக்கு ஓர்தீர்வாகவும், ஆசியர்களுக்கான ஊக்குவிப்பாகவும் இன்று அமைந்துள்ளது சிறப்பானதாகும். இதன் காரணமாக இன்று ஆசிரியபற்றாக்குறை என்பது மிகமிக குறைந்தததுடன் தண்டனை இடமாற்ற நியமனம் பெறும் நிலையும் அறவே அற்றுப்போய்விட்டது.

**அதிபர்கள் வரிசையில் –**

1910 இல் மெதடிஷ்தமிஸன் ஆரம்பபாடசாலை என்ற பெயரில் இப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட வேளையில் முதல் அதிபராகப் பொறுப்பேற்றவர் யாழ்ப்பாணம் கொட்டடியைச் சேர்ந்த வல்லிபுரம் என்பவராவார்.

1931 இல் இப்பாடசாலையில் ஆரம்பக் கல்வியைக் கற்றவரான வாதரவத்தையைச் சேர்ந்த திரு N.A.இராமலிங்கம் என்பவர் அதிபரானார். இக்காலப்பகுதியில் தரம் 5 வரை வகுப்புக்கள் நடைபெற்று வந்ததுடன் நான்கு ஆசிரியர்களும் பணியாற்றினர்.

இவரைத் தொடர்ந்து திரு.S.தம்பித்துரை, திரு.S.சின்னப்பு ஆகியோர் முறையே அதிபர்களாகக் கடமை புரிந்துள்ளனர். இக்காலப்பகுதியில் மாணவர் தொகை 75 வரை இருந்தது.

1955 இல் திரு.சு.சிவப்பிரகாசம் அதிபராகக் கடமை புரிந்தார். அவருடன் மூன்று ஆசிரியர்கள் பணியாற்றினர்.

1956 முதல் 1964 வரையான காலப்பகுதியில் திரு.வே.சின்னத்தம்பி என்பவர் மூன்று ஆசிரியர்களுடன் அதிபராகக் கடமை புரிந்தார். இவரது காலப் பகுதியிலேயே (1962 இல்) இப்பாடசாலை அரசாங்கத்தினால் பொறுப்பேற்கப்பட்டது.

இவரைத் தொடர்ந்து வாதரவத்தை ஊரவரான திருவாளர் திரு.T.கந்தசாமி அவர்கள் பதில் தலைமை ஆசிரியராக சிறிது கடமையாற்றினார்.

1965.01.06 இல் மட்டுவிலைச் சேர்ந்த திரு.S.கந்தசாமி அதிபரானார். இவரது காலத்திலேயே இப்பாடசாலை வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயம் என பெயர் மாற்றம் பெற்றது. இவர் 1970.06.30 வரைகடமையாற்றினார். இவரது காலத்திலேயே இப் பாடசாலையில் இடைநிலை வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டன.

இவரைத் தொடர்ந்து 1970.07.01முதல் 31.12.1970 வரையான காலத்தில் பதில் தலைமை ஆசிரியராக திரு.வீ.இளையதம்பி அவர்கள் கடமையாற்றினார்.

1971-1979வரை திரு.இராசதுரை என்பவர் அதிபராக கடமையாற்றினார். இவரது காலத்தில் 1975இல் தே.க.பொ.த சாதாரண தரப்(NCGE) பரீட்சைக்கு முதன் முதலாக மாணவர்கள் தோற்றினர். இக்காலப்பகுதியில் மொத்தமாக 325 மாணவர்கள் கல்வி கற்றனர். அத்துடன் இவரது காலத்தில் கோப்பாய் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் உயர்திரு கதிரவேற்பிள்ளை அவர்களின் அளப்பரிய நிதி ஒதுக்கீட்டினால் இரு கட்டிடங்கள் கட்டப்பட்டன.

1979.06.01-1983.02.07 காலப்பகுதியில் திரு.M.அருளம்பலம் அவர்களும் (1983) சிறிது காலம் வாதரவத்தை ஊரான திரு.S.குமாரசாமியும் பதில் அதிபராகக் கடமையாற்றினார்.

12.05.1983 முதல் இப்பாடசாலையின் அதிபராக சு.முத்துக்குமாரசுவாமி அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டார் க.பொ.த சா.தரம் வரையான வகுப்புக்களைக் கொண்டியங்கிய போதும் ஐந்து ஆசிரியர்களே அவ்வேளையில் கடமையாற்றி வந்தனர். பிரதேசத்தின் அமைவிடம் சார்ந்த பிரச்சினைகளே ஆசிரிய பற்றாக்குறையில் செல்வாக்குச் செலுத்தும் முக்கிய காரணிகளாக அமைந்தன. அரசாங்கம் கஸ்டப் பிரதேச பாடசாலைகளை இனங்கண்டு அங்கீகரித்தமையும் ஆசிரிய சேவை நியமனத்தில் கஸ்டப்பிரதேச சேவையை நிர்ப்பந்தித்தமையும் இவ்வாறான பிரதேசங்களின் ஆசிரிய பற்றாக்குறைக்கு ஓரளவு தீர்வு காண உதவியது. அந்த வகையில் இக்கால வேளையில் இப்பாடசாலையும் கஸ்டப்பிரதேச பாடசாலையாகக் கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்டமையின் காரணமாக ஆசிரியர் எண்ணிக்கை 14 ஆக உயர்ந்தது. அத்துடன் அதிபர் திரு.சு.முத்துக்குமாரசுவாமியின் காலத்திலேயே முதன்முதலாக இல்ல மெய்வல்லுநர் போட்டியும் நடாத்தப்பட்டது. 1990 ஆகஸ்ட் 6ம் திகதி வரை அதிபராகக் கடமையாற்றிய திரு.சு.முத்துக்குமாரசுவாமி அவர்கள் இடமாற்றம் பெற்றுச் செல்ல திரு.நா.சண்முகரட்ணம் அவர்கள் புதிய அதிபராகப் பொறுப்பேற்றார். 1991.05.09ம் திகதி வரை சண்முகரட்ணம் அவர்கள் அதிபராக கடமையாற்றினார்.

10.05.1991இல் திரு.S.சிவலிங்கராஜா அவர்கள் அதிபராகக் கடமையேற்று 21.02.2002 வரை கடமையாற்றினார்.

இவரைத் தொடர்ந்து 2002.06.22 முதல் 2009 யூலை 06ம் திகதி வரை திரு.கா தர்மரத்தினம் அவர்கள் அதிபராக கடமையாற்றினார்.

2009.07.07இல் அதிபராகப் பொறுப்பேற்ற திரு.J.A.தவநாயகம் அவர்கள் பாடசாலையின் பணியாற்றி வருகின்றார்.

##### பௌதிக வள விருத்தி

ஓலைக் கொட்டிலில் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை 1962ல் அரசாங்கத்தால் பொறுப்பேற்கப்பட்ட பின் கட்டட வசதிகளைப் பெற்றுக் கொண்டது. 930 சதுர அடி விஸ்தீரணம் கொண்ட கட்டிடம் ஒன்று அரச செலவில் முதன் முதலாக அமைக்கப்பட்டது. பின்னர் 1970களில் மேலும் கட்டிடங்கள் அமைக்கப்பட்டன. இப்பாடசாலைத் தேவைக்கேற்ப கட்டிட வசதிகள் ஏற்படுத்தப்பட்டு இன்று நான்கு கட்டிடத் தொகுதிகளையும் தனியான கட்டிடத்தையும் கொண்டுள்ளது. அத்துடன் கடந்த வருடத்தின் பிற்பகுதியிலும் இவ்வாண்டிலும் யுனிசெப் உதவித்திட்டத்தின் மூலம் தண்ணீர் தாங்கியும், உலக உணவுத்திட்டத்தின் மூலம் சமையலறையும் EKSP வேலைத்திட்டத்தின் மூலம் கனனிக் கூடமும் அமைக்கப்பட்டுள்ளது. அத்துடன் 1974முதல் அரசாங்கத்தால் சுவீகரிக்கப்பட்ட பாடசாலைக்கு கிழக்கு புறத்தேயுள்ள காணிகள் பழைய மாணவ சங்கத்தின் ஒத்துழைப்புடன் பாடசாலைக் காணியுடன் இணைத்து வேலியிடப்பட்டுள்ளது. விளையாட்டு மைதானத்திற்கான காணியையும் பெற்றுக் கொள்வதற்கான வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அத்துடன் பெண்களுக்கான மலசல கூடம் நிக்கோட் உதவியுடன் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ளது. ஆண்களுக்கான மலசல கூடம் யுனிசெவ் உதவித் திட்டத்தின் கீழ் தற்போது அமைக்கப்பட்டு வருகின்றது. தனியான விஞ்ஞான ஆய்வு கூடத்திற்கான கட்டுமாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

##### பெறுபேறுகளும் சாதனைகளும்

தேசிய பரீட்சைகள், கோட்ட, வலய, மாகாண மட்டப் போட்டிகள் மற்றும் பல்வேறு போட்டிகளில் இப்பாடசாலை மாணவர்கள் சற்றும் சளைத்தவர்களல்லர் என்பதை பல்வேறு சந்தர்ப்பங்களில் வெளிக்காட்டியுள்ளனர்.

1975முதல் க.பொ.த சா.தரப் பரீட்சைக்கு தோற்றிவருவதுடன் கணிசமான எண்ணிக்கையினர் வருடாந்தம் உயர்தரம் கற்கும் தகுதியையும் பெற்று வருகின்றனர். அத்துடன் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 1991, 1997ம் ஆண்டுகளில் தலா ஒருவர் வெட்டுப்புள்ளிக்கு உயர்வான புள்ளிகளைப் பெற்றுக் கொண்டனர்.

2000ஆம் ஆண்டுகளில் க.பொ.தசா.தரப் பெறுபேறுகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றது. 75%த்தினர் க.பொ.த உயர்தரத்திற்கும் தகைமை பெற்றதுடன் விஞ்ஞானம், தமிழ்மொழி, வரலாறு, சித்திரம், சங்கீதம் ஆகிய பாடங்களில் 100% சித்தியையும் பெற முடிந்தது.

விளையாட்டு போட்டிகளில் குறிப்பிடத்தக்க சாதனைகளை இம் மாணவர்கள் நிகழ்த்தி வருகின்றனர். 2008,2009,2010களில் மாகாண மட்டப் போட்டிகளில் இம்மாணவர்கள் தங்கப் பதக்கத்தினைவென்று தேசிய மட்டப் போட்டிகளில் பங்கு பற்றும் வாய்ப்பினைப் பெற்றுள்ளனர். இவ்வாண்டில் வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையேயான விளையாட்டுப் போட்டியில் எமது

பாடசாலையின் இரு மாணவர்கள் 11 வயது பெண்கள் பிரிவில் உயரம் பாய்தலிலும் 19 வயதின் கீழ் ஆண்கள் பிரிவில் 1500மீற்றர் ஓட்டத்திலும் தங்கப்பதக்கத்தினை வென்றுள்ளனர். தமிழ்மொழித்தினப் போட்டிகள், ஆங்கிலதினப் போட்டிகள், சமய அறிவுப் போட்டிகள், சமூக விஞ்ஞானப் போட்டிகளில் இம் மாணவர்களும் தமது ஆற்றல்களை வெளிப்படுத்தி வருகின்றனர்.

**இடப்பெயர்வுகள்**

இப்பாடசாலை முதன் முதலாக 1945இல் இடப் பெயர்வினைச் சந்தித்தது. ஓலைக்கொட்டிலில் அமைந்திருந்த பாடசாலை எதிர்பாராத விதமாக தீக்கிரையானமையால் ஏறத்தாழ மூன்று மாதங்கள் பாடசாலை புத்தூர் மெதடிஸ்தமிஷன் பாடசாலையுடன் இணைக்கப்பட்டிருந்தது என அறியப்படுகின்றது.

பின்நாளில் 1995இல் சூரியகதிர் இராணுவ நடவடிக்கைகளின் போது தென்மராட்சி நோக்கி மக்கள் இடம்பெயர்ந்தமையால் பாடசாலையும் இடம்பெயர்ந்தது. தென்மராட்சியில் இயங்கியது. 02.10.1995இல் மூடப்பட்ட பாடசாலை 01.02.1996இல் கப்பூது ஏகாம்பரம் வித்தியாலயத்தில் இயங்கி பின் 30.05.1996 முதல் புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரியுடன் இணைந்து செயற்பட்டது. 29.01.1997 முதல் சொந்த இடத்தில் இயங்க தொடங்கியது. 2000 மேயில் ஏற்பட்ட படை நகர்வு நடவடிக்கைகளால் மீண்டும் இடப்பெயர்வு ஏற்பட்டது. 19.05.2000 அன்று பாடசாலை மூடப்பட்டு 22.05.2000 முதல் புத்தூர் சோமஸ்கந்தாவுடன் இணைக்கப்பட்டு இயங்கியது. 11.09.2000 முதல் புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயத்தில் மாலை நேரப் பாடசாலையாக இயங்கியது.

**எதிர்கால இலக்கு**

பலத்த சாவல்களுக்கு முகங்கொடுத்து விடாமுயற்சியுடன் வளர்ந்து வரும் இப்பாடசாலையின் எதிர்காலம் மேலும் மேலும் வளமானதாக அமைய வேண்டும் விளையாட்டுத் துறையை மேலும் மேலும் விருத்தியாக்கும் வகையில் பயிற்சித் தேவைகள் அவசியமாகவுள்ளது. பெருவிளையாட்டுக்களில் கால் பதிக்கும் நிலை உருவாக்கப்படல் வேண்டும். உரியவாறான பயிற்சிகள் வழங்கப்பட்டு விளையாட்டு அணிகள் தோற்றுவிக்கபடல் வேண்டும்.

மேலும் இப்பாடசாலை தூரப் பிரதேசத்தில் தனித்துள்ளது. என்ற வகையில் இப்பாடசாலையின் வசதிகள் மேம்படுத்தப்பட வேண்டும். வறிய மாணவர்களுக்கு நிறைவான கல்வியை வழங்கும் வகையில் மகா வித்தியாலயமாக இப் பாடசாலை மாற்றப்படல் வேண்டும். அத்தகைய நிலைக்கு வளர்த்தெடுக்க வேண்டிய பொறுப்பும் அவசியமும் இன்றைய காலத்தின் தேவையாக எம்முன் உள்ளது.

தேசிய பொதுப் பரீட்சைகளில் மாணவர்களின் உயர் தகைமையானது வெளிப்படும் நிலை தொடர்ந்து பேணப்பட வழிவகை செய்யப்படல் வேண்டும். வறிய மாணவர்களின் கல்வி முன்னேற்றத்துக்கு கைகொடுத்து உதவுவதற்கான புலமைப்பரிசில் வழங்கும் வசதி வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்படல் வேண்டும்.

எதிர்கால இலக்கு நோக்கிய எம் பயணத்தில் விரைந்து முன்னேற எம்மோடு பெற்றோர்கள் பழைய மாணவர்கள் நலன் விரும்பிகள் அனைவரும் ஒன்றிணைந்து உழைப்போமாக.

# யா/ வாதரவத்தை விக்கினேஸ்வரா வித்தியாலயம்
## முக்கிய வரலாற்று நிகழ்வுகள்

* 1990 - 1910 வரை திண்ணைப் பள்ளிக்கூடமாக இயங்கியது.

* 1910 இல் மெதடிஸ்த மிஸன் பொறுப்பேற்றுப் பாடசாலையைத் தொடங்கியது. ஓலைக் கொட்டிலில் வாதரவத்தை மெ.மி.த.க.பாடசாலை ஆரம்பமானது. கொட்டடி வல்லிபுரமும் அவர் மனைவியும் ஆரம்ப வகுப்புக்களுக்கு கற்பித்தனர். அவரே முதலாவது தலைமை ஆசிரியராவார்.

* 1945 இல் பாடசாலை ஓலைக் கொட்டில் தீக்கிரையானது. இந்நிலையில் மூன்று மாதங்கள் புத்தூர் மெதடிஸ்த மிஸன் பாடசாலையுடன் இணைத்துச் செயற்பட்டது.

* 1962.07.16 இல் அரசாங்கம் சுவிகரித்துக் கொண்டது. அக்காலத்தில் தலைமை ஆசிரியராக திரு.வே.சின்னத்தம்பி அவர்களும் மூன்று ஆசிரியர்களும் பணிபுரிந்தனர்.

* 930 சதுரஅடி விஸ்தீரணம் கொண்ட கட்டடம் ஒன்று அரசாங்க நிதியில் முதலில் கட்டப்பட்டது. 1964.09.02 ம் திகதி புதிய கட்டிடப் பிரவேசம் இடம்பெற்றது.

* 01.01.1966 முதல் பாடசாலைப் பெயர் வாதரவத்தை விக்கினேஸ்வரா வித்தியாலயம் எனப் பெயர் சூட்டப்பட்டது. அதுவரை ஆரம்பம் முதல் இப்பாடசாலை மெதடிஷ்த மிஸன் ஆரம்பப் பாடசாலை என்றே அழைக்கப்பட்டு வந்தது. இக்காலத்தில் மட்டுவில்லைச் சேர்ந்த திரு.சி.கந்தசாமி அதிபராகப் பணிபுரிந்தார்.

* 1972 இன் புதிய கல்வி வெள்ளை அறிக்கையுடன் தரம் 6 வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது. 1995 இல் தேசிய கல்விப் பொதுத் தராதப் பரீட்சைக்கு (N.G.E) முதற் தடவையாக மாணவர் தோற்றினர். இக்காலத்தில் திரு.க.இராசதுரை அதிபராகப் பணிபுரிந்தார். இக்காலத்தில் புதிய பாடசாலைக் கட்டடம் கட்டப்பட்டது.

* 1983.05.12 முதல் திரு.சு.முத்துக்குமாரசாமி அதிபராக நியமனம் பெற்றார். இக்காலப் பகுதியில் இப்பாடசாலை அதி கஸ்டப் பிரதேச பாடசாலையாக கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்டது.

* 02.03.1986 - முதல் முதலாக இல்ல மெய்வல்லுனர் போட்டி நடைபெற்றது. 1986 மாவட்டரீதியாக நடைபெற்ற ஆங்கில தின போட்டியில் மாணவர்கள் முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்றனர்.

* 2003.05.18 - பாடசாலை நூலகம் திறந்து வைக்கப்பட்டது.

* 2008 க.பொ.த.சா.தரணப் பரீட்சையில் தமிழ், விஞ்ஞானம், வரலாறு, சங்கீதம், சித்திரம் ஆகிய பாடங்களில் 100% சித்தியை மாணவர்கள் பெற்றதுடன் 75% மாணவர்கள் A/L தகமை பெற்றனர்.

* 2008,2009 மாகாணமட்ட விளையாட்டுப் போட்டிகளில் மாணவர்கள் இருவர் இரண்டு நிகழ்வுகளில் முதலிடம் பெற்று தேசிய போட்டிக்குத் தெரிவாகனர்.

* 2010 மாகாணமட்ட விளையாட்டுப் போட்டிகளில் இரண்டு மாணவர்கள் முதலிடம் பெற்று தேசிய போட்டிக்கு தெரிவாகினர்.

# நூற்றாண்டில் மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்கள்

* 10 ஜனவரி 2010 - யுனிசெவ் (UNISEF) அனுசரணையில் தண்ணீர் தாங்கி அமைக்கப்பட்டு பூர்த்தியாக்கப்பட்டதுடன் பாடசாலைக்குள் குழாய் நீர் விநியோகம் ஆரம்பிக்கப்பட்டது.

* 20 பெப்ரவரி 2010 - உலக உணவுத்திட்டத்தின் (W.F.P) அனுசரணையுடன் சமையற் கூடம் அமைக்கப்பட்டு பாவனைக்குட்படுத்தப்பட்டுள்ளது.

* 22 பெப்ரவரி 2010 - பாடசாலையின் நூற்றாண்டைப் பிரகடனம் செய்யும் நிகழ்வாக மரதன் ஓட்டப் போட்டி நடாத்தப்பட்டது.

* மார்ச் 2010 பாடசாலைக்கான மின் விநியோக இணைப்பு மேற்கொள்ளப்பட்டது.

* 19 மார்ச் 2010 பாடசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி நடைபெற்றது. வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி.அ.வேதநாயகம் பிரதம விருந்தினராகவும், லயன் Dr.V.தியாகராசா சிறப்பு விருந்தினரையும் கலந்து கொண்டனர்.

* 05 மே - 2010 - பாடசாலையின் கிழக்கு புறத்தேயுள்ள காணித்துண்டுகள் பழைய மாணவர் சங்கத்தின் அனுசரணையுடன் பாடசாலை காணியுடன் இணைத்து எல்லையிடப்பட்டது.

* 26 மே - 2010 - E.K.S.P திட்டத்தின் மூலம் கணினிக்கூடம் நிர்மாணிக்கப்பட்டு பயன்பாட்டுக்குரிய தாக்கப்பட்டுள்ளது.

* 22 மே - 2010 - கணித ஆண்டினைச் சிறப்பிக்கும் வகையில் கணிதப் பூங்கா செயற்பாடு தரம் - 6 - 11 வரை மேற்கொள்ளப்பட்டது.

* 16 யூன் - 2010 - அச்சுவேலி மக்கள் வங்கிக் கிளையினாரால் சிசுஉதான மாணவர் சேமிப்பு அலகு ஆரம்பிக்கப்பட்டது. இந்நிகழ்வில் மக்கள் வங்கி ஆராய்ச்சிப் பணிப்பாளர் K.U.புஸ்பகுமார அவர்கள் கலந்து சிறப்பித்தார்.

* 28 யூலை - 2010 - காலஞ் சென்ற சரவணமுத்து கிருஷ்ணப்பிள்ளை ஞாபகார்த்தமாக அன்னாரது குடும்பத்தினரால் பாடசாலைக்கு அன்பளிப்புச் செய்யப்பட்ட போட்டோ பிரதி இயந்திரம் குடும்ப உறவினரும் முன்னாள் ஆசிரியருமான திரு.சரவணமுத்து குமாராசாமி அவர்களால் அதிபரிடம் கையளிக்கப்பட்டது.

* 28 - யூலை - 2010 - மாணவர் தலைவர்களுக்கான சின்னஞ் சூட்டும் நிகழ்வு இடம் பெற்றது. பிரதம விருந்தினராக கோட்டக் கல்விப் பணிப்பாளர் திரு.சி.சித்திரவடிவேல் அவர்கள் கலந்து கொண்டார்.

* 02 - ஆகஸ்ட் - 2010 - கடந்த வருட எமது பாடசாலையில் பரீட்சையில் சித்தியடைந்து க.பொ.த.உயர் தரம் கற்றுக் கொண்டிருக்கும் நான்கு மாணவர்களுக்கு பழைய மாணவன் திரு.இ.தயாபரன் (ஜேர்மனி) அவர்களால் துவிச்சக்கரவண்டிகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

* 15 ஆகஸ்ட் - 2010 - விஞ்ஞான ஆய்வு கூடம் அமைக்கும் (40'x25') பணி ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றது.

* யுனிசெவ் உதவி மூலம் ஆண்களுக்கான மலசல கூடம் நிர்மாணிக்கும் பணிகளும்தற்போது நடைபெற்று வருகின்றது.



# என் அனுபவ எண்ணங்கள்

மா.தங்கத்துரை
(ஓய்வு பெற்ற முன்னாள்
உப அதிபர்)

பெற்றதாயும் பிறந்த பூமியும் கற்ற, கற்பித்த கூடமும் என் கிராமத்திலேயே அமைந்ததையிட்டு என்னைப் படைத்த ஆண்டவனுக்கு முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இப்பாடசாலை ஆரம்பத்தில் திண்ணைப் பள்ளியாகச் செயற்பட்டு வந்த வேளையில் மெதடிஸ்த மிஸனரியினரால் பொறுப்பேற்கப்பட்டு மெதடிஸ்த மிஸன் தமிழ் கலவன் பாடசாலை (M.M.T.School) யாக மாற்றப்பட்டதோடு தரம் 5 வரை கற்றல் செயற்பாடுகளும் நடை பெற்று வந்தது. நான் இப்பாடசாலையில் 1944 ஆம் சேர்ந்து தரம் 5 வரை கற்றேன். அன்றைய வேளையில் தற்போது கிழக்குப்புறமாகவுள்ள கட்டிடம் மாத்திரமே இருந்தது. கூரை ஓலையால் வேயப்பட்டிருந்தது அதற்குள்ளேயே ஐந்து வகுப்புக்களும் நடந்தன. அப்பொழுது ஆறு ஆசிரியர்கள் கற்பித்தார்கள். அக்கட்டிடத்துக்கு மேற்குப்புறத்தே ஆசிரிய விடுதிக் கட்டிடம் இருந்து வந்தது. இது தம்பதியர்களாக வரும் ஆசிரியர்கள் தங்கி நிற்பதற்கு வசதியாக இருந்தது. ஒரு குடும்பத்துக்குரிய இடவசதியையோ இது கொண்டிருந்தது. நான் கற்ற காலத்தில் திரு, திருமதி.குருசாமி ஆசிரிய தம்பதிகள் அவ் விடுதியில் தங்கியிருந்து கற்பித்தார்கள். இவர்கள் நுணாவிலைச் சேர்ந்தவர்கள். மோட்டார் வண்டி வைத்திருந்தார்கள், இருந்தும் திங்கள் முதல் வெள்ளி வரை இங்கேயே தங்கியிருந்தார்கள். வெள்ளி மாலை சென்று திங்கள் காலை வருவார்கள்.

மெதடிஷ்த திருச்சபையின் முகாமையின் கீழ் பாடசாலை மிகச் சிறப்பாக செயற்பட்டு வந்தது. ஆசிரியர்கள் அனைவரும் கிறிஸ்தவ மதத்தைச் சார்ந்தவர்களாகவே இருந்தனர். காலையில் மாணவர்கள் எல்லோரும் ஜெபம் செய்த பின் வகுப்பறைக்குச் செல்வார்கள். அனைத்து மாணவர்களும் சைவசமயத்தவர்களாக இருந்த போதும் கிறிஸ்தவத்தை விருப்புடன் கற்று வந்தனர். பெற்றோர்களும் எந்த வித வெறுப்புமின்றி அனுமதித்திருந்தனர். அதற்குக் காரணம் திண்ணைப் பள்ளியாக இருந்த இப்பாடசாலையை இந்த நிலைக்குக் கொண்டுவந்த மிஷனறிமாரை யாரும் வெறுக்கவுமில்லை விமர்சிப்பதுமில்லை. ஏனெனில் எழுத்தறிய உதவிய எவரும் இறைவனே என்ற எண்ணத்திலாகும்.

நான் 1944 முதல் கல்வி கற்ற காலத்தில் ஆரம்பத்தில் புத்தூரைச் சேர்ந்த திரு.சின்னப்பு ஆசிரியர் தலைமை ஆசிரியராக இருந்தார். அவர் புத்தூரிலிருந்து நடந்து வந்து நடந்து செல்வார். அவரின் பின் அச்செழுவைச் சேர்ந்த திரு.T.சிவப்பிரகாசம் அவர்கள் தலைமை ஆசிரியராகக் கடமையாற்றினார். இவர்காலத்தில் மெய்வல்லுனர் போட்டிகள் சிறப்பாக நடாத்தப்பட்டது. சரஸ்வதி, இலக்குமி, பார்வதி என இல்லங்கள் பிரிக்கப்பட்டு வருடாந்தம் விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று வந்தது. மாணவர்களின் கல்வியும் சிறப்பாக அமைந்தது. 5ம் வகுப்பிற்கான வடமாகாண ஆசிரிய சங்கத்தினால் நடாத்தப்படும் (N.P.T.A) பரீட்சையில் மாணவர்கள் 100% சித்தியடைந்தார்கள். இவ்வேளையில்5ஆம் வகுப்பினை வாதரவத்தையைச் சேர்ந்த திரு.த.கந்தசாமி ஆசிரியர் கற்பித்து

வந்தார். ஆங்கிலம் தவிர்ந்த சகல பாடங்களையும் இவரே கற்பித்தார். ஆங்கிலப் பாடத்தினை திரு.அ.நாகரத்தினம் ஆசிரியர் கற்பித்தார். திரு.த.கந்தசாமி ஆசிரியர் கற்பித்த காலத்தில் 5ஆம் வகுப்பு மாணவர்கள் கணிதம், தமிழ் ஆகிய பாடங்களில் மிகவும் கூடுதலான புள்ளிகளைப் பெற்று வந்தனர். அக்காலத்தில் தரம் 5 இற்கான புலமைப்பரிசில் பரீட்சை முறைமை அறிமுகமாகவில்லை. நானும் திரு.த.கந்தசாமி ஆசிரியரிடம் 5 ஆம் வகுப்பைக் கற்றுக் கொண்டேன். இவர் 5 ஆம் வகுப்பில் கற்பித்த பின்னம், தசம பின்னங்கள் எனக்கு S.S.C வரை உதவி புரிந்தன.

வாதரவத்தை மெ.மி.த.க.பாடசாலையில் 5ஆம் வகுப்பில் சித்தியடைந்த நான் தொடர்ந்து புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரியில் கல்வியைத் தொடர்ந்து S.S.C பரீட்சை சித்தியடைந்த பின் 1961 ஆம் ஆண்டு ஆசிரியராக நியமனத்தைப் பெற்று நுவரெலியா மாவட்டத்துக்குப் பணியாற்றச் சென்றேன். 1968 வரை இங்கு பணியாற்றினேன். யாழ்ப்பாண ஆசிரியர்களுக்கு நிறைந்த கௌரவத்தை அங்கு வழங்கினார். ஆசிரிய பயிற்சியை கொழும்புத்துறை ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் நிறைவு செய்த பின் மீண்டும் கண்டி மாவட்டத்துக்கு நியமிக்கப்பட்டேன். அங்கு எனது பணி 1983 வரை தொடர்ந்தது.

1983 ஆம் ஆண்டு இனக்கலவரம் வந்தபோது அங்கே இருக்கமுடியாத நிலை எனக்கு ஏற்பட்டது. உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்கு பெரும் சிரமப்பட்டு ஊர்வந்தடைந்தேன். எனது குடும்பம் ஊரிலேயே இருந்ததால் வசதியாக இருந்தது. அவ்வேளையில் தற்காலிக இடமாற்றமாக எனக்கு வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் பணியாற்றும் வாய்ப்புக் கிடைத்தது. அவ்வேளையில் திரு.சு.முத்துக்குமாரசாமி அவர்கள் அதிபராகக் கடமையாற்றிக் கொண்டிருந்தார். எமது ஊரைச் சேர்ந்த திரு.ச.குமாரரசாமி அவர்களும் வேறு பல வெளியூர் ஆசிரியர்களும் அப்போது கடமையாற்றி வந்தனர். அதிபரின் செயற்பாடு விடாமுயற்சி, பாடசாலையை முன்னேற்ற வேண்டுமென்ற ஆர்வம், திறமையான நிர்வாகத்திறனையும் பார்த்ததும் நானும் இங்கே நிரந்தரமாக மாற்றலாகி வந்து அதிபருக்கு உறுதுணையாக இருந்து பாடசாலையின் வளர்ச்சிக்கு உதவ வேண்டுமென்று எண்ணிக்கொண்டேன். 1983 ஆம் ஆண்டுக் கலவரத்தின் தாக்கமும் இவ்வாறு நான் எண்ணுவதற்கு இன்னொரு காரணமாகும். சில மாதங்களில் தற்காலிக இடமாற்றம் முடிந்து மீண்டும் பழைய பாடசாலைக்குச் சென்று கற்பித்து வந்தேன்.

1984 ஆம் ஆண்டு இடமாற்றத்திற்காக விண்ணப்பித்திருந்தேன். இதன் பரிகாரம் 1985 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 04 ம் திகதி எனது வாதரவத்தை விக்னேஸ்வராவுக்கு இடமாற்றம் கிடைத்தது. இங்கே வந்து பாடசாலை முன்னேற்றத்துக்காக அதிபருடன் இணைந்து செயற்பட ஆரம்பித்தேன். பலவருடங்களாக நடை பெறாதிருந்த மெய்வல்லுநர் போட்டியை நடாத்த எண்ணங் கொண்டு வீடு வீடாகச்சென்று நிதி சேகரித்து வேறு நிறுவனங்களிடமிருந்து உதவிகள் பெற்றும் 1985 ஆண்டு விளையாட்டுப் போட்டியை மிகவும் சிறப்பாக நடாத்தினோம். கம்பன், வள்ளுவன் இளங்கோ என இல்லங்கள் பார்க்கப்பட்டு சிவப்பு, பச்சை, மஞ்சள் என நிறங்கள் வழங்கப்பட்டது. பாடசாலை இலச்சினை, பாடசாலைச்கொடி, மாணவர்களுக்கான கழுத்துப்பட்டி என்பனவும்

இக்காலத்திலேயே பயன்பாட்டுக்குக் கொண்டுவரப்பட்டன.

மேலும் அதிபர் முத்துக்குமாரசாமி அவர்கள் காலத்திலேயே அதிபர் காரியாலயமும் அதனோடிணைந்து அறையும் நிர்மாணிக்கப்பட்டது. அதற்கான பணம் அப்போது தரம் 1 முதல் 5 வகுப்புக்களுக்கு மதிய உணவு வழங்குவதற்கு ஒரு நிறுவனத்தால் வழங்கப்பட்ட ஒரு மாணவனுக்கு ரூபா 3/= என்ற பணத்திலிருந்து மாணவர்களுக்குத் தரமான உணவைக் கொடுத்ததுடன் மிகுதியான பணத்தைச் சேர்த்து அந்நிதியிலேயே அலுவலகக் கட்டடம் கட்டப்பட்டதுடன் கூரைக்கான மரமும் போடப்பட்டது. ஓடு வாங்குவதற்கான செலவீனம் அரச கொந்தராந்துக் காரரான திரு.நா.நவரத்தினம் அவர்களால் வழங்கப்பட்டதுடன் பாடசாலை திரு.அ.நாகேந்திரம் அவர்கள் முற்றத்தினை நிரப்புவதற்கான மண்ணை ஏற்றி பறித்து உதவினார். பல்வேறு முன்னேற்றங்களை கண்டு நின்ற இக்காலப் பகுதி பாடசாலையின் பொற்காலமாகும். அதிபர் திரு.சு.முத்துக்குமாரசாமி அவர்களின் இடமாற்றத்தைத் தொடர்ந்து எனக்கு அதிபராகும் வாய்ப்பு இருந்த போதும் நான் அதனை விரும்பவில்லை. சொந்த ஊரில் அனைவரும் உறவினர்கள் மத்தியில் ஒழுங்கான நிர்வாகத்தை நடாத்துவது சிரமம் என்பதனால் இவ்வாய்ப்பினை ஏற்க மறுத்து விட்டேன். அதிபராக திரு.S.சண்முகரத்தினம் அவர்கள் பதவியேற்று கடமையாற்றினார். அவரது இடமாற்றத்தை அடுத்து திரு.S.சிவலிங்கராஜா அவர்கள் அதிபராகப் பதவியேற்றார். இவரது காலத்தில் வசதிக்கட்டணம் அறவிடும் முறை திணைக்களப் பரிந்துரையுடன் அறிமுகப்படுத்தப்பட்டது. அத்துடன் ஆண்களுக்கான மலசலகூடமும் நிர்மாணிக்கப்பட்டது. இக் காலப்பகுதியில் அதிபருடன் நிர்வாக செயற்பாடுகளுக்கு மிகுந்த ஒத்தாசையுடன் செயற்பட்டேன். அக்காலப்பகுதியில் கோப்பாய் கோட்டக் கல்வி அதிகாரியாகக் கடமையாற்றிய திரு.A.இராசேந்திரன் அவர்கள் எமது பாடசாலையின் செயற்பாடுகளிலும் முன்னேற்றத்திலும் மிகுந்த அக்கறையோடு செயற்பட்டார்.

எனது பணியின் ஞாபகமாக அதிபர் அலுவலகத்திற்கு முன்பாக தேக்கு மரமொன்றை நாட்டி வளர்ந்து அது நிழல் கொடுக்கும் வேளையில் 1998 ஐப்பசி மாதத்துடன் சேவையிலிருந்து ஓய்வு பெற்றேன்.

ஆக்கமும் ஊக்கமும் அளித்த அனைவருக்கும் நன்றியைத் தெரிவிப்பதோடு, நூற்றாண்டு விழாக் கொண்டாட வேண்டுமென்ற எண்ணத்தை முன் வைத்து, சிரமத்தையும் பாராது பாடசாலையின் முன்னேற்றத்தையே நோக்கமாகக் கொண்டு பல வழிகளிலும் செயற்பட்ட அதிபர் திரு.J.A.தவநாயகம் அவர்களுக்கும் நன்றியையும் பாராட்டையும் தெரிவிப்பதோடு நூற்றாண்டு விழா மிகச் சிறப்பாக நடந்தேற எனது இதய பூர்வமான வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.



# எனது மனப் பதிவுகளிலிருந்து...

**வே.பரிமேலழகபிள்ளை.**
**இளைப்பாறிய ஆங்கில,**
**சேவைக்கால ஆலோசகர்.**

வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் எனது சேவைக்காலம் 70 களின் முற்பகுதியாகும். இரண்டு சிறிய மண்டபங்களைக் கொண்ட அமைதியான சூழலில் அமைந்த கல்விச்சாலையாக அது விளங்கியது. தரம் 1ல் இருந்து தரம் 8 வரையான வகுப்புகள் அங்கே நடைபெற்று வந்தன.

தலைமை ஆசிரியராக நீர்வேலியைச் சேர்ந்த திரு.இராசதுரை அவர்களும் அவரின் பின் திரு.அருளம்பலம் அவர்களும் அப்பொழுது அங்கு சேவையாற்றினர். ஆசிரியர் குழாத்தின் மொத்த எண்ணிக்கை 8 ஆகும். எல்லோரும் கடமை உணர்வோடும் அர்ப்பணிப்புடனும் பரஸ்பர நட்புடனும் சேவையாற்றி வந்தோம். எம்மிடையே குழு மோதலோ, கருத்து வேறுபாடுகளோ அக்காலத்தில் காணப்படவில்லை. பாடசாலையினதும் மாணவர்களினதும் கல்வி முன்னேற்றமே எமக்கு பிராதனமாகப்பட்டது.

மாணவர்கள் கல்வியில் ஆர்வம் உடையவர்களாகவும், சிறந்த குருபக்தி நிறைந்தவர்களாகவும் காணப்பட்டனர். ஒவ்வொரு வகுப்பிலும் மீத்திறன் மிக்க மாணவர்கள் மிகுந்து காணப்பட்டனர். எனவே எமக்கு கல்வி கற்பித்தலில் அதிக சிரமமேதும் காணப்படவில்லை.

வளப் பற்றாக்குறைகள் அப்பொழுது காணப்பட்டன. குடிதண்ணீர், விளையாட்டு மைதானம் போன்றவற்றை முக்கியமாகக் குறிப்பிடலாம். குடிதண்ணீர் பெறுவதற்காக 2 மைல் தூரம் வரை சென்று தண்ணீரை அண்டாக்களில் நிரப்பி மாணவர்கள் தமது தோளில் சுமந்து வருவர். விஞ்ஞானம் போதிப்பதற்கு வேண்டிய ஆய்வுகூட வசதிகள் அப்பொழுது இருக்கவில்லை. இருந்த போதிலும் கணித விஞ்ஞான ஆசிரியராக கடமையாற்றிய திரு.யோகநாதன் தமது முழுத் திறமையையும் காட்டி சிறப்புடனே போதித்து வந்தார். மாணவர்கள் இவர் மீது அதிக பற்றுடன் காணப்பட்டனர்.

பெற்றோரிடமிருந்து பாடசாலைக்கு நல்ல ஒத்துழைப்புக் கொடுக்கப்பட்டது. எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவர்கள் பாடசாலைக்கு வந்து அதிபருடன் முரண்பட்டதை நான் காணவில்லை. இதற்கு முக்கியமான காரணம் அவ்வூரிலேயே பிறந்து இங்கே கடமையாற்றிய ஆளுமை நிறைந்த, அமைதியான சுபாவமுடைய ஆசிரியர் திரு.குமாராசாமி அவர்கள் என்றால் அது மிகை ஆகாது. இவர் அப்பொழுது உப அதிபராகவும் விளங்கினார். பிரச்சினைகளை பாடசாலை வரை வராது பாதுகாப்பதில் இவர் பிரதான பங்காற்றினார். பாடசாலைப் பிரச்சினைகள் இவர் மட்டத்தில் இவருடைய இல்லத்திலேயே தீர்வு காணப்பட்டதாக பின்னாளில் அறிந்து கொண்டேன். என்னே அவர் தம் ஊர்ப்பற்று!

இப்பாடசாலை ஓங்கி வளர்ந்து கலங்கரை விளக்கமாக வலிகாமம் கிழக்குப்பகுதியில் விளங்க வேண்டும் என வாழ்த்தி வணங்குகிறேன்.



## J/Vatharawattai Vigneswara Vidyalayam - School Development Society - 2010

**Seated : (L-R)** Mr.M.Vimalakanthan, Mr.M.Thangathurai, Mr.J.A.Thavanayagam(President - Principal) Mr.K.Suntharavel(Secretary), Mr.T.Jegatheeswaran.

**Standing : (L-R)** Mr.P.Paramsothy, Mrs.Sathiabama Thavakumar, Mrs.Yogeswary Krushnamoorthy, Mrs.Elakkunadevi kanagalingam, Mr.M.Perinpamoorthy



# Reminiscences of my days at Vatharavatte Vigneswara Vidyalaya.

S.YOGASINGHAM.
Former English Teacher.

When I start writing this many memories come crowding to my mind. I joined the school in February 1983 and left it in 1990 having served for 8 years. The school and the village have undergone a great transformation since I left, but the innate qualities peculiar to the people and the students of Vatharawatte i:e modesty simplicity honesty and the keen interest to learn remain unchanged.

Since the inception the school has never looked back and it will never look back in future too.

In the eightees the people had no access to pure drinking water. There was little cultivable land The only crop cultivated was sweetpotatoes which was seasonal and it was on a limited scale. The only trees found were palmyrahs in a limited area and a few coconuts with little signs of bearing. There were no crops to expect any income from. The people had poor living conditions. Theirs was a hand to mouth living. They could not keep their home - fires burning. There were two bread winners in almost every family, including fair members. but what they earned was hardly enough to meet the needs of the family as they were under - employed many students would attend school sans breakfast and some of them were unable to enjoy a hearty lunch. But their studies would go uninterrupted Most students would do well in their classes. Besides being obedient they were responsive an innovative and teachers could maintain a rapport in classes. Teaching was very productive. I had not thought; in the least, at the beginning, that I could find such a great number of mediocres and a sizeable cream in the classes. It is a pity that many people are in the dark about the exceptional talents of the students of this school. They are second to none even in the fields of sports. One fair athlete recently went upto the provincial level competitions.

The past students of the school have put the school on the map, and the school has an enviable Alumni. Messers Rajalingam a Deputy Director of Education, Prabakaramoothy an S.L.A.S officer, Kanamoorthy a civil engineer, Pratheeparajah a university lecture ans prolific writer of repute, Vjeswaran holder of a coveted post in the Jaffna Secretariat, Ratnakumar an asst. Director of education and Balakrishna famous Principal are cases in point. Besides, the school has produced a lot of teachers and public servants. They have made the

image of the school stand majestically among its counterparts.

I shall be failing in my duty if I do not mention acbout the servies rendered by a former principal Mr.Muththukkumarasamy who usherd in a golden era for the school with the help of Mr.Thangaththurai an asst teacher who had and has the interest of school at heart.

I am really proud and happy to have served in such a fine school which is endowed with great potentilities to rise to further height in future.

While thanking the administration of the school for offering an opportunity for a message I wish the school a very bright future under the present leadership which has all the makings for a head.

# நூற்றாண்டின் சாதனையாளர்கள்


மாகாண மட்டத்தில் தங்கப்பதக்கம்

பெற்றோர்




செல்வி.பா.தினேசா

உயரம் பாய்தல் – 11 வயது



செல்வன்.பா.யசிகன்

1500 மீற்றர் – 19 வயது



செல்வன் லி.தஷிந்தாஸ்

சமூக விஞ்ஞான பொது அறிவுப் போட்டி

2ம் இடம் (தரம் – 11)

மாகாண மட்டம்



# நல்ல மனம்

**திரு.பொ.பரஞ்சோதி**
**ஆசிரியர்**

சைக்கிளை விட்டுப் பாடசாலை வாயிலில் இறங்கும் போதே யாரோ உரத்தும் உறுக்கியும் கதைப்பது கேட்டது.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை முடிவு நேற்றுத்தான் வெளிவந்திருந்தது. தரம் 11 வரை மட்டுமே வகுப்புக்கள் இருக்கின்ற வசதி வாய்ப்புக்கள் மிகவும் குறைந்த எங்கடை இந்த கிராமப்புறப் பாடசாலையில் இருந்து பரீட்சைக்கத் தோற்றிய பத்து மாணவர்களில் மூன்று மாணவர்கள் சித்தியடைந்திருந்ததும் அதில் ஒரு மாணவன் மாவட்ட மட்டத்திலேயே முதலாவதாகத் தோற்றியிருப்பதும் தான் எங்கடை பாடசாலைச் சமூகத்தின்ரை தற்போதைய மிகப் பெரிய சந்தோஷம்.

அப்படியிருக்க காலை வேளையிலே இப்படி ஒரு வம்புச் சண்டைக்கு வந்திருப்பது யாராக இருக்கும். எண்ணியவாறே சைக்கிளை அதை நிறுத்தும் இடத்தில் விட்டு விட்டு அதிபரின் அறைப் பக்கமாகச் சென்றேன். சக ஆசிரியர்கள் வாயிலில் கூடி நின்றனர். என்ன உங்கை சத்தம் என்பது போல அருகில் நின்ற லீலா ரீச்சரைச் சைகையால் கேட்டேன்.

சேர் இப்பதானா வாறியள் வாங்கோ நீங்களும் தான் பாருங்கோவன். நடக்கிறதை என்றவாறு ரீச்சர் அதிபரின் அறையின் உட்பக்கமாக கையைக் காட்டினார்.

எனக்கு அப்பவே தெரிஞ்சு போச்சு என்ர பிள்ளை சோதினை பாசு பண்ண மாட்டுது எண்ட விசயம். என்ர பிள்ளைக்குப் பிரம்பாலை அடிச்சா நான் வந்து கேள்வி கேட்பேன் தானே. என்ன ஏதெண்டு கேட்க என்ரை சாதிசனம் திரண்டு வரத்தானே செய்யும்.

முந்தி எப்பவோ நடந்த அந்தச் சின்னப்பிரச்சனைக்காக இப்படி எல்லாருமாச் சேர்ந்து என்ர பிள்ளையை சோதினை பாசு பண்ண விடாமல் சதி செய்து போட்டியளே இப்படிக் காட்டுக் கத்தல் போட்டுக் கொண்டிருந்தது வேறு யாருமில்லை. எங்கட பாடசாலையிலை படிக்கின்ற வேணுகாந்தன்ர அப்பாதான்.

கூடவே அவன்ர அம்மா போலை உடம்போடை ஒட்டின ரீசேட்டும் கட்டைப் பாவாடையும் கையில் கொழுவிய கான் பாக்குமாக வெள்ளைக்காரப் பெண்மணி வேடத்தில் இடைக்கிடை சில நியாயங்களை தன் கணவருக்குச் சார்பாக எடுத்து விட்டுக் கொண்டிருந்தார்.

எங்கடை அதிபர் நல்ல மனுஷன் அதிர்ந்து கதைக்காது. நியாயம் நீதி தவறி ஒரு நாளும் போகாது. கொஞ்சம் விஷயத்தை விளங்கிக் கதையுங்கோ ஸ்கொலசிப் வகுப்புப் பிள்ளையள் எல்லோருக்கும் ஒரு மாதிரித் தான் இஞ்ச வகுப்பு எடுக்கிறது.

உங்கடை பிள்ளை பெயில் விட்டதுக்கு வேறை வேறை காரணங்கள் இருக்கு அத்தோடை சோதினை பேப்பரைத் திருத்திறதோ முடிவை வெளிப்படுத்திறதோ நாங்கள் இல்லை. அதிபர் அமைதியாகக் கூறினார். ஆனால்

வேணுகாந்தனின் அப்பா விடேல்லை அந்த ஒண்டுக்கும் வழி இல்லாத அப்பாத்துரையின்ர பெடியன் பாசு பண்ணி இருக்குதாம்

அதுவும் ஏதோ மாவட்டத்திலை முதலாம் இடத்திலை பாசு பண்ணி இருக்குதாம் பேப்பரிலை வேறை போட்டோவோடை செய்தி வந்திருக்கு. ஊர் உலகத்திலை தலை நிமிர்ந்து இனி ஒரு மனிசரோடை நான் கதைக்கிறதில்லையோ?

என்ரை பணமென்ன பகட்டென்ன வீடென்ன வாசல் என்ன ஒண்டுக்கும் வக்கத்ததுகளின்ரை எல்லாம் சோதினை பாசு பண்ண என்ரை குழந்தை என்ன வாயோ பாக்கிறது?

கண்டதுகளும் படிக்கிற இந்த லோக்கல் பள்ளிக் கூடத்தில என்ர பிள்ளையைச் சேர்த்தது என்ர பிழை எண்டு எனக்கு இப்பதான் விளங்குது. பொறுமையை இழந்த அதிபர் இடை மறித்தார் ஐயா உங்கடை பிள்ளை சோதினை பாஸ் பண்ணேல்லை எண்டதுக்காக மற்றைவையை இழக்காரமாகக் கதைக்காதையுங்கோ உங்கடை பிள்ளை வகுப்புக்கு ஒழுங்காக வாறதில்லை. வந்தாலும் சொல்லுக் கேட்டுப் படிக்கிறதில்லை நாங்கள் எத்தினை நாள் எத்தனை புத்தி சொல்லி இருப்பம். ஒண்டையும் கேக்கல்ல பிள்ளையில பிழையை வைச்சுக் கொண்டு மற்றவையில வீணா பழியைப் போடாதையுங்கோ.

அதிபர் ஆறுதல்படுத்த முற்பட்டார். ஆனால் அந்த ஆள் விட்டபாடில்லை (யாரோ அண்ணாத்துரை வாத்தியாராம் அவர்தானாம் ஸ்கொலசிப் வகுப்புக்குப் படிப்பிக்கிறவர். அவருக்கென்ன தான் பெரிய அறிஞர் அண்ணாத்துரை எண்ட நினைப்போ கூப்பிடுங்கள். அந்த விண்ணரை ஒருக்கால் அவரிட்டை ரண்டு நியாயம் கேட்டுப் பாப்பம் இதுக்குப் பிறகும் நான் வெளியிலை நிற்க விரும்பேல்லை அதிபரின் அழைப்பின்றியே உட்பிரவேசித்தேன்.

ஐயா பெரியவரே நான் சொல்லுறதை நீங்கள் கொஞ்சம் கவனமாகக் கேட்க வேணும் விளக்கம் இல்லாமல் படிப்பறிவு இல்லாததுகள் மாதிரி வீணாகத் தேவையில்லாமல் கதைக்காதையுங்கோ. என்ன நானோ படிப்பறிவில்லாதவன் தான் ஆனாவுக்கு அடிவளம் தெரியாததுகள் எல்லாம் என்னைப் பார்த்து கேள்வி கேட்குதுகள். தெரியுமே என்ர குணம் நான் நினைச்சா, உம்மை தண்ணி இல்லா காட்டுக்கு மாத்திப்போடுவன். ஊருலகத்திலை எனக்கு எவ்வளவு செல்வாக்கு இருக்கெண்டு உமக்குத் தெரியுமோ?

ஆனமானதுமல்லோ ஆளைப் பார்த்தா பத்து நாள் சாப்பிடாமை பஞ்சத்திலை அடிபட்டது மாதிரிக் கிடக்கு. என்னோடை நியாயம் கதைக்க வந்திட்டுது. (பேச்சுவார்த்தை ஒருமாதிரிப் போகவே ஒரு நாளும் கோபம் வராத எங்கடை அதிபருக்கே சரியான கோபம் வந்திட்டுது.

ஐயோ இப்ப இந்த இடத்தை விட்டுப் போகப் போறியளோ? இல்லை நாங்கள் பிடிச்சுக் கொண்டு போய் வெளியிலை விடட்டுமோ?

சரி கதைக்கட்டும் எண்டு பார்த்தா வரவர மரியாதை குறைஞ்சு கொண்டே போகுது. நீங்கள் போய்ச் செய்யிறதைச் செய்யுங்கோ எங்களுக்கு எங்கடை வேலை தெரியும்.

எழும்பி நிண்டு கையைக் காட்டி கடுமையான தொனியில் கூறினார். வாருங்கோ அப்பா உவையளோடை எங்களுக்கு என்ன அலுவல். விசயம்

விளங்காததுகளோடை கதைச்சுப் பிரயோசனமில்லை.

நாங்கள் கல்வித் திணைக்களத்துக்கு ஒரு நடை போய் முறைப்பாடு செய்து போட்டு வருவம். கையிலை பிடிச்சு இழுக்காத குறையா வேணுகாந்தன்ரை அப்பாவை அம்மா கூட்டிக் கொண்டு போனா.

அப்பவும் மனிசன் விட்ட பாடில்லை. நான் இப்ப போறன். ஆனா உங்களைச் சும்மா விடமாட்டன். ஐம்பதாயிரம் என்ன ஒரு லட்சம் கட்டி எண்டாலும் என்ரை பிள்ளையை ரவுண் பள்ளிக்குடத்திலை சேத்துப் படிப்பிச்சுக் காட்டுவன்.

நான் லேசுப்பட்ட ஆளில்லை. வெளி நாட்டிலை விட்டுப் படிப்பிக்கக் கூடிய தகுதி கூட என்னட்டை இருக்குது எண்டு சுய தம்பட்டம் அடித்துக் கொண்டே அங்கிருந்து வெளியேறினார்.

இந்தச் சந்தடி அடங்கவும் மகேசன் தன்ரை அப்பா, அம்மாவோடை வந்து சேரவும் சரியாக இருந்தது.

மகேசன் யாரெண்டு நினைப்பியள். அவனைப் பற்றிக் கொஞ்சம் சொல்லத்தானே வேணும். (இந்த முறை எங்கடை பள்ளிக் கூடத்திலை இருந்து தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றி யாழ். மாவட்டத்திலேயே முதல் மாணவனாகத் தேறி இருக்கிறான்.

சரியான ஏழைப் பையன். படிப்பிலை வலு கெட்டிக்காரன். பண்பு, பணிவு, அடக்கத்துக்கு இப்படி ஒரு பிள்ளையை இந்தக் காலத்திலை காணேலாது.

வறுமை எண்டா அப்படி ஒரு வறுமை காற் சட்டைத் தெறி அறுந்தால் அதை வாங்கி வைத்து தைக்கக் கூட அவனிட்டை வசதி குறைவு.

இதை எப்படி நான் சொல்லுறன் எண்டா பாடசாலையிலை வழங்கிற மதிய உணவை வாங்கிச் சாப்பிட்ட பிறகு சேட்டை உயர்த்தி பல்லால் கௌவிப் பிடிச்சுக் கொண்டு காற்சட்டைக்குக் குத்தி இருக்கிற ஊசியை கொஞ்சம் தளர்த்திக் குத்தியதை நான் பார்த்திருக்கிறன்.

மகேசன்ரை அப்பா அப்பாத்துரை ஒரு சரியான அப்பாவித்துரை. உழைச்சு ஓடாய்த் தேய்ந்து போன தேகம். ஐயா மற்றப் பிள்ளையள் இந்தச்சோதினைக்கு எத்தினை இடத்திலை போய்ப் படிச்சதுகள். ஆனால், என்ரை பிள்ளை இந்த நிலைக்கு வாறதுக்கு நீங்களும் இந்தப் பள்ளிக் குடத்து அதிபரும் மற்ற ஆசிரியர்களும் தான் காரணம். உங்களை நான் எண்டைக்குமே மறக்க மாட்டன். எண்டு என்னைக் கண்டதும் கையெடுத்துக் கும்பிட்டுது.

மகேசன்ரை தாயைப் பார்த்தன். சரியான பாவத்தாரப் பொம்பிளை. சாயம் வெழுத்துப் போன நூல்ச் சேலை, தூக்கிக் கட்டிய குடுமி, நடு நெற்றியில் ஒரு ரூபாய்க் குற்றியளவில் ஒரு குங்குமப் பொட்டு, வறுமையும் அடக்கமும் ஒன்று சேர்ந்த ஒரு உருவம்.

எங்கடை பாடசாலைப் பியோன் அப்ப அங்கை வந்து, மகேசன்ரை அப்பா, அம்மாவை பிறின்சிப்பல் கூட்டி வரட்டாம் என்று கூறவே அவர்களோடை நானும் போனேன்.

வணக்கம் சேர். ஒரு சேர அதிபரைக் கையெடுத்துக் கும்பிட்ட மகேசன்ரை அப்பா அம்மாவை கதிரையில் இருக்கும்படி அதிபர் சைகை காட்டினார். வேண்டாம் சேர், நாங்கள் நின்றே கதைக்கிறம். என்று மறுத்த அவர்களை கதிரையில் இருத்தவே அதிபருக்கும் பெரும் பாடாகிப் போச்சு

அப்ப மகேசனை இனி எந்தப் பாடசாலையிலை சேர்க்கப் போறீங்கள்.

அதிபரே கதையை ஆரம்பித்தார்.

என்ன சேர் சொல்லுறியள். பிள்ளை தொடர்ந்தும் இங்கதான் படிக்க வேணும். மகேசன் இண்டைக்கு இந்த நிலைக்கு வாறதுக்கு, இவ்வளவு பேரும் புகழும் கிடைக்கிறதுக்கு நீங்களும் இங்க படிப்பிக்கிற வாத்தி மாரும் தானே சேர் காரணம்.

அப்படி இருக்க நான் என்ன நன்றி மறந்தவனே. இன்னொரு பள்ளிக்கூடத்திலை என்ரை பிள்ளையைக் கொண்டு போய்ச் சேர்க்க.

சேர் எனக்கொரு விருப்பம் இருக்கு. என்ரை பிள்ளை இங்கை படிச்சுத்தான் ஓ.எல் சோதினையும் எழுத வேணும்.

இந்தப் பள்ளிக்கூடத்திலை ஏ.எல். வகுப்பை ஆரம்பிச்சு இஞ்சை படிச்சுத்தான் என்ரை பிள்ளை வாசிற்றிக்குப் போக வேணும். இது நடக்குமா? சேர்?

அதிபரின் கையைப் பிடித்தவாறு நாத்தழுதழுக்க மகேசனின் அப்பா மன்றாடுவது போலக் கேட்டார்.

ஐயா நீங்கள் ஒண்டும் கவலைப் படாதையுங்கோ. உங்களைப் போலை நல்ல மனம் படைச்ச மனிசற்ரை கோரிக்கை கட்டாயம் ஆண்டவன் காதிலை விழும். அது நிச்சயம் நிறைவேறும். அதிபர் ஆறுதல் படுத்தும் பாணியில் கூறிக்கொண்டிருந்தார்.

கடவுளே பணத்தைக் கொடுத்தவனுக்கு நல்ல மனத்தையும் கொடுக்க மறந்தது ஏன்?

என் மனம் இறைவனிடம் இறைஞ்சிக் கொண்டது.



**Discipline Committee - 2010**

**Seated : Miss.Kalasini Sinnarajah, Mr.M.Perinpamoorthy, Mr.J.A.Thavanayagam(Principal)**
**(L-R) Mr.K.Kirubakaran, Mrs.Elakkunadevi Kanagalingam.**



# நனோ தொழில் நுட்பம்

# Nano Technology

**செல்வி.தமனிகை சுப்பிரமணியம்**

(B.A Hons (Secretary) H.R.Dip)

உலகளாவிய ரீதியில் பல்வேறு மட்டங்களிலும் பேசப்பட்டு வரும் நனோ தொழில்நுட்பமானது விஞ்ஞானம் கண்ட பரிணாம வளர்ச்சியின் புதிய திருப்பு முனையாகும். 1959ஆம் ஆண்டில் நோபல் பரிசைப் பெற்ற பௌதிகவியலாளரான ரிச்சாட் பெமன் (Richard Fewynman) என்பவரே நனோ தொழில்நுட்பத்திற்கான இக்கூற்றை விஞ்ஞான ரீதியாக முன்வைத்தார். நனோ மீற்றர் என்பது ஒரு மீற்றரின் பில்லியனில் ஒரு பகுதியாகும். (1nm=10-9m) சாதாரணமாக விளங்கிக் கொள்வதாயின் நனோ மீற்றர் அளவுத் திட்டத்தில் உருப்பெருக்கிக்காட்டக்கூடிய வில்லையைப் பாவித்து ஒரு மனிதனின் தலைமயிரை 200m அகலம் உடையதாகக் காட்ட முடியும். சடப்பொருளின் நுண்ணிய துணிக்கைகள் காட்டும் வியத்தகு இயல்புகளே நனோ தொழில்நுட்பம் பற்றிய கொள்கை உருவாக வழி வகுத்தன.

இன்றைய காலகட்டத்தில் இத் தொழில்நுட்பத்தின் பயன்பாடு மருத்துவம், உயிரியல், பௌதீகம், இலத்திரனியல், கணனி, விஞ்ஞானம், இரசாயனப் பாதுகாப்பு, விவசாயம் என உலகில் உள்ள அனைத்து துறைகளிலும் தனது செல்வாக்கை செலுத்த தொடங்கி விட்டது. நனோ தொழில்நுட்பத்தால் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் ஏற்கனவே சந்தைக்கு வந்து விட்ட போதிலும் மக்கள் மத்தியில் இன்றுவரை அவை தொடர்பான விழிப்புணர்வு குறைவாகவே காணப்படுகின்றது.

நனோ தொழில்நுட்பத்தின் பிரயோகமானது மனிதனால் பயன்படுத்தப்படும் பாவனைப் பொருட்களிலும் காணப்படுகின்றது. காபன் அணுவைப் பயன்படுத்தி காபன் நனோ குழாய்கள், டென்னிஸ் மட்டைகள் போன்ற பல உற்பத்திகள் நடைபெறுகின்றன. இவ்வாறு உருவாக்கப்படும் டென்னிஸ் மட்டைகள் குறைந்த பாரம் உடையனவாகவும், உறுதி மிக்கவையாகவும் காணப்படுவதால் வர்த்தக ரீதியாக பெருவரவேற்பை பெற்றுள்ளன. பாலங்கள், கட்டிடங்களில் உருக்கின் வலிமையிலும் பல மடங்கு வலிமை கொண்டதும் பாரம் குறைந்ததும் துருப்பிடிக்காததுமான காபன் நனோ குழாய்கள் உருக்கிற்கு மாற்றீடாக பயன்படுத்தப்படுகின்றது.

காபன் நனோக் குழாய்களின் விட்டத்தை மாற்றுவதன் மூலம் எமது தேவைக்கு ஏற்றவாறு இரசாயன இலத்திரனியல் ஒளியியல் பண்புகளையும் பெற்றுக் கொள்ள முடியும். வளியைச் சுத்திகரிக்கும் வடிநீர், வடிஐதரசன் சேமிப்புக் கலன்கள் உயிரியல் இரசாயனப் பிரயோகங்களில் சிலவாகும். காட்சித் திரைகள் (Display) ஒளியியல், இக்னைற்றர்கள், ட்ரான்சிஸ்ரர்கள், சூரியகலன்கள், கடத்திகள், கடத்துப் படலங்கள் போன்றன ஒளியியல், மின்னியல் , இலத்திரனியல் சார் பிரயோகங்களாகும்.

இத் தொழில்நுட்பம் மூலம் கழியூதாக் கதிர்களையும், கிருமித் தொற்றையும் தடுக்கும் ஆற்றல் கொண்ட நனோத் துகள்கள் கொண்டு உருவாக்கப்படும் ஊடுகாட்டும் (Transparent) முகப் பூச்சுக்கள் தற்போது பாவனைக்கு வந்துள்ளன. இது சருமத்தின் இயற்கைத் தோற்றத்தை மாற்றாதிருப்பதுடன் கழியூதாக் கதிர்களில் இருந்து பாதுகாப்பும் அளிக்கிறது.

நனோ உயிர்த் தொழில்நுட்பம் ஆனது நாம் உட்கொள்ளும் காய்கறி பழவகைகளை உயர் தரத்துடன் அளவில் பெரியதாகவும் உயர் போசாக்கு உடையதாகவும் உற்பத்தி செய்ய உதவுகின்றது. அது மட்டுமன்றி உணவுப் பொருட்களின் தன்மை கெடாது பாதுகாக்கும் நனோத்துகள்கள் (Nanaparticles) கொண்ட படலங்களும் உருவாக்கப்பட்டு வருகின்றன. உயிரியல் பண்ணையில் உள்ள தாவரங்களுக்குத் தேவையான நீர்ப்போசனை குறைவடையும் போது அதை நிவர்த்தி செய்ய வேண்டிய நீர்ப்பசனைகளைத் தன்னியக்கமாக விடுவிப்பதற்கு பண்ணைகளிலுள்ள நனோ துகள்கள் கொண்ட நனோ உணரி (nanosensors) வலையமைப்புக்கள் பயன்படுத்தப்படுகின்றன.

நனோ தொழில்நுட்பத்திலான குளிர்சாதனப் பெட்டிகளின் அறிமுகம் எந்தவொரு உணவையும் மிகநீண்ட நாட்களுக்கு பழுதடையாமல் பேண வழிவகுத்துள்ளது. இதை விட உறுதியான கட்டடப் பொருட்கள், டயர்களை உருவாக்கவும் பயன்படுகின்றது. மருத்துவ ரீதியாக நனோ தொழில்நுட்பத்தின் பிரயோகம் ஆனது மாபெரும் புரட்சி ஒன்றை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை. இற்தொழில்நுட்பத்தினூடு உற்பத்தி செய்யப்படும் மருந்துகள் உட்கொண்ட மறுகணமே தொழிற்படும் ஆற்றல் மிக்கன. அதை விட பாதிக்கப்பட்ட பகுதிகளில் மட்டும் சிகிச்சையை மேற்கொள்ள வாய்ப்பளிக்கின்றது. இத் நனோ தொழில்நுட்பமானது மனிதனின் ஆயுளை அதிகரிப்பதுடன் இளமையைப் பேணவும் வழி செய்கின்றது.

நனோ தொழில்நுட்ப ஆய்வுக்கென நனோ தொழில்நுட்ப நிறுவகம் நிறுவப்பட்டுள்ளது. ஆக்க பூர்வமான நனோ தொழில்நுட்ப ஆய்வுகளுக்கும் கண்டுபிடிப்புக்களுக்கும் களமமைப்பதுடன் ஏனைய நாடுகளுடன் போட்டி போடச் செய்யும் ஒரு ஆரம்ப முயற்சியாக அமைந்துள்ளது. உலகெங்கும் உள்ள் பல்கலைக்கழகங்களிலும் இவ் ஆய்வு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ் ஆய்வு முயற்சியில் யாழ் பல்கலைக் கழக பௌதீகத் துறையின் ஆய்வுக் குழு இலண்டன் பல்கலைக் கழக குழுவுடன் இணைந்து செயற்பட்டு வருகின்றது.

இத்தகைய ஆய்வுகள் பெரியளவில் நடைபெற்றாலும் நனோ தொழில்நுட்பத்தால் சாதக விளைவுகள் அறியப்பட்டாலும் அதன் நீண்ட கால பாதக விளைவுகள் பற்றியும் விஞ்ஞானிகள் ஆய்வாளர்களிடையே வினாக்கள் உள்ளன. எனினும் பொருளாதாரத்தை முன்னிறுத்தியே நனோ தொழில்நுட்ப பாவனை புதிய உலகைப் படைத்து வருகிறது. இத் தொழில் நுட்பம் பூமிக்கு அச்சுறுத்தலாக அமையாத வரையில் அதன் பிரயோகம் மனிதனுக்கு சாதகமானதே.


பழைய மாணவர் சங்கம்

# பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள் - 2010

**இருப்பவர்கள் :-** செல்வி.சி.சிவகௌரி, திரு.கு.கானமூர்த்தி, திரு.மா.தங்கத்துரை, திரு.J.A.தவநாயகம் (அதிபர்), திரு.நா.பிரதீபராஜா (தலைவர்), செல்வி.கு.சத்தியரஜனி (உபசெயலாளர்)

**நிற்பவர்கள் :-** திரு.சி.பத்மதாசன் (செயலாளர்), திரு.மு.பேரின்மூர்த்தி,(பொருளாளர்), திரு.வீ.பிரதீபன், திரு.செ.சஞ்சீபன், திரு.ஐ.கௌசிகன், திரு.து.சுதாகர், திரு.பொ.ஸ்ரீவர்ணன் (உப தலைவர்), திரு.இ.பிரசாத்



# அபிவிருத்திப் பாதை நோக்கி

By :- K.Vithya.
B.A(Hons) Eco. Special;

யாழ் மாவட்டத்தின் வலி கிழக்குப் பிரதேசத்தின் வாதரவத்தைப்பதியில் விநாயகர் நாமம் கொண்ட விக்னேஸ்வரா வித்தியாலயம் ஏழு கன்னிமார் துணையுடன் கல்வி சாலையாக மிளிர்ந்து வருகின்றது.

இப் பாடசாலையானது ஒரு முகாமையாளரையும் 16 நிரந்தர ஆசிரியர்களையும் ஒரு தற்காலிக இணைப்புப்பெற்ற ஆசிரியருடன் மொத்தமாக 17 ஆசிரியர்களையும் கொண்டுள்ளது.

மேலும் மாணவர் தொகையானது ஆரம்பப்பிரிவில் 134 மாணவர்களும் இடைநிலைப்பிரிவில் 119 மாணவர்களுமாக மொத்தம் 253 மாணவர்கள் கல்வி கற்கும் ஒரு வளர்ந்துவரும் பாடசாலையாக மாறி வருகின்றது.

இப் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களானாலும் சரி கல்வி கற்பிக்கும் அதிபர், ஆசிரியர்களானாலும் சரி ஒரு புதிய உத்வேகத்துடன் செயற்பட்டு வருவதைக் காண முடிகின்றது. ஏனெனில் இப் பிரதேசமானது மிகவும் அதிகஷ்ட பிரதேசமாகக் காணப்படுகின்றமையால் இங்கு கல்வியைத்தவிர பிழைப்பதற்கு வேறு வழி எதுவும் இல்லை என்ற காரணத்தால் அனைவரும் தாராள சிந்தனையுடன் கடமையாற்ற வேண்டிய நிலைமை உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இக் கிராமத்தைப் பொறுத்த வரையில் மிகவும் பின்தங்கிய பிரதேசமாகவும் அதாவது குடிநீர் வசதி அற்ற போக்குவரத்து வசதி அற்ற பிரதேசமாகவும் காணப்படுகின்றது. இதனால் இங்கு கடமைக்கு வரும் ஊழியர்கள் மிகவும் சிரமங்களுக்கு உள்ளாக வேண்டி உள்ளது. இருப்பினும் இக்கிராமத்து மாணவர்கள் மிகவும் கீழ்படிவானவர்களாகவும் கல்வியில் அதிக அக்கறை கொண்டவர்களாகவும் பல்வேறு வேதனைகளுக்கும் மத்தியில் சாதனை படைக்கும் வீரர்களாகவும் திகழ்வதால் அதிபர், ஆசிரியர்கள் மிகுந்த அர்ப்பணிப்புடன் சேவையாற்றி வருகின்றனர்.

உண்மையிலேயே இங்கு கல்வி கற்கும் மாணவர்கள் மிகவும் வறுமை நிலையில் கல்வி கற்பதைக் காணமுடிகின்றது. அதாவது இவர்களில் பெரும்பாலான மாணவர்களின் தாய், தந்தை இருவருமே கூலித்தொழிலாளிகளாக இருப்பதிலிருந்து இதனை அறிய முடிகின்றது. எனவே வறுமையின் (Poverty) பிடியில் சிக்கித் தவிக்கும் மாணவர்கள் எதிர்காலத்தில் தம்மை வறுமை நிலையில் இருந்து மீட்கும் ஒரு கருவியாக கல்வியைப் பயன்படுத்தி வருவது எமக்கு மிக்க மகிழ்ச்சியைத் தருகின்றது.

எனவே இவ்வாறான நிலைமையில் உள்ள எமது பாடசாலையின் துரித அபிவிருத்திப் பாதை பற்றி யாவரும் சிந்திக்க வேண்டியவர்களாக உள்ளோம். அபிவிருத்தி (Development) என்பது உடனடியாக அடையப்படக் கூடிய ஒன்றல்ல. படிப்படியாக நாம் ஒவ்வொரு துறைகளிலும் வளர்ந்து செல்லும் போதே முழுமையான அபிவிருத்தியை எய்த முடியும் என்பது பொருளியலாளரது (Econo

mist) கருத்தாகும். அந்த வகையிலே எமது பாடசாலையும் இன்று ஒவ்வொரு துறையிலும் அபிவிருத்தி கண்டு வளர்ந்து வரும் பாடசாலையாக நூற்றாண்டில் கால் பதித்து நிற்கின்றது. அந்த வகையிலே இன்று எமது பாடசாலை கல்வித்துறையில் மட்டுமன்றி ஏனைய இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் எமது பாடசாலைமாணவர்கள் சாதனை படைத்து வந்துள்ளமையைக் குறிப்பிடலாம். இதற்குச் சான்றாக அண்மையில் நடைபெற்ற மாகாணமட்ட விளையாட்டுப் போட்டியில் 2 மாணவர்கள் முதலிடம் பெற்று 2 தங்கப்பதக்கங்கள் பெற்றுக்கொண்டமையைக் குறிப்பிடலாம்.

இவ்வாறாக இப்பாடசாலை வளர்ந்துவரும் பாடசாலையாக இருப்பினும் இப்பாடசாலையின் அபிவிருத்தியில் பாரிய பின்னடைவை ஏற்படுத்தும் காரணிகளாக இம்மாணவர்களிடையே கடந்த காலங்களில் கணினி, ஆங்கில அறிவு என்பது ஊட்டப்படாமை பாரிய குறைபாடாகும். இதனால் இன்றைய நவீன தகவல் உலகத்திற்கு இம் மாணவர்கள் சற்று ஈடுகொடுக்க முடியாதவர்கள் ஆகவும் உள்ளனர். எனவே இவ்விடயத்தில் கவனம் எடுத்து பாடசாலையின் புதிய புதிய விடயங்களை மாணவர் நலன் கருதி புகுத்தி வருவது வரவேற்கத்தக்க விடயமாக உள்ளது. இதற்குச்சான்றாக எமது பாடசாலையின் புதிய முகாமையின் அதீத அக்கறையாலும் ஆர்வத்தாலும் எமது பாடசாலைக்கு அண்மையில் கணினி அறை ஒன்று புதிதாக அமைக்கப் பெற்றும், ஏற்கனவே இருந்த கணினிகள் மீளத் திருத்தி அமைக்கப்பட்டும், இன்னும் பல புதிய கணினிகள் வழங்குவதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதையும் குறிப்பிடலாம். எனவே இவற்றை உற்று நோக்கும் போது எமது பாடசாலைக்கான அபிவிருத்திக் கதவுகள் திறக்கப்பட்டிருப்பதையே உணர்த்தி நிற்கின்றது. இத்துடன் ஒன்று சேர இக் கிராமத்திற்கு அண்மையில் மின்சாரம் வழங்கப்பட்டிருப்பது அபிவிருத்தியின் அடுத்த படி நிலைக்கு எம்மை இட்டுச் செல்லவுள்ளது. என்பதைப் புலப்படுத்தி நிற்கின்றது.

இவ்வாறாக குறுகிய காலத்தில் பல்வேறுபட்ட துறைகளிலும் வளர்ச்சி கண்டுவரும் பாடசாலையாக இப் பாடசாலை விளங்கினாலும் இதன் தொடர்ச்சியான அபிவிருத்திக் கட்டமைப்புக்கு இங்குள்ள பெற்றோர், சமூகம் என்பனவற்றின் அக்கறை போதாமல் உள்ளமை என்பது மிகப்பெரும் குறைபாடாக எனது ஆய்வில் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.

இங்குள்ள மாணவர்கள் மிகவும் திறமை படைத்தவர்கள் ஆனால் எந்தவொரு பிள்ளைக்கும் வீட்டுச்சூழல், பெற்றோர், சமூக அக்கறை என்பவை அவர்களது கல்வி அபிவிருத்தியில் தாக்கத்தை ஏற்படுத்தும் முக்கிய காரணிகளாகும். இங்கு கல்வி கற்கும்மாணவர்களில் ஆரம்பக்கல்வி (1-5) இடைநிலை வகுப்பு மாணவர்கள் (6-11) என உள்ளனர். இடைநிலைப்பிரிவில் மாணவர்கள் தாம் உணர்ந்து கற்கும் வயதுப்பிரிவாக உள்ளமையால் கல்வி அபிவிருத்தியில் பாரிய தாக்கம் ஏற்படுவது குறைவு. ஆனால் ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கு பெற்றோரின் அக்கறை என்பது மிகவும் வேண்டப்படும் ஒன்றாகும். அது இம்மாணவர்களுக்கு இல்லாமை எமக்கு வேதனை தரும் விடயமாக உள்ளது. இதனால் புலமைப்பரிசில் பரீட்சையில் கூட இம்மாணவர்கள் கிட்டிய புள்ளிகளை எடுத்தும் சித்தி எய்த முடியாமை கவலை தரும் விடயமாக உள்ளது.

எந்தவொரு சமுதாயத்திலும் பிள்ளைகளின் கல்வி தொடர்பான முன்னேற்றம், பெறுபேறு என்பவற்றைத் தீர்மானிப்பதில் கற்கும் மாணவர்களின் ஆற்றல், மற்றும் ஈடுபாடு ஆசிரியர்களின் கற்பித்தல் அர்ப்பணிப்பு, பாடசாலை முகாமைத்துவத்தின் கவனக்குவிப்பு, வினைத்திறன் (Efficency) விளைதிறன் (Effectiveness) என்பவற்றுடன் பிள்ளைகளின் பெற்றோரின் கல்விசார் அணுகுமுறையும் முக்கியத்துவம் பெற்று வருவதை இக் கிராமத்து பெற்றோர் உணர்வதாக இல்லாமை மிகப்பெரும் குறைபாடாக உள்ளது. இது பிள்ளைகளின் எதிர்காலக்கல்வி அபிவிருத்தியில் பாரிய பின்னடைவு ஏற்படுத்தும் என உணர்ந்து இங்குள்ள பெற்றோர்கள் மாற வேண்டும் என்பது எனது எதிர்பார்ப்பாகும். பிள்ளைகளின் உடல் ஆரோக்கியம், பலவீனம், பழக்கவழக்கங்கள், உளப்பாங்கு என்பவற்றில் மிகுந்த அக்கறை காட்ட வேண்டும். இவ்வாறாக இங்குள்ள பெற்றோர் தமது பொறுப்பினை உறுதி செய்வதால் இப்பாடசாலையின் அபிவிருத்தி என்பது துரிதமாகவும் முழுமையாகவும் அடையப்பட முடியும் என்பதைக் கூறிக் கொள்ள விரும்புகின்றேன்.

இவ்வாறாக இப் பாடசாலையின் அபிவிருத்திப் பாதைக்கு எவ்வாறான தடைகள், பிரச்சினைகள் உள்ளன. என்பது பற்றியும் அதற்கான தீர்வுகள் எவ்வாறு முன்வைக்கப்படலாம் என்பது பற்றியும் ஆய்வு செய்ய வேண்டும். என்பது எனது நீண்ட நாள் எதிர்பார்ப்பாகும். எனவே இதனை இப்பாடசாலையில் சேவையாற்றிவரும் எனது குறுகியகால அனுபவத்தைக்கொண்டு சூழலியல் ஆய்வு (Environmental Analysis) ஆகிய SWOT ஆய்வின் ஊடாக முன்வைக்கலாம் என எண்ணியுள்ளோம்.

Environmental Analysis

SWOT :- இச் SWOT ஆய்வில்

S - Strength - பலம்
W - Weakness - பலவீனம்
O - Opportunity - வாய்ப்பு
T - Threat - அச்சுறுத்தல் சாவல்கள்

என்னும் 4 விடயங்களிலும் முக்கியமானவை. இங்கு நாம் SWOT ஆய்வு மேற்கொள்வதன் நோக்கம் ஏற்கனவே இயங்கிக் கொண்டிருக்கும் எமது பாடசாலையின் தற்போதைய நிலையினை அறிந்து அபிவிருத்திக்கு பிரச்சினைகள் ஏதும் தடையாக இருப்பின் அவற்றை அடையாளம் கண்டு கொள்வதற்காகும்.

இங்கு SWOT ஆய்வில் உள்ள பலம், பலவீனம் ஆகிய இரண்டும் அகச்சூழல் காரணிகளாகும். அதாவது இவற்றை பாடசாலை முகாமையினால் கட்டுப்படுத்த முடியும். ஆனால் வாய்ப்புக்களும் அச்சுறுத்தல்களும் புறச் சூழல் காரணிகளாகும். இவை பாடசாலை முகாமையின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டவையாகும். எனவே பலங்கள், பலவீனங்கள் என்பவை உள்ளகக் காரணிகளாக (Internal Factors) இருப்பதுடன் இவை பாடசாலை முகாமையின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டதாகவும் காணப்படுகின்றது.

எனவே நாம் மேலே குறிப்பிட்டதற்கு அமைய பின்வருமாறு எமது பாடசாலையில் காணப்படும் பலங்கள், பலவீனங்கள், வாய்ப்புக்கள், அச்சுறுத்தல்கள், எவை? என்பதை ஆய்வு செய்து கொள்வதன் மூலம் பிரச்சினைகள் இனங்காணப்பட்டு அவற்றினை உரியமுறையில் அணுகி பிரச்சினைகளில் இருந்த விடுபட்டு அபிவிருத்திப் பாதை நோக்கி துரித கதியில் நகர முடியும் என்பது எமது எதிர்பார்ப்பாகும்.

பலம் (Strength)

இப்பாடசாலைகள் இருக்கும் வலிமைகள் யாவும் பலம் எனக் கூறலாம். அந்த வகையில் எமது பாடசாலையில் பின்வரும் விடயங்கள் பலங்களாகக் காணப்படுகின்றன.

1. சிறந்த முகாமைத்துவம் (Good management)
2. பெரும்பாலான ஆசிரியர்கள் பயிற்றப்பட்டவர்களாக இருத்தல் (Wel trained experienced professional staff)
3. பாடசாலை முகாமையாளரின் சிறந்த கொள்கை வகுக்கும் தன்மை (Management desicion making)
4. பாடசாலை முகாமையாளருக்கும் ஆசிரியர்களுக்கும் இடையே சிறந்த உறவுமுறை பேணப்படல் (Good relationship among management and staff)
5. பாடசாலை முகாமையாளருக்கும், ஊழியர்களுக்கும் இடையே சிறந்த வலைப்பின்னல் தொடர்பு பேணப்படல்

இவை யாவும் எமது பாடசாலைக்கு இருக்கக்கூடிய வலிமையைக் காட்டுகின்றது.

2. பலவீனம் (Weakness)

எமது பாடசாலைக்கு இருக்கக்கூடும் என்ற குறைபாடுகளை பலவீனம் என்பது குறித்து நிற்கின்றது. இவை பாடசாலையின் அபிவிருத்தியில் மிகுந்த பாதிப்பை ஏற்படுத்தும் காரணிகளாக உள்ளது. எனவே எமது பாடசாலையானது பின்வரும் விடயங்களில் பலவீனமாகக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

1. போதுமான கட்டட வசதியின்மை
2. நிதிப்பற்றாக்குறை காணப்படல்
3. பயிற்றப்படாத ஆசிரியர்கள் காணப்படல்
4. பொருத்தமான பாடத்திற்கு பொருத்தமான ஆசிரியர்கள் நியமிக்கப்படாமை

உதாரணமாக பட்டதாரி ஆசிரியர்கள் சிலர் ஆரம்பக்கல்வி பற்றிய அறிவோ, முன்சேவைப்பயிற்சியோஇன்றி கற்பித்தலில் ஈடுபடுத்தப்படல்.

இவற்றினூடாக எழக்கூடிய குறைபாடுகள் பாடசாலையின் வெளியீடு (Output) ஆகிய கல்வி அபிவிருத்தியில் அதிக பாதிப்பை ஏற்படுத்தும் என்பதால் எதிர்வு கூறல் இடம்பெறும் போது இவற்றைக் கவனத்தில் எடுத்து இதற்குரிய தீர்வினை உரிய முறையில் முன்வைப்பதன் மூலம் இப்பாடசாலையின் கல்வி அபிவிருத்தி என்பது இலகுவில் அமையப்பட முடியும்.

3. வாய்ப்பு (Opportunity)

புறச்சூழல் காரணிகளிலே பாடசாலைக்கு இருக்கக்கூடும் என்ற எல்லாப்பலமும் வாய்ப்புக்களாக அமைந்துள்ளது. எனவே எமது பாடசாலைக்கு இருக்கின்ற வாய்ப்பக்களாக பின்வருவனவற்றை குறிப்பிடலாம்.

1.சாதகமான அரசின் கல்விக்கொள்கை

2. தொழில்நுட்ப உதவிகள் காணப்படுகின்றமை
உ+ம் அண்மையில் பழைய மாணவர் ஒருவரால் Photocopy இயந்திரம் கையளிக்கப்பட்டமை

3. அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவி கிடைத்தல்
உ+ம் நிக்கொட் அமைப்பினால் மலசல கூடம் அமைக்கப்பட்டமை
யுனிசெப் அமைப்பினால் தண்ணீர்தாங்கி அமைக்கப்பட்டமை

4. பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் பாடசாலையின் அபிவிருத்தியில் கொண்டுள்ள ஈடுபாடு
உ+ம் கடந்த வருடம் க.பொ.த சாதாரண தரத்தில் சித்தி அடைந்த மாணவர்களுக்கு பழைய மாணவர் ஒருவரால் துவிச்சக்கர வண்டிகள் அன்பளிப்பு செய்யப்பட்டமை.

5. சாதகமான அரசியல் சூழல் காணப்படல்.

இவை எமது பாடசாலைக்கு வாய்ப்புக்களாக அமைந்து பாடசாலையின் வளர்ச்சிக்கு வழிகாட்டுவனவாக உள்ளன.

4. அச்சுறுத்தல் (threat)

புறச்சூழல் காரணிகளிலே பாடசாலைக்கு இருக்கும் பாதிப்பான காரணிகளை அச்சுறுத்தல் எனலாம். எனவே எமது பாடசாலையின் வளர்ச்சிக்கு பின்வரும் காரணிகள் அச்சுறுத்தலாக உள்ளன.

1. பலவீனமான உட்கட்டமைப்பு வசதிகள் காணப்படல்
உ+ம் போக்குவரத்து + மின்சாரம்
2. பருத்தித்தறை பிரதான வீதியில் இருந்து ஏறக்குறைய 4km வரையிலான தூரம் மிகவும் சனநடமாட்டம் அற்ற வெளிப்பிரதேசமாக காட்சி அளித்தல்
3. குழாய்நீர் விநியோகமானது சில சமயங்களில் ஒழுங்கான முறையில் கிடைக்காமை
4. மழைக்காலங்களில் வீதியால் பயணம் செய்ய முடியாமை
5. சீரற்ற காலநிலை காணப்படல்
உ+ம் காலநிலை எமக்கு இடம் தராமையினால் அனேகமான ஊழியர்கள் அடிக்கடி நோய்வாய்ப்படுதல்.

பாடசாலையின் வளர்ச்சிக்கும், எழுச்சிக்கும் மேலே கூறப்பட்டவை தடையாக உள்ள அச்சுறுத்தல் காரணிகளாக உள்ளன.

எனவே நாம் மேலே காட்டப்பட்ட SWOT ஆய்வின் மூலம் இனங்காணப்பட்ட விடயங்களில் பலவீனங்கள் யாவும் சிறந்த முகாமைத்துவத்தின் அனுபவத்தினால் பலங்களாக மாற்றப்பட்டும் அச்சுறுத்தல் காரணிகள் யாவும் வாய்பபுக்களாக மாற்றப்பட்டும் காணப்படுமே ஆனால் எமது பாடசாலையானது மிகக்குறுகிய காலத்திற்குள் புதுமைகள் பல படைத்து நவீன உலகிற்கு ஏற்றவாறு மாணவர்களையும் உருவாக்கி கல்வி அபிவிருத்தி என்பதை துரிதமாகவும், முழுமையாகவும் அடைய முடியும் எனக் கூறினால் மிகையாகாது.

**சிந்தனைக்கு சில நிமிடங்கள்................**

உங்களை நீங்களே மதிப்பது ஆணவம் பிறர் உங்களை மதிப்பது பெருமை.
உண்மைக்குப் பயப்படுகிறவன் ஒருவருக்கும் பயப்படமாட்டான்.
கல்வியின் நோக்கம் மக்களைச் சிந்திக்கத் தூண்டுவது.
சாதனை படைக்கத் துடிப்பவன் அடுத்தவர் கூறும் விமர்சனக் கருத்துக்களை கேட்கமாட்டான்.
பிறர்மேல் குற்றம் காண்பதற்குப் பதிலாக உங்கள் குற்றங்களைத் தேடி அவற்றை அழியுங்கள். உங்களுடைய குற்றம் ஒன்றைத் தேடி அறிவது பிறரின் 1000குற்றங்களை காண்பதை விட மேலானது.

## வாழ்க்கையில் வெற்றி பெற்றோரின் ஏழு பழக்கங்கள்

## Seven Habits OF Hight Effective peoplke

## வாழ்வில் வெற்றியடைய உதவும் 7 பழக்க வழக்கங்கள்

1. முன்னேற்பாடாகச் செயற்படுதல்
   Be Proactive

2. முடிவை எண்ணித் தொடங்கு
   Begin With the End in Mind

3. முதன்மையான விடயங்களை முதலில் செய்தல்
   ut Frist Thing First

4. வெற்றி - வெற்றி எனச் சிந்தித்தல்
   Think Win - Win

5. முதலில் நீங்கள் மற்றவர்களை விளங்கிக் கொள்ளுங்கள்
   Seek Frist to Unders tand

6. கூட்டு வலுவூட்டல்
   Synergize

7. அரிவாளைத் தீட்டுதல்
   Sharpen the Saw

**ஸ்ரீபன் கோவி (முகாமைத்துவ நிபுணர்)**
Stephen R . Covey
**(1989)**



## J/Vatharawattai Vigneswara Vidyalayam Prefect - 2010

**Seated (L-R) :** Miss.Kalasini Sinnarajah, Mr.M.Perinpamoorthy, Mast.P.Jasikan, Mr.J.A.Thavanayagam(Principal) Miss.M.Jasinthiny, Mr.K.Kirubakaran, Mrs.Elakkunadevi Kanagalingam.

**Standing 1st row (L-R) :** Miss.K.Kalpana, Miss.A.Niruba, Miss.T.Tharsana, Miss.P.Kajitha, Miss.R.Keerthana, Miss.K.Keerthiga, Miss.S.Ejintha, Miss.A.Lavanja, Miss.N.Karunja, Miss.V.Vithitha.

**Standing 1st row (L-R) :** Mast.S.Lavojan, Mast.R.Nivethan, Mast.L.Thajinthas, Mast.Y.Prathaban, Mr.P.Thusipuvan, Mast.T.Arikaran, Mast.R.Surekulan, Mast.L.Jesinthas, Mast.L.Keerthikan, Mast.A.Thujinthan, Mast.N.Pratheep



# வாதரவத்தைக் கிராமம் அன்றும் இன்றும்

**இரத்தினசிங்கம் கோகுலன்**
H.N.D.A, ஆசிரியர், பழைய மாணவர்

முன்னொரு காலப்பகுதியில் வலி கிழக்குப் பகுதியின் செழிப்பு மிக்க கிராமங்களிலொன்றாக விளங்கிய வாதரவத்தை இன்று செழிப்பிழந்து வரட்சியும் வறுமையும் புடை சூழ்ந்த கிராமமாக மாறி நிற்கின்றது. வடக்கே கப்பூதுவும், தெற்கே மட்டுவிலும், கிழக்கே சரசாலையும் மேற்கே புத்தூரும் இக் கிராமத்தின் நாற்புற எல்லைகளாக விளங்குகின்றன. வாதரவத்தை, வீரவாணி, பெரியபொக்கணை ஆகிய மூன்று குக்கிராமங்கள் உள்ளடங்கியதாக இக்கிராமம் அமைந்துள்ளது.

முற்காலத்தில் விவசாயத்தில் சிறந்து விளங்கிய இக்கிராமத்தில் வற்றாளையும் நெல்லும் சிறப்புற செய்கை பண்ணப் பட்டதாகவும் தென்னிலங்கை வியாாரிகள் இங்கு வந்து அவற்றை கொள்வனவு செய்து கொண்டு சென்றதாகவும் அறிய முடிகின்றது. தென்னிலங்கை வியாபாரிகளுடன் கொடுக்கல் வாங்கல்கள் காரணமாகவே வாதரவத்தை என்னும் பெயர் இக்கிராமத்திற்கு வந்ததாகவும் இங்கு கூறப்டுகின்றது. ஒரு முறை இக் கிராம விவசாயிகளிடம் வற்றாளைக் கிழங்கு கொள்வனவு செய்வதற்கு சிங்கள வியாபாரி ஒருவர் வந்திருந்ததாகவும் அவ்வேளை உள்ளூர் வியாபாரிகளின் கைவசம் வற்றாளைக்கிழங்கு இல்லாததனால் வா-தர-வத்தைக்கு எனக் கூறியதாகவும் வா.தாறேன் வத்தைக்கு (வத்தை என்பது சிங்களத்தில் தோட்டத்தைக் குறிக்கும்) என்பதாகும். இதுவே பின்நாளில் வாதரவத்தை என்றாயிற்று என்கின்றனர் முதியோர். அதுவரை இப்பிரதேசம் புத்தூர் கிழக்கு பகுதி என்றே அழைக்கப்பட்டதாகவும், புத்தூர் கிழக்குத் தலைமைக்காரரின் கீழேயே நிர்வகிக்கப்பட்டும் வந்ததாகவும் அறியமுடிகின்றது.

1980களில் வாதரவத்தை தனிக்கிராமசேவகர் பிரிவாக (J/280) பிரிக்கப்பட்டதுடன் முதலாவது கிராம சேவகராக திரு.சு. சண்முகவடிவேல் அவர்களும் அவரைத் தொடர்ந்து சு.வைத்தியநாதன், S.நந்தகோபாலன்,S.தனபாலசிங்கம் ஆகியோரும் கடமையாற்றி உள்ளனர். 1994 ஆகஸ்ட் முதல் இன்று வரை திரு.ஐ.சிவாநந்தம் கிராம சேவையாளராக கடமையாற்றி வருகின்றதுடன் தற்போது 360 குடும்பங்கள் இங்கு வசித்து வருகின்றன.

இப்பகுதியில் மக்கள் குடியிருப்பதற்கு ஏதுவாக அமைந்தவை யாவையென நோக்கும் போது முன்னைய காலங்களில் இப்பிரதேசம் தானியங்கள், உப உணவுப்பயிர்கள் செய்கை பண்ணக் கூடிய ஓரளவு வளமிக்க பகுதியாக இருந்திருக்கின்றது என்றே அறிய முடிகின்றது. இப்பிரதேசத்தில் நன்னீர் வளமும் வாய்ப்பாக இருந்தமையால் அயற்பிரதேசத்தாரின் குறிப்பாக ஆவரங்கால் 10ஆம் கட்டைப்பகுதி மக்களும் கரவெட்டிப் பிரதேச மக்களும் விவசாய செய்கைக்காக வந்து சென்றவர்களில் ஒருசிலர் இப்பகுதியில் குடியேறி விட்டனர் எனவும் அதுவே இன்றைய சந்ததியினரின் மூத்த குடி என்றும் அறியமுடிகின்றது. பழைய காணி உறுதிகள் மூலம் இதனை உறுதிப்படுத்திக் கொள்ள முடிகின்றது.

பயிர் செய் நிலங்களும் விலங்கு வளர்ப்புக்கேற்ற மேய்ச்சல் நிலங்களும் காணப்பட்டமையாலும் இப்பிரதேசத்தவர்கள் பெரும் பண்ணையாளர்கள் போல் வாழ்ந்து வந்ததாகவும் உயர் சாதியாளர்களாக கருதப்பட்டதுடன் அயற்கிராமங்களிலிருந்து குறிப்பிட்டோர் வருகை தந்து இவர்களது குலக் கடமைகளை நிறைவேற்றிவிட்டு நெல், வரகு, போன்ற தானியங்களையும் உப உணவுப் பொருட்களையும் கூலியாகப் பெற்றுச் சென்றதாகவும் கூறப்படுகின்றது.

இப்பிரதேசத்துடன் முதன் முதலில் திருமணத் தொடர்பை மயிலிட்டி தெற்கு கட்டுவனைச் சேர்ந்த முத்துதம்பி வேலாயுதர் என்பவர் ஏற்படுத்தியதாகவும் பின்னர் இப்பிரதேசங்களிலிருந்தும் திருமணத் தொடர்புகள் ஏற்பட்டதுடன் இப்பிரதேச வளத்தினைக் கருதி இங்கேயே நிரந்தர குடிமக்களாக மாறி விட்டதாகவும் மூத்த குடிகள் மூலம் அறிய முடிகின்றது.

சிறந்த நீர்வளமும் மக்கள் செல்வந்தர்களாகவும் இருந்தார்கள் என்பதற்கு பின்வருவனவற்றை உதாரணங்களாகக் கொள்ளலாம்.

வாதரவத்தை பிரதேசத்தின் எல்லாப் பகுதிகளிலும் தூர்ந்து போன மண் கிணறுகளும், கட்டுக் கிணறுகளும் ஆடு கால்களுடன் (சீமெந்து கட்டு, பூவரச மரத்தால் ஆனவை) காணப்படுகின்றன. அத்துடன் கட்டுக் கிணறுகள் சிறிய நீர்த் தொட்டிகளுடன் குடியிருப்புக்கள் அற்ற பிரதேசங்களில் காணப்படுகின்றன. இப் பிரதேசம் உவர்த் தன்மையுடையதாக காணப்பட்டிருக்குமாயின் குடியிருப்புக்கள் அற்ற பகுதியில் கிணறுகளும் கிணற்றுடன் கூடிய தொட்டிகளும் கட்டும் தேவை இருந்திருக்காது. இவை விவசாய நிலங்களுக்கு நீர் பாய்ச்சவும் ஆடு, மாடுகள் நீர் அருந்தவும் அமைக்கப்பட்டவையாகும்.

இக் கிராமத்திலுள்ள பல்லையக்குளம், மணியர்குளம், இராமநாதன்குளம், மணிக்கம்பிராலிக் குளம் போன்ற சிறிய கேணிகள் ஆவுரஞ்சிக்கற்களுடன் காணப்படுவதுடன் வாதரவத்தை தெணியாப் பகுதியில் ஒரு சுமை தாங்கியும் ஆவுரஞ்சாட்டி வயல் பிரதேசத்தில் ஒரு சுமை தாங்கியும் வீரவாணிச் சந்திப் பகுதியில் ஒரு சுமைதாங்கியும் காணப்படுகின்றது. இந்த ஆவுரஞ்சிக் கற்களும் சுமை தாங்கிகளும் வீரவாணிச் சந்திப் பகுதியில் ஒரு சுமைதாங்கியும் அக்காலத்தில் பொருளாதாரத்திலும் சாதிமுறையிலும் உயர்ந்த மக்களாலேயே கட்டப்பட்டதாக அறிய முடிகின்றது. எனப் பேராசிரியர் ப.புஸ்பரட்ணம் அவர்கள் குறிப்பிடுவதன் மூலம் இப்பிரதேச மக்களின் பொருளாதார நிலையை நாம் அறிய முடியும். இவற்றுள் மணியர் குளம், வே.ஆறுமுகம் என்பவராலும், இராமநாதன் குளம் இராமநாதன் என்பவராலும், தெனியாப் பகுதியிலுள்ள சுமைதாங்கி வாதரவத்தைப் பொதுமயானம் என்பன சி.அம்பலம் என்பவராலும் கட்டப்பட்டதாக அறிய முடிகின்றது.

இப்பிரதேசத்தில் மா,பலா,பனை,தென்னை, மாதுளை நாவல், தோடை போன்ற மரங்கள் செழித்து வளர்ந்திருப்பதுடன் பெரும் செல்வந்தர்களாக அம்பலம் கந்தையா, அம்பலம் சின்னத்தம்பி, வேலுப்பிள்ளை கனகசபை, கந்தையா கனகசபை, வேலுப்பிள்ளை ஆறுமுகம், சி.இராமலிங்கம், சின்னத்தம்பி வைரவிப் பிள்ளை போன்ற அரச ஒப்பந்த காரர்கள் வாழ்ந்து வந்ததுடன் இவர்களில் வே.ஆறுமுகம் அ.கந்தையா, சி.அம்பலம் ஆகியோருக்கு மட்டுவில்

பகுதியில்பெரும் நிலப்பரப்புக்கள் சொந்தமாக இருந்ததுடன் இன்றும் இருப்பதைக் காணலாம். இவர்களில் பணக்காரக் கந்தையா எனப்படும் அ.கந்தையாவால் முதன் முதலில் 1950களில் கல்வீடு கட்டப்பட்டுள்ளதாகவும், வே.ஆறுமுகத்தால் 1946இல் கேதுவுப் பிள்ளையார் ஆலயமும், 1953இல் நாச்சார் வீடும் கட்டப்பட்டதாகவும் மூத்த குடிமக்கள் மூலமும், கல்வெட்டுப் புத்தகங்கள் மூலமும் அறிய முடிகின்றது. ஆரம்ப காலப்பகுதி மக்கள் பாடசாலையைச் சூழவுள்ள பகுதிகளிலேயே குடியேறினர். பின்னர் படிப்படியாக எல்லாப் பகுதிகளிலும் குடியேறினர். அந்த வகையில் வீரவாணிப்பகுதியில் முதன் முதலில் நல்லதம்பி, கதிர்காமு ஆகியோரும் பெரிய பொக்கணைப் பகுதியில் 1940 களில் முருகர், முருகேசர், புள்ளிச் சுப்பர் ஆகியோரும் குடியேறியதாக அறிய முடிகின்றது. இங்குள்ள மக்கள் ஒரே குடும்பத்தவர்களாகக் காணப்பட்டமையால் எந்தவொரு நிகழ்விலும் எல்லோரும் ஒற்றுமையாகப் பங்கு பற்றியதுடன் தற்பொழுது அந்த நடைமுறை பின்பற்றப்படுகின்றமையை காணமுடிகிறது.

1960களில் உப்பாற்று தடுப்பணைகள் போடப்பட்டமையை தொடர்ந்து இப்பிரதேச கிணறுகள் உவரடையத் தொடங்கியதாக மூத்த குடிமக்கள் மூலம் அறிய முடிகின்றது. இதனால் நெல், வரகு, வெங்காயம்,மிளகாய் போன்ற பயிர்கள் எரிவு நோய் வந்துஅழிவடைய தொடங்கியதுடன் பயன்தரும் மரங்களும் அழிவடைந்து போனது. இதனால் மக்களில் சிலர் வன்னிப் பெரு நிலப்பரப்பிலுள்ள கிளிநொச்சி, நாகபடுவான், அக்கரையான், துணுக்காய் போன்ற பகுதிகளுக்கு சென்று குடியேறினர். வாதரவத்தையை விட்டுப் பிரிய முடியாத மக்களில் சிலர் தமது விவசாய நிலங்களைக் கைவிட்டுக் கூலி வேலைகளை மேற்கொள்வதற்கு தலைப்பட்டனர். இதனால் பாதிக்கப்படாத மக்கள் விவசாயம் செய்தனர். படிப்படியாக நீர் உவராகிமையால் குடிநீர்ப் பிரச்சினை எற்பட்டது. இக் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கும் முகமாக அப்போதைய பாராளுமன்ற உறுப்பினர் கதிரவேற்பிள்ளை அவர்களின் முயற்சியினால் 1980இல் புத்தூரில் இருந்து குழாய் மூலம் நீர் கொண்டுவரப்பட்டு நீர்த்தாங்கிகள் மூலம் பொது மக்களுக்கு விநியோகிக்கப்பட்டது.இந்த நீர் விநியோகத்திட்டம் அப்போதைய நீர்ப்பாசன அமைச்சரும் பிரதம மந்திரியுமான கௌரவ றணசிங்க பிறேமதாஸாவால் 1981ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்டது.

தற்பொழுது இந்தக் கிராமமானது. கல்வியை மட்டுமே மூலதனமாகக் கொண்டு இயங்குவதுடன் அரச தொழில் முயற்சிகளைப் பெற்று இளைஞர் யுவதிகள் வெளியூர்த் திருமணத் தொடர்புகளை ஏற்படுத்தி அப்பிரதேசங்களிலேயே தங்கி விடும் பரிதாப் நிலை காணப்படுவதுடன், வளம் கொழித்த பூமி இன்று வறிய பூமியாக மாறிவிட்டது. வாதரவத்தையானது பழைய நிலையை அடைய வேண்டுமாயின் தற்போதைய வளங்களைப் பயன்படுத்தி அபிவிருத்தியடையச் செய்ய வேண்டும். இதற்குப் பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

**போக்குவரத்து**

எமது கிராமம் தனித்து விடப்பட்ட கிராமமாகக் காணப்படுகின்றமையால் போக்குவரத்து பெரும் பிரச்சினையாக காணப்படுகின்றது.

1985க்கு முற்பட்ட காலப்பகுதியில் 74 ஆம் இலக்கப் பேருந்து சாவகச்சேரி - வாதரவத்தை - யாழ்ப்பாணம் வழியான சேவையில் ஈடுபட்டது. இன்று அச்சேவை நிறுத்தப்பட்டு விட்டது. சங்கானை சாவகச்சேரி சேவையில் ஈடுபடும் 775ஆம் இலக்கப் பேருந்து மூன்று தடவையே சேவையில் ஈடுபடுகின்றது. இதனால் வாதரவத்தையிலுள்ள எல்லா மக்களும் பயனடைய வேண்டுமாயின் சங்கானை சாவகச்சேரி இணைப்பு வீதியை அந்திரானையில் இருந்து வாதரவத்தைப் பகுதியையும் இணைக்கும் 2Km நீளமுடைய பிரதேசசபைக்குரிய வீதியைப் புனரமைத்துச் சங்கானை - புத்தூர் - வாதரவத்தை - வீரவாணி சாவகச்சேரியூடாக சேவை நடாத்தப்படுமாயின் ஓரளவுக்கு மக்கள் பயனடைவர்.

இதனை விட புத்தூர் - வாதரவத்தை பெரியபொக்கணை - கப்பூது - வரணிவரை பேருந்து சேவை நடத்தப்படுமாயின் வாதரவத்தை கப்பூது மக்கள் மட்டுமன்றி புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, நீர்வேலி, சுன்னாகம், வசாவிளான், புன்னாலைக்கட்டுவன், வரணி, மந்துவில், கொடிகாமம், கரவெட்டி மக்களும் பயனடைவர். இவ் வீதியானது புத்தூரிலிருந்து வாதரவத்தை வரை வீதி அபிவிருத்தித் திணைக்களத்திற்கு சொந்தமாகவும் வாதரவத்தையிலிருந்து பொக்கணை வரை (2Km) பிரதேச சபைக்குரிய தார் வீதியாகவும் பெரிய பொக்கணையிலிருந்து கப்பூது வரை (1.5Km) மண்வீதியாகவும், கப்பூதில் இருந்து வரணி வரை தார் வீதியாகவும் காணப்படுகின்றது. இதனால் வீதி புனரமைப்பில் ஒரு குறுகிய வழி கிடைக்கும். அத்துடன் யாழ் - பருத்தித்துறை வீதி நெருக்கடியை கப்பூது - கரவெட்டி - மந்திகையூடாக பயணிப்பதன் மூலம் நிவர்த்தி செய்யலாம்.

**கைத்தொழில் விருத்தியும் வேலை வாய்ப்பும்.**

தொழிற்சாலைகள் நிறுவக்கூடிய கடல்நீர் ஏரியை அண்டிய இப்பிரதேசத்தில் பாரிய தொழிற்சாலைகளை பொறுப்பான அமைப்புகள் நிறுவி வறுமையில் வாடும் கூலித் தொழிலாளருக்கு நிரந்தர வேலை வாய்ப்பினை வழங்கலாம். 1995 இற்கு முன் உள்ளூரில் விளையும் சம்புப்புல்லைக் கொண்டு பெரிய பொக்கணையில் உள்ள பாய்த் தொழிற்சாலை மூலம் கணிசமானவர்கள் வேலை வாய்ப்பைப் பெற்றனர்.

இன்று இங்கு வளரும் சம்பு வேறு பிரதேசங்களுக்கு வெட்டி விற்கப்படுகின்றது. உப்பளத்தில் வர்த்தக அடிப்படையில் உப்பை விளைவித்து வேலை வாப்பையும் நுகர்வையும் பூர்த்தி செய்யலாம். உள்ளூர்க் கைத்தொழிலாக பன்னவேலை, தாழை இலையில் செய்யப்பட்ட குடை என்பன காணப்பட்டன. தற்போது இவை பயன்பாடற்றவையாகி விட்டன. 1970 இல் வாதரவத்தை நெசவு நிலையம் பல பெண்களுக்கு வேலை வாய்ப்பைப் பெற்றுக் கொடுத்தது. தற்போது இது யுத்த நிலையால் அழிவடைந்து காணப்படுகின்றது. இதனை மீள இயக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

**நன்னீர் வசதி**

எழுபதுகளிற்கு முன்பு வாதரவத்தை கிராமத்து நீர் நிலைகள் நன்

நன்னீராகவே காணப்பட்டன. படிப்படியாக உவராகி இன்று பருத்தித்துறை வீதியின் கிழக்குப் பகுதி வரை சென்று விட்டது. இதற்குத் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இதற்குத் தொண்டைமானாறு, செம்மணி தாம் போதிகளை மீளமைத்து உப்பாறை நன்னீர் ஏரியாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இப் பிரதேசத்தில் கேதுவூர், வேலங்காடு தோட்டப்பகுதிகளிலேயே சிறிதளவு நன்னீர் கிடைக்கின்றது. தற் பொழுது வாதரவத்தையில் பாரிய நீர்த்தாங்கி அமைத்து நிலாவரைப் பகுதியிலிருந்து நீர் தருவிக்கப்பட்டு வீடுகளுக்கு விநியோகிக்கப்படுகின்றது. இத் திட்டம் பூரணமாக பூர்த்தியடைய வேண்டும்.

தற்பொழுது இரணைமடுக் குளத்து நீரை யாழ்ப்பாணப் பிரதேசத்துக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இத் திட்டமானது வாதரவத்தைப் பகுதிக்கு கொண்டுவரப்படும் பட்சத்தில் 1960 களிற்கு முற்பட்ட காலப்பகுதியில் உபஉணவுப் பயிர்களும், நெல்லும் எவ்வாறு செழித்தோங்கியதோ அத்தகைய நிலைக்கு கொண்டுவரப்படும். தற்பொழுது மழையை நம்பியே உப உணவுப் பயிர்களும், நெல்லும் செய்கை பண்ணப்படுகின்றன. அத்துடன் கைவிடப்பட்ட பல ஆயிரம் வயல் நிலங்களை மீளப் பயன்படுத்தக் கூடியதாக இருக்கும்.

**சுகாதார வசதி.**

நிரந்தர வைத்தியசாலை இன்மையால் நீண்ட தூரம் பயணித்தே பிரதேச மக்கள் நோய்களைக் கண்டறிவதுடன் குணப்படுத்தலிலும் ஈடுபடுகின்றனர். 1995 இற்கு முன் வலி கிழக்குப் பிரதேச சபையால் ஆயுள் வேத மருந்தகம் நடாத்தப்பட்டது. தற்பொழுது இது இயங்குவதில்லை அத்துடன் இங்குள்ள ஆரம்ப சுகாதார நிலையத்துக்கு நிரந்தர வைத்தியரை நியமிப்பதன் மூலம் மக்களின் இடர்களை நீக்கலாம்.

**சுற்றுலா மையமாக மாற்றல்.**

இக்கிராமமானது ஒரு சதுப்பு நிலச் சூழல் தொகுதியை கொண்டமைந்துள்ளது. மாரிகாலத்தில் நீர் நிறைந்து பச்சைப் பசேலென காட்சியளிப்பதுடன் வெளி நாட்டுப் பறவைகளைப் பார்ப்பது ஒரு கண் கொள்ளாக் காட்சியாகக் காணப்படுகின்றது. இங்கு வெளி நாட்டுப் பறவைகளான ஊரியான், நாரை, கோட்டான், சிறகுதாரா போன்றவையும், கொக்கு, நீர்க்காகம், ஆட்காட்டி போன்ற உள்ளூர் பறவைகளும் கடல் நீர் ஏரிப் பகுதியில் கூட்டம் கூட்டமாக மீன்களைக் கொத்தி உண்பது ஒரு கண்கொள்ளாக் காட்சியாகும். சூரிய உதயம், சூரிய அஸ்தமனங்களை கடல் நீர் ஏரிப்பகுதியில் தெளிவாகப் பார்க்க முடியும் இவற்றை விடக் கௌதாரி, புறா, குயில், செண்பகம், காடை, முயல்க்கிளாந்தி, சிட்டுக்குருவி, தூக்கணங்குருவி என்பன தமது குரல் வளத்தால் கிராமத்துக்கு அழகு சேர்க்கின்றது. காட்டு விலங்குகளான மரநாய், காட்டுப்பூனை, நரி, பன்றி, சருகுபுலி, முயல், மலைப்பாம்பு வகையைச் சேர்ந்த வெங்கிளாந்திப் பாம்பு

போன்றவை. இங்கு வாழ்கின்றன. இவற்றுள் முயல், பன்றி என்பன வேட்டையாடப்பட்டு வருகின்றன. இங்குள்ள காடுகளில் பொற்பத்தை, கண்டல், கண்ணா, கிஞ்ஞா, தாழை, தில்லை, சம்பு, ஈஞ்சு, நாகதாளி, கற்றாளை போன்றவை பார்ப்பதற்கு ஓர் கண் கொள்ளாக் காட்சியாகும்.
இவற்றைப் பேணிக் கடல் நீர் ஏரியில் நீச்சல் தடாகத்தை அமைத்து சுற்றுலா மையத்தை நிறுவுவதன் மூலம் அபிவிருத்தியில் மேன்மையடைலாம்.

**காடு வளர்ப்பு.**

வெளிப் பிரதேசங்களின் வரட்சியைத் தாங்கி வளரக்கூடிய பூவரசு, புளி, வேம்பு, சவுக்கு போன்ற மரங்களை நடுவதன் மூலம் கோடை காலத்தில் ஏற்படும் புழுதிப்படிவை தடுப்பதுடன் காட்டுப் பரப்பை அதிகரித்துச் சூழலைப் பேணலாம். இதற்கு சூழல் பாதுகாப்பு நிறுவனங்கள் முன் வர வேண்டும். கிராம அபிவிருத்திச் சங்கத்தால் 2005 இல் நடைமுறைப் படுத்திய சவுக்கு வளர்ப்பு வெற்றியளித்துள்ளது.

**பாடசாலை அபிவிருத்தி.**

இப்பிரதேசத்தில் யா/வாதரவத்தை விக்கினேஸ்வரா வித்தியாலயம் என்னும் பாடசாலை தரம் 1-11 வரையான மாணவர்களுக்கு கல்வியை வழங்குகின்றது. தரம் 11 வகுப்பில் வருடாவருடம் 75% ற்கு மேற்பட்ட மாணவர்கள் உயர்தரத்திற்கு தகுதி பெறுகின்றனர். உயர்தரப் படிப்பிற்காக நாளாந்தம் 6 கி.மீ.தூரம் சைக்கிளில் மிக அருகிலுள்ள உயர்தரப் பாடசாலை நோக்கி 12கி.மீ.தூரம் நாளாந்தம் போக வேண்டியுள்ளது.

**பிரதேச கலையாக பப்பவராயன் கூத்து.**

பப்பவராயன் கூத்து 19 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிந்தே வாதரவத்தை மக்களால் ஆடப்பட்டது. பஞ்ச பாண்டவர், கௌரவர் பிரச்சினையும் அருச்சுனன் மகன் பப்பவராயன் பாண்டவர்களின் பட்டயம் கட்டிய குதிரையைப் பிடித்துக் கட்டியதால் பாண்டவருக்கும் பப்பவராயனுக்கும் இடையிலான போரில் அருச்சுனன் இறக்க அலவி, நாக கன்னிகைகளினால் சிரஞ்சீவி மூலிகையால் அருச்சுனன் உயிர்ப்பித்தலையும் இக் கூத்து எடுத்துக் காட்டப்படுகிறது.
இக் கூத்தின் அண்ணாவியாக முதலில் ஆறுமுகம் இளைய தம்பியும் (பிறப்பு -1890 இறப்பு - 1960) கார்த்திகேசு வேலுப்பிள்ளையும் (1880 - 1960) இருந்தனர். இவர்களின் காலத்து கூத்துக் கலைஞர்களின் விபரங்கள் தெரியவில்லை. இவர்களின் பின் அண்ணாவியாக இளைய தம்பியின் மகன் இராசையா இருந்தார். இவரின் (17.03.1923 தொடக்கம் 08.10.2003) கூத்துக் கலைஞர்களாக பின்வருவோர் காணப்பட்டனர்.
1. மிருதங்கம் வாசிப்பவராக - இளையதம்பி இரத்தினம் கோமாளியாக - இராசையா திருநாவுக்கரசு பஞ்ச பாண்டவர்களாக பின்வருவோர் காணப்பட்டனர்.
தருமனாக - இளையதம்பி செல்லத்துரை
வீமனாக - தில்லைப்பிள்ளை இராசதுரை
அருச்சுனனாக - இராமலிங்கம் பொன்னையா

நகுலனாக - இளையதம்பி இரத்தினம்
சகாதேவனாக - சரவணமுத்து இராமலிங்கம்
திரௌபதையாக - சின்னத்தம்பி அன்னராசா
அல்லியாக - கந்தையா சிவ சிங்கம்
நாக கன்னியாக - தில்லைப்பிள்ளை அழகதுரை
பப்பவராயனாக - தம்பையா குலசேகரம்
எமனாசூரன் மந்திரியாக - சரவணமுத்து செல்லத்துரை
விடகேசனாக - சரவணமுத்து தம்பையா
மேகவர்ணனாக (குதிரை ஓட்டி) சின்னத்தம்பி அன்னராசாவும் நடித்தனர்.

இக் கூத்தானது யாழ்ப்பாணம் நகராட்சி விழா கோப்பாய் முத்தமிழ் விழா, புத்தூரார், ஆவரங்கால், அச்சுவேலி, மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் வேட்டைத் திருவிழா, உடுத்துறை போன்ற இடங்களில் மேடையேற்றப்பட்டது.

இலங்கைப் பிரதமர் சேர்.யோன்கொத்தலாவலை யாழ்ப்பாணம் வந்தபோது வரவேற்பு விழாவில் இக்கூத்து மேடையேற்றப்பட்டது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

**வாதரவத்தை இந்து ஆலயங்கள்**

எமது கிராமத்திலுள்ள ஆலயங்களில் கேதுவுப்பிள்ளையார், இயமாவில் துர்க்கையம்மன், வாதரவத்தை நாச்சிமார், வீரவாணி, சப்தகன்னிமார், வீரவாணி நாகதம்பிரான் ஆகிய ஆலயங்களிலும் ஆகம முறைப்படியும் வாதரவத்தை காளிகோவில், வாதரவத்தை நரசிங்கவைரவர், வீரவாணி ஞானவைரவர்

வீரவாணி ஐயனார், பெரிய பொக்கனை அம்மன் ஆகிய ஆலயங்களில் ஆகமம்சாராது கிராமப் பூசாரிகளாலும் பூசைகள் இடம்பெறுகின்றன. வாதரவத்தை கேதுவுப் பிள்ளையார் ஆலயமானது ஆரம்பத்தில் ஈஞ்சு, பூவரசு, வேம்பு, கொண்டல் போன்ற மரங்களால் சூளப்பட்ட சோலையில இருந்தது. அப்பொழுது சின்னத்தம்பி, வேலுப்பிள்ளை என்பவரின் கனவில் பிள்ளையார் தோன்றி தன்னை எவரும் கவனிப்பதில்லை என்றும் தனக்கு விளக்கு வைத்து படையல் செய்யுமாறு பணித்து தான் இருக்கும் இடத்தை காட்டினார். அன்றிலிருந்து அவர் பிள்ளையாருக்கு பந்தல் அமைத்து விளக்கு வைத்து வழிபடலானார். இவர் விடுகதை(நொடி)களை இயற்றியமையாலும் பிள்ளையாருக்கு பூசை செய்தமையாலும் நொடிப்பூசாரி என அழைக்கப்பட்டார். பின்பு ஓவசிரியராகவும் பெரும் செல்வந்தராகவும் இருந்த வேலுப்பிள்ளை ஆறுமுகம் என்பவரால் (கணக்கர்) 1946ம் ஆண்டு ஆகம முறைப்படி கட்டப்பட்டு பூசைகள் இடம்பெறுவதுடன் ஆறுமுகத்தின் வாரிசுகளால் பராமரிக்கப்பட்டும் வருகின்றது. இவ் ஆலயத்தில் வருடாந்த திருவிழாவானது சித்திரை மாத அத்த நட்சத்திரத்தை தீர்த்த நாளாகக் கொண்டு 10 தினங்கள் அலங்காரத் திருவிழா இடம்பெறும். இதனைவிட நவராத்திரி, விநாயகர் சதுர்த்தி, பிள்ளையார் கதை திருவெம்பாவை போன்ற விழாக்கள் சிறப்பாக கொண்டாடப்படுவதுடன் சித்திரா பௌர்ணமித்திருவிழா ஆரம்பகாலம் தொடக்கம் சிறப்பாக கொண்டாடப்படுவதுடன் இத்திருவிழாவில் அயல்கிராமமக்களும் வெளிமாவட்ட மக்களும், புலம்பெயர் உறவுகளும் கலந்து சிறப்பிக்கின்றனர்.

வீரவாணி சப்த கன்னிமார் ஆலயம் சாவகச்சேரி வீதியில் அமைந்துள்ளது. இவ்வாலயத்தில் விசாகப் பொங்கல் சிறப்பாக கொண்டாடப்படுகின்றது. இவ் ஆலயத்தில் ஆரம்ப காலங்களில் உடன்கிணறு வெட்டி கிடைக்கும் புது நீரை எடுத்தே விசாகப் பொங்கல் பொங்கப்படும் தற்போது இப்பிரதேசம் உவராகிமையால் இவ் நடைமுறை கைவிடப்பட்டுள்ளது. இதனை

விட நவராத்திரி, கேதாரகௌரி, திருவெம்பாவை போன்ற விரதங்கள் சிறப்பாக கொண்டாடப்படுகின்றது. இவ் ஆலயமானது நாகலிங்கம் நவரத்தினம் என்பவரால் கட்டப்பட்டு அவர்களால் பராமரிக்கப்பட்டு வருகின்றது.

வாதரவத்தை துர்க்கை அம்மன் ஆலயமானது ஆரம்பகாலத்தில் ஆகமம் சாராது பூசாரிகளால் பூசை இடம்பெற்றது பின்னர் பொ.கந்தசாமி அவர்களாலும், ச.கிருஸ்ணபிள்ளையின் மைந்தர்களாலும் காட்டப்பட்டது. இவ் ஆலயத்தின் வருடாந்தத் திருவிழாவானது ஆவணிமாத சுவாதி நட்சத்திரத்தை ஆரம்பமாகக் கொண்டு 11 தினங்கள் இடம்பெறும். இதனை விட வைகாசி விசாகப் பொங்கல், ஆடிப்பூரம், நவராத்திரி கேதாரகௌரி விரதம், திருவெம்பாவை ஆகியவை சிறப்பாக கொண்டாடப்படுகின்றது.

இவற்றை விட வாதரவத்தை நாச்சிமார், வாதரவத்தை வைரவர், வாதரவத்தை காளி கோவில், வீரவாணி நாகதம்பிரான், வீரவாணி ஐயனார், வீரவாணி ஞானவைரவர் ஆகிய ஆலயங்களிலும் வைகாசிப்பொங்கல் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. வைகாசிவிசாகப் பொங்கல் இடம்பெறும் ஆலயங்களில் வழுந்து வைத்து மடைபைரவி பொங்கல் திருவிழா இடம்பெறும். இவற்றில் வீரவாணி ஐயனார் கோவிலானது தாழை மரங்களால் சூழப்பட்ட காட்டுப்பகுதியில் காணப்படுவதுடன் வைகாசிப் பொங்கல் வேள்வி அன்று மிருகங்கள் பலியிடப்பட்டன. தற்பொழுது மிருகங்களுக்கு பதிலாக கோழிகள் பலியிடப்படுகின்றன. நாகதம்பிரான் ஆலயத்திற்கு நோய் நொடிகளில் இருந்து பாதுகாப்பு பெறும்பொருட்டு விசாகப்பொங்கல் அன்று கோழிகள் நேர்த்தி வைத்து பொது மக்களால் வழங்கப்படும் முறையும் உள்ளது.

# நூற்றாண்டு பிரகடனம்



வித்தியாலயத்தின் நூற்றாண்டைப் பிரகடனம் செய்யும் முகமாக 2010.01.22 அன்று மாணவர்கள் பங்குபற்றும் வீதியோட்ட நிகழ்வு இடம் பெற்றது.

இந்நிகழ்வு ஆவரங்கால் சிவன் கோயில் முன்றலில் ஆரம்பித்து எமது பாடசாலையில் முடிவுற்றது.

முன்னாள் அதிபர் திரு.கா.தருமரத்தினம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு போட்டியை ஆரம்பித்து வைத்தார்.



# பள்ளி வாழ்விலும் சேவையிலும் நினைவுகள்

திரு.முத்தையா பேரின்பமூர்த்தி
ஆசிரியர்/பழைய மாணவன்

அப்போது என் வயது ஆறு. இன்று நூற்றாண்டு விழாக் காணும் எம் அன்னையின் கைகளில் 1979ல் ஒப்படைக்கப்பட்டேன். அன்று அதிபராக விளங்கியவர் தான் திரு.இராஜதுரை அவர்கள் மென்மையான சுபாவம், நேர்த்தியான மனப்பாங்கு நிறைந்த இவர் பெரு வள்ளலுமாவார். இவருக்கு அருளம்பலம் Sir, தம்பிராஜா Sir ஆகியோர் மிகவும் பக்க பலமாக விளங்கினர். எந்த ஒரு மாணவரும் இடைவிலகிச் செல்வதை விரும்பாத இவர் இடைவிலகும் மாணவர்களின் வீட்டிற்கே சென்று விடுவார். போக்குவரத்து, பெற்றோரின் அறியாமை போன்ற பல பிரச்சினைகள் நிறைந்த காலத்தில் தனது பணியைச் செவ்வனே நிறைவேற்றி ஓய்வு பெற்றார்.

அதிபர் இராஜதுரை அவர்களின் பின் திரு.ந.அருளம்பலம் அவர்கள் பாடசாலைப் பொறுப்பினை ஏற்றுச் செயற்படுத்தினார். பண்பாலும் கட்டுப்பாட்டாலும் பலரது உள்ளங்களை வென்றவர். நான் தந்தது என்று மற்றவர்களுக்குச் சொல்லாதே என்று கூறித் தான் தண்டனை வழங்குவார்.

ஆரம்பக் கல்வியினை அத்திவாரம் இட்டு அள்ளி வழங்கிய ஆசிரியர்களில் என்றுமே மறக்கமுடியாதவர்கள் சிறுப்பிட்டியைச் சேர்ந்தவர்களான திருமதி.பொன்னம்மா ரீச்சர், திரு.செ.செல்லத்துரை சேர், புன்னாலைக்கட்டுவன் திருமதி.த.சிவஞானசுந்தரம் ரீச்சர் ஆகியோர். பொன்னம்மா ரீச்சரை நாம் குட்டி ரீச்சர் என செல்லமாக அழைப்போம். குடுகுடுவென ஓடியும் நடந்தும் சிறு அழகான பாடல்கள், கதைகள் ஊடாக இரசனையை ஏற்படுத்திக் கற்பிப்பார்.

திரு.செல்லத்துரை சேர் அவர்கள் இரசனையுடன் பாடல் ஊடாகவும் நாளாந்த வாழ்க்கையோடும் தொடர்புபடுத்தி இலகுவாகக் கற்க வழிப்படுத்துவார். எழுமாற்றான முறையில் வாசிக்கச் செய்பவர். எந்த ஒரு மாணவரும் பாடவிடயத்தை விட்டு வெளியில் சிந்தனையைத் திருப்ப முடியாது.

அடுத்து வெள்ளை ரீச்சர் என நாம் அழைக்கும் புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த திருமதி த.சிவஞானசுந்தரம் ரீச்சர். இவர் சிறந்த சுகாதாரப் பழக்க வழக்கங்களை போதிப்பவரும், கடைப்பிடிப்பவரும் ஆவார். ஆரம்ப வகுப்புகளில் கணித பாடத்தை இந்த ரீச்சர் மாதிரி யாருமே கற்பிக்க முடியாது. ஏனென்றால் சரியான கற்றல் சாதனங்களைப் பயன்படுத்தி எளிமையாகக் கற்றலை மேற்கொண்டவர். இந்தத் தெய்வங்களை என்றுமே மறந்து விட முடியாது.

1983காலப்பகுதியில் அதிபர் சேவையுடன் திரு.சு.முத்துக்குமாரசுவாமி அவர்கள் கடமைப் பொறுப்புக்களை ஏற்றார். எதனையும் எளிதில் மறந்து விடவோ, நம்பி விடவோ மாட்டார். ஆசிரிய வளம் பற்றாக்குறையாக இருந்த காலம் அன்று நாட்டின் அரசியல் ஸ்திரத்தன்மை அற்ற காலம். இருந்தபோதும் 1985ல் நீண்ட காலம் நடைபெறாதிருந்த இல்ல விளையாட்டுப் போட்டியொன்றை ஏற்பாடு செய்து நடாத்திப் பெருவெற்றி கண்டவர்.

1986ல் ஆங்கில தின விழா சிறப்பாக ஒழுங்கமைக்கப்பட்டு

நடாத்தப்பட்டது. இவ் விழாவில் சகல தரங்களுக்கும் பல விதமான நிகழ்வுகள் தயார் படுத்தப்பட்டது. இதனை முழு வீச்சுடன் செயற்படுத்தியவர் ஆங்கில ஆசியராகக் கடமையாற்றிய திரு.T.யோகசிங்கம் Sir அவர்கள். இவரது காலத்தில் ஆங்கில தினப் போட்டிகளில் பல வெற்றிகள் பதிவு செய்யப்பட்டன.
குறிப்பாக Copy Writingஇல் அனைத்துப் பிரிவுகளிலும் எமது பாடசாலைக்கு வெற்றிகள் கிடைக்கும். க.பொ.த(சா.த)ப் பரீட்சைப் பெறுபேறுகளில் சிறப்பான தரங்களும், வீதமும் பதியப்பட்டுள்ளது.

கணிதபாட அடைவு மட்டம் இவ் அதிபரின் காலத்தில் உயர் நிலையில் இருந்ததுடன் க.பொ.த (உ/த)த்தில் கணித, விஞ்ஞான துறைகளில் அதிகளவு மாணவர்கள் கற்றுத் தேர்ந்துள்ளனர். அப்போது திரு.T.வரதராஜா அவர்கள் கணித ஆசிரியராகக் கடமையாற்றினார். கணித பாடத்தினை எளிமையாகவும் நுட்பமாகவும் போதிப்பதில் ஆசிரியர் வல்லவர். கேத்திர கணித அறிவினை மிக எளிமையாக விளங்கச் செய்யும் வலிமை மிக்கவர். அவரின் பின் 1989 காலப்பகுதியில் அப்பொறுப்பினை செல்வி புஸ்பலதா ஆசிரியை ஏற்றுச் செயற்படுத்தினார்.

அதிபரின் காலத்தில் விஞ்ஞான பாடத்தினை மிக நுட்பமாகப் போதிப்பதில் வெற்றி கண்டவர் திரு.சு.இரவீந்திரநாதன் அவர்கள். மிக அமைதியான மென்மையான சுபாவம் கொண்ட ஆசிரியர் விஞ்ஞான பாட அடைவு மட்டத்தில் சாதனைகளைப் பதிவு செய்தவர்.

தமிழ் பாடத்தை சரியான நயத்தல் நுட்பத்தின் ஊடாகப் போதித்து உயர்வான பெறுபேற்று வீதங்களைப் பதிவு செய்தவர் திரு.பாலேந்திராஆசிரியர் அவர்கள். அவர் வெளிநாடு செல்ல அந்த இடத்தை திரு.ம.இரங்கநாதன் Sir பொறுப்பினை ஏற்று சற்றும் தளர்வடையாத வகையில் செயற்படுத்திக் காட்டினார். தமிழ் ஆசிரியர்கள் இருவருமே இன்முகமும் மென்மொழியும் நிறைந்தவர்களாக விளங்கினர்.

சமூகக்கல்வி பாடத்தினைப் போதிப்பதில் திரு.மோகநாதன் Sir அவர்கள் ஈடுபட்டார். அவரிடம் சிறிது நாட்கள் மட்டுமே கற்கும் வாய்ப்பினைப் பெற்றேன். தொடர்ந்தும் மிகவும் எளிமையாகவும் நுட்பமாகவும் அப் பாடத்தினை கற்பிப்பதில் வெற்றி கண்டவர் திரு.த.சிவகுமார் Sir. சைவப்பண்பாட்டினை எளிதில் கண்டு கொள்ளக் கூடிய செயற்பாடு நிறைந்தவர்.

இசையால் வசப்படுத்தி இன்மொழி பேசி நாளாந்த வாழ்க்கையோடு தொடர்புபடுத்தி விவசாய பாடத்தினைப் போதித்து வெற்றி கண்டவர் திரு.க.பாலசுப்பிரமணியம் Sir. மிக அழகான கையெழுத்துக் கொண்ட அவரின் நினைவுகள் என் கண்முன்னே தெரிகிறது.

கோப்பாயைச் சேர்ந்த புஸ்பலீலா ரீச்சர் சைவசமய பாடத்தை நன்றாகப் போதித்தவர். ஆசிரியையின் திறமை யாதெனில் தேவாரம், பொருள் விளக்கத்தை வகுப்பிலுள்ள அனைவரையும் மனனம் செய்ய வைப்பதில் வல்லவர். அவரது நாவன்மை அதில் வெற்றி கண்டுள்ளது.

சங்கீத பாடத்தை தரம் 11 வகுப்பிலேயே நான் கற்க முடிந்தது. கோப்பாயைச் சேர்ந்த மங்களேஸ்வரி ரீச்சர் மிக மிக அற்புதமாக கற்பிப்பார். இன்றைய எமது பாடசாலைக் கீதம் முதன் முதலாக அவரின் காலத்தில்

அறிமுகம் செய்யப்பட்டது. உணர்வு பூர்வமாக அனைவரையும் பாட வைத்தவர். இசையுடன் சங்கமிக்கச் செய்யும் ஆசிரியை பின்னைய காலங்களில் பண்ணிசைப் போட்டிகளில் எம் மாணவர் பங்கு பற்றி பல வெற்றிகளைப் பதிவு செய்தவர். அது மட்டுமன்றி 1995 இடப்பெயர்வின் பின் அவரின் சேவை வேறு பாடசாலைக்கு கிடைத்த போதும் 2003ம் ஆண்டு வரையும் பல்வேறு சிரமங்களின் மத்தியிலும்எமது O/L மாணவர்களை தனது வீட்டுக்கு அழைத்து கற்பித்து எமது சமூகத்திற்குப் பேருதவி புரிந்தவர். இதற்காக என்றுமே அனைவரும் கடமைப்பட்டுள்ளோம்

இதனை விட புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் Sir, கோப்பாய் நடேசு Sir, வாதரவத்தையைச் சேர்ந்த ச.குமாரசுவாமி sir, மா.தங்கத்துரை Sir ஆகியோரின் பல்துறை ஆளுமை அதிபர் சு.முத்துக்குமாரசுவாமி காலத்தில் கிடைத்தது. ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரையும் மிகவும் கண்டிப்பாக வழி நடாத்தி கடமையே கண் என்ற மகுடவாசகத்தக்குப் பொருத்தமடையச் செய்து இவ்வூர் மக்களின் மனங்களில் என்றுமே நிலைத்தவர். அனைத்த ஆசிரியர்களும் ஒருவருக்கு ஒருவர் சளைத்தவர்கள் அல்லர் என்பதனை எடுத்துக் காட்டியவர்களே அதிபர் முத்துக்குமார சுவாமி காலத்தில் பணியாற்றிய ஆசிரியர்கள். தற்போது அதிபர் அலுவலகமாகக் காட்சியளிக்கும் அந்தக் கட்டடம் அவரின் பெருமுயற்சியினாலும் தனிமுயற்சினாலும் தோற்றம் பெற்றது. தரமான சேவையைத் தருணத்தில் பெற்றுக் கொடுத்த அன்றைய ஆளனியினருக்காக ஒருமுறை பிரார்த்திக்கினறேன். பஸ்ஸிலிருந்து விரவாணிச் சந்தியில் இறங்கி 2Km தூரம் நடந்து வந்து திரும்பப் போன அந்த பெண் ஆசிரியர்களின் சேவையும், கற்கள் நிறைந்த, வெள்ளம் நிறைந்த வழி நடுவே சைக்கிளில் வந்து சேவைபுரிந்த ஆண் ஆசிரியர்களின் சேவையையும் மறந்து விட முடியுமா?

திரு.சி.சிவலிங்கராஜா அதிபரின் காலத்தில் தான் நான் ஓர் ஆசிரியராக 1998ல் கடமைப் பொறுப்புக்களை ஏற்றேன். பல ஆசிரியர்கள் நாட்டின் அசாதாரண சூழ்நிலை காலத்தில் துவிச்சக்கர வண்டிகளில் வந்து சேவையாற்றினர். எனது சேவைக்காலத்தில் சேவையாற்றியவர்கள் பல சிரமங்கள் மத்தியில் அர்ப்பணிப்போடு இப்பாடசாலையை வளர்க்க அரும்பாடுபட்டனர். எல்லோரிலும் கப்புதூவைச் சேர்ந்த பரமேஸ்வரன் சேர் கோடைகாலத்தில் காற்றோடும், மாரி காலத்தில் வெள்ளம் நிறைந்த வீதியோடும் போராடியே சேவை புரிந்தவர். இவரது சேவை வித்தியாசமானது. அதிபர் காலத்தில் இரண்ட வேறுபட்ட ஆண்டுகளில் தலா ஒரு மாணவர் வீதம் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தமை வரலாற்று சாதனையாகும். O/L பெறுபேறுகள் இணைப்பாடச் செயற்பாடுகளும் மிக உயர் நிலையில் இருந்தன. யாருக்குமே உதவி செய்யும் மனப்பாங்கும் மென்மையான சுபாவமும் நிறைந்த அதிபரையும், அவரின் கீழ் கடமையாற்றிய அனைத்து ஆசான்களையும் மறந்து விடவோ, அவர்களின் சேவையை மறுக்கவோ முடியாது.

தொடர்ந்து கணிதத் துறையின் விற்பன்னராகவும் முழுநேர கற்பித்தல் சேவையையும் இக்கிராமத்திற்கு வழங்கி கணிதபாட அடைவு மட்டத்தில் சாதனை புரிந்த தருமரத்தினம் Sir அதிபர் சேவையுடன் பொறுப்புக்களை 2002இல் ஏற்றுச் சிறப்பாகச் செயற்படுத்தினார். O/L பெறுபேறுகள் தொடர்ந்தும்

உயர்வான நிலையில் பேணிப்பாதுகாக்கப்பட்டது. இவ் அதிபரின் காலத்தில் செல்வி அ.பகீனா 2004ல் வடக்கு,கிழக்கு மாகாண விளையாட்டு போட்டிகளில் தட்டெறிதல் நிகழ்வில் பங்கு கொண்டதுடன் 2005ல் செல்வி.ச.யசோதா தட்டெறிதல், ஈட்டி எறிதல் நிகழ்விலும், செல்வி த.றஜினா 400m,200m ஓட்ட நிகழ்வுகளிலும் வடக்கு மாகாண மட்டத்தில் பங்கு பற்றினார்.2006ல் செல்வன் அ.பிரசாத், செல்வி யோ.யதீனா, செல்வி ஜெ.அனித்தா, செல்வி.ச.யசோதா, செல்விஅ.திஷானி ஆகிய மாணவர்கள் மாகாண மட்டப்ப போட்டிகளில் நாட்டின் அசாதாரண சூழ்நிலமை காரணமாக கலந்து கொள்ள முடியவில்லை. 2007ல் செல்வி.யோ.யதீனா 400m ஓட்ட நிகழ்வில் மாகாண மட்டத்தில் பங்கு கொண்டதுடன் செல்வி.ச.யசோதா ஈட்டி எறிதல், தட்டெறிதல் நிகழ்வுகளில் தங்கப் பதக்கங்களைப் பெற்றார். 2008, 2009ம் ஆண்டுகளில் செல்வி யசோதா வடக்கு மாகாணப் போட்டிகளில் தட்டெறிதல், ஈட்டிஎறிதல் நிகழ்வுகளில் தங்கப்பதக்கம் பெற்று தேசிய மட்டப் போட்டிகளில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. தமிழ்த்தினப் போட்டிகளில் 2008ல் இலக்கணப் போட்டியில் செல்வி யோ.யதீனா குறுநாடக ஆக்கத்தில் செல்வி தி.திருசிகா வலய மட்டத்தில் முதலிடம் பெற்றனர். சமூக விஞ்ஞான பொது அறிவுப் போட்டிகளில் செல்வன் யோ.பிரியதர்சன், செல்வன் ஈ.முகுந்தன் செல்வி.த.தனுஷியா, செல்வன் வி.தஷிந்தாஸ், செல்வன் வி.ஜெசிந்தாஸ் ஆகியோர் முதலிடங்களைப் பதிவு செய்த அதேவேளை செல்வி யோ.யதீனா, றெ.நிவேதன் இரண்டாம் இடத்தையும் வலய மட்டத்தில் பதிவு செய்தனர். இவ் அதிபரது காலத்தில் பரிசில் நாள் நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டு நடாத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இவரது காலத்தில் பெண்களின் மலசலகூடமும் நூலகமும் அமைக்கப்பட்டு பௌதீக வளம் அதிகரிக்கப்பட்டு சிறப்பான கற்றல் கற்பித்தல் செயற்பாடு இணைப்பாடச் செயற்பாடு இடம்பெற்றது. பழைய மாணவர் திரு.கணேசலிங்கம் அவர்களின் முழுப்பங்களிப்புடன் முன்பக்க மதிலும் திரு.இ.தயாபரன் அவர்களின் பங்களிப்புடன் சிறுவர் பூங்காவும். அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. அழகியல், சைவசமயம், தொழில்நுட்பப் பாடங்களில் கோட்ட, வலய மட்டங்களில் வெற்றிகள் பதிவாகியுள்ளன. இவ் அதிபரின் ஓய்வுக் காலத்தைத் தொடர்ந்து...

புதிய அதிபராக இன்றைய அதிபர் சேவைத்தரத்துடன் 2009.07.07 இல் கடமைகளைப் பொறுப்பேற்றார். இவ் அதிபரது குறுகிய இக்கால இடைவெளியில் நீண்ட காலத்தின் பின் ஆங்கிலதினப் போட்டிகளில் கோட்ட மட்டத்தில் செல்வி ச.சஸ்ரீபா செல்வி.ப.கஜிதா ஆகியோர் உறுப்பெழுத்துப் போட்டியில் மூன்றாம் இடங்களையும் செல்வன் கே.மதுமிலன் Recitation இல் மூன்றாம் இடத்தையும் பெற்றமை ஒரு வரலாற்றுச் சாதனையாக உள்ளது. சமூக விஞ்ஞான பொது அறிவுப் போட்டி 2010இல் தரம் 10,11 பிரிவுகளில் செல்வன் வி.தஷிந்தாஸ் செல்வி.ஈ.சுசீபா, செல்வன் றெ.நிவேதன் ஆகியோர் வகை II பாடசாலைகள் என்ற வகுதியில் வலய மட்டத்தில் முதல் மூன்று இடங்களையும் முறையே பெற்று மாகாணப் போட்டிகளில் பங்கு கொண்டமை ஒரு முக்கிய விடயம் வடக்கு மாகாண தடகள விளையாட்டுப் போட்டிகளில் செல்வன் பா.ஜசீகன் (1500M) செல்வி பா.தினேஷா (உயரம் பாய்தல்) தங்கப் பதக்கங்களைப் பெற்றுப் பெருமை சேர்த்தனர். கணினி அறை,

நீர்த்தாங்கி, சமயலறை என்பனவும் இவரது காலத்திலேயே அமைக்கப்பட்டுள்ளது. அத்துடன் ஆண்களுக்கான மலசல கூடம், அமைக்கும் பணியும் ஆரம்பமாகியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. நூறு வருடங்களாக சர்ச்சைக்கு உள்ளாகியிருந்த பாடசாலையின் கிழக்குப் புறமான காணி பழைய மாணவர்களான த.உதயகுமார், இ.தயாபரன் ஆகியோரின் நிதியுதவியுடன் விடுவிக்கப்பட்டு பழைய மாணவர் கணேசலிங்கம் அவர்களின் உதவியுடன் எல்லைப்படுத்தப்பட்டும் உள்ளது. ஒரு வரலாற்றுச் சேவையும் என்பது குறிப்பிடத்தக்கது. இதற்கு அதிபர் அவர்களின் பெரும் பங்கும் அயராத முயற்சியும் பாராட்டப்படும் அதேநேரம் இதற்காக பழைய மாணவ சங்கத்தினரின் பேருதவி நினைவு கூரப்பட வேண்டும். ஆண் பெண் இரு பாலாருக்குமான கழுத்துப்பட்டிகள் சீர் செய்யப்பட்டு வழங்கப்பட்டது. பழைய மாணவர் தயாபரன் அவர்களின் உதவி இதற்கு பக்க பலமாக இருந்தது. மிகக் குறுகிய காலத்துள் கல்விச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கும் இணைப்பாடச் செயற்பாடுகளை வினைத்திறனுடன் முன்னெடுப்பதற்கும் தற்போதைய அதிபர் தன்னாலான அர்ப்பணிப்புக்களை மேற்கொண்டு வருகின்றார். பௌதீக வளத் தேவைகளைப் பெருக்குவதிலும் அவர் கண்ணும் கருத்துமாய் உள்ளார். அமரர்.கிருஷ்ணபிள்ளை அவர்களின் புதல்வர்களால் போட்டோப் பிரதி இயந்திரம் ஒன்றும் அன்பளிப்பாகப் பெறப்பட்டது. இது தவிர பழைய மாணவர் சங்கத்தின் உச்ச நிலையான ஒத்துழைப்பையும் வேண்டி நிற்கிறார். பழைய மாணவர்களான கு.கானமூர்த்தி, கு.பாஸ்கரமூர்த்தி, இ.இந்திரக்கரசி, இ.தவராசா, அ..நந்தினி, திரு.செ.சிவனேசராசா, திருமதி.ந.சத்தியலோஜினி, ஆகிய வெளிநாடுகளிருந்தானவர்களிடம் இருந்து நிதியுதவிகள் பெறப்பட்டுள்ளது. ஏனைய பழைய மாணவர்களும் காலக்கிரமத்தில் இத்தகைய உதவிகள் வழங்குவார்கள் என்ற நம்பிக்கையுண்டு. தற்போதைய அதிபர் அவர்கள் தனது நீண்ட சேவைக்காலத்தில் இன்னும் பல வரலாற்றுச் சாதனை சேவைகளைப் பதிவு செய்வார் என்ற நம்பிக்கை என்னிடமும் சமூகத்திடமும் உள்ளது.

இன்று வரை சிறப்பாக சேவையாற்றிச் சென்ற சேவையாற்றி வருகின்ற அனைத்து அதிபர் ஆசிரிய உள்ளங்களின் கடமையுணர்வுகளை எளிதில் மறந்து விட முடியாது. இப்பாடசாலையின் மகுட வாசகம் கடமையை கண் என்பது மட்டுமல்ல தனியார் கல்வி நிறுவனங்களுக்கு அதிகளவு செல்லாத மாணவர்களே இவ் அறிவாலயத்தில் கல்வி பயில்கின்றனர் என்பதை யாரும் மறந்து விடவோ, மறுத்து விடவோ முடியாது. பழைய மாணவன் என்ற வகையில் பள்ளிக்கால நினைவுகளை மீட்டியும் ஆசிரியர் என்ற வகையில் சேவைநாள் நிகழ்வுகளை ஒருவாறு தொகுத்தும் பார்த்துள்ளேன். ஒவ்வொரு ஆசிரியரும் நிச்சயம் வேறுபட்ட அளவு சேவையையே வழங்கியிருக்கின்றார்கள். நான் பெற்ற சேவையை விட என்னொடு ஒரு தசாப்தங்களாகச் சேவை புரிந்த ஆசிரியர்கள் பலர் அவர்களிடம் பெற்ற அனுபவங்கள் ஊடாகவே என்னை ஒழுங்கமைக்க முடிந்தது. அதற்கு நான் அவர்கள் அனைவருக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். நூற்றாண்டு அகவையில் என் அன்னையின் மலருக்கு இத்தகைய ஆக்கம் ஒன்றை வழங்க வாய்ப்பு கிடைத்தமைக்கு எல்லாம் வல்ல இறைவனுக்கு முதற்கண் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

பத்துத் தசாப்த வரலாறு கொண்ட எம் அன்னை மட்டுப்படுத்தப்பட்ட வளங்கள், நாட்டின் அசாதாரண அரசியல் நிலை நிலவியமை என்பவற்றோடு அதி கஷ்டப் பிரதேசப் பாடசாலையாக விளங்குவதும் வரலாற்றுச் சாதனைகளை மட்டுப்படுத்தி விட்டது. எல்லாவற்றுக்கும் மேலாக உயர் தொழில் புரியும் அன்னையின் மைந்தர்கள் பலர் தொழில் வாய்ப்பின் நிமித்தம் வெளியிடங்களில் வதிவதும், பொருளாதாரத்தில் மட்டுப்படுத்தப்பட்டவர்களே பலர் இங்கு வாழ்வதும் அன்னையின் சாதனைகளை எல்லைப்படுத்தி நிற்கின்றது என்பதும் வேதனைதரும் விடயம். எது எவ்வாறு இருப்பினும் இக்கிராமத்துக்கு இவ்வாண்டிலிருந்து மின்சாரமும், குடிநீரும் போதியதாக வழங்கப்படுவது சாதனைகள் புரியும் பலரை இம் மண்ணில் தரித்து நிற்கச் செய்யும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. அன்னையின் பணிகள் தொடரட்டும் ஆயிரம் மலர்கள் மலரட்டும்.

## செம்மொழி

ஒப்பற்ற செம்மொழி ஆறு அதில்
ஓங்கும் புகழுடன் திகழ்வது நம்மொழி
முப்பொருள் தத்துவம் நம்மொழி
முத்தமிழ் புரள்வதும் எம் செம்மொழி
கவி பல கொண்டது நம் கனிமொழி
காவியம் கண்டது எம் பெருமொழி
முப்பால் தந்த எம் முதுமொழி
மூவேந்தர் வளர்த்தது எம் வண்மொழி
ஆவழி தோன்றிய தனிமொழி
ஔவை தந்த செம்மொழி

செல்வன் க.பிரவுஷன்
தரம் – 07




**தமிழ்ச் சங்கம் - 2010**



**இந்து மன்றம் - 2010**



# THE WORLD OF ELECTRONICS

**Mr.Ananthasivam Sivasutharsan**
**Teacher of English**

Can you imagine a day without television, phone,radio,music system and your computer? Never. You would have had them in your life, hadn't there been electronics. Electronics has made things easier for us. A washing mechine helps to wash clothes. Television, telephone, music system, radios and computers are all electronic devices.

Electronic devices are those which are controlled by electronic circuits The circuits are made up of electronic components like diodes and transistors. These components affect the way electricity flows through them. Electricity is the flow of electrons. Electronics is the study of how electrons flow through different materials.

A Computer is an electronic device that preocesses data into information.. A Computer helps to do a complex task quickly and accurately. A Computer is made up of two parts. The hard parts of a computer that you can feel is the hardware, while the programmes used to run the computer are called the software. The hardware is made up of three parts - the input device, the output device and the control unit.

The input devices are the keyboard and the mouse. The output devices are the monitor and the printer. The control unit or the Central Processing Unit (CPU) is the brain of the computer. The programmes, consisting the Software of a Computer, are a series of instructions written in a special language. These tell the computer which operations to perform for a specific job.

Computers have found a place even in our homes, at work and schools. They are being used in banks, super market, hospitals, reservation counters, meteorological stations, and radio and television stations and also in aircraft and spacecraft. Most of us must have heard about the international network, or the internet. It is also known as the "information superhighway". This is called so, because if anybody has an internet connection, he can have access to the latest news and information at the click of a button.Electronic mail or e-mail has helped to send and receive messages in seconds. Computers can one day make the world a "paperless" world.

A. The visual display unit (VDU) is an output device. The computer carries out the instructions and displays the output on the VDU Screen.

B. Central Processing Unit (CPU)

C. Keyboard is an input device. Pressing the keys on the keyboard sends electrical signals to the computer.

D. A mouse is an input device. Moving the mouse on a surface, moves the cursor on the screen. Instructions to the computer can be given using buttons on top of the mouse.

"English mathematician Charles Babbage is said to be the father of computers. computers have now become a part of our daily life. We use them in offices, schools, railway and airline reservation counters etc".



ஆங்கில மன்றம் - 2010



சமூக விஞ்ஞான மன்றம் - 2010



புத்தூர் வே.இளையகுட்டி
இளைப்பாறிய ஆசிரியர்
(ஆளுனர் விருது 2010 பெற்ற கவிஞர்)

# வாழி விக்கினேஸ்வரா வித்தியாலயம்

1. கேதூர் விநாயகர் வடபா லிலும்
கிள்ளைமொழி நாச்சிமார் தென் பாலிலும்
மேல் பாகம் உறை தகரம் பிள்ளை யாரும்
கீழ்பாகம் பைரவனும் காக்கும் ஊராம்!

2. வாதார எனப்பகரும் வள்ளன் மையும்
○ வத்தை யெனும் சொல்சேர உருவாகிய
காரணப் பேர்கொண்ட ஊராம் இது
கண்ணியம் நிறைமாந்தர் உறையூர் இது.

3. நாலுபுறமும் உப்புநீர் சூழவிருந்தும்
மூலவளம் இல்லாத பூமிய மைந்தும்
மூளைவளம் கொண்டபல கல்வி யாளர்
முன்னேற்ற நாலூரும் போற்று பதியாம்!

4. நூறாண்டு முன்பாக பாதிரி மார்கள்
பேறான கல்விபெற தாபகம் செய்து
தாயாகி கல்வியெனும் பாலூட் டினார்
சேயாகி உண்டு அறிவா லுயர்ந்தோம்

5. ஊரார்கள் உழைப் பென்னும் நீரூற்றிட
உயர்ந்தோங்கி பெருவிருட்ச நிழலாகிட
காலம்சு ழன்றோட கல்வி பெருக
கருவான மெதடிஸ்த மிஷன் ஆகுமே.

6. பொறியாளர் வைத்தியர் நிருவா கிகள்
போதிக்கும் ஆசிரியர் எழுது வினைஞர்
பலராக பெருகஅடி வேரா னதே
பல்திசையும் போற்றும் திருவூ ரானதே

7. ஆன்மீக அறிவாளர் அகத் தெழுந்த
அரியதிரு நாமம்விக் னேஸ்வரா வாய்
பேர்மாற்றம் உருவாகி சைவநெறியும்
பெரிதோங்கி வளர்ந் தெங்கள் பேறானதே!

8. வாழிவிக் னேஸ்வர வித்யா லயம்
வாழிவா தரவத்தை ஊர்வா சிகள்
வாழிதமிழ் சைவநெறி வாழ்க வாழ
வந்தருள் தருவானெம் விக்னேஸ்வரன்

○ வத்தை - ஊர் அல்லது நிலம்



# சிறுபட்டி

திரு.க.கிருபாகரன்
ஆசிரியர்.

கண்கருங்குவளை கார்கூந்தல்
தார்வீதி பெண்ணணங்கு
பொருந்திக்கூற எவருமில்லா
பேரழகி முத்தம்மா பெற்றாள்
சிறுபட்டி

ஐந்து பெண்குட்டி ஆறாவது
கடைக்குட்டி வண்டு நிறத்தான்
வனவேந்தன் திண்ணனார் போல்வான்
கண்டவர் கண்பட காய்ச்சல்
அடிக்கடி முத்தம்மாவும், முருகேசும்
சாமியிடம் காட்டினார்
சாமிகட்டினார் பிணிக்கூடொன்று
திண்ணக்குழந்தை திடமாய்வளர்ந்து
வல்ல குட்டியாய், சுட்டியாய்
உருண்டு பிரண்டு தவழ்ந்துநடந்து
ஊட்டல் விடுத்து உண்ணப் பழகி
ஊரவர் போற்ற வண்டலாடி
சிறுபறைகொட்டி சிறுதேரோட்டி
பாலப்பருவம் பட்டுப் போகவே

அன்னைகண்களில் கண்ணீர்பெருக
தந்தைஉள்ளக்கழிப்புடன்
தனையனைத் தோழில் சுமந்து
கொண்டு சென்று பள்ளியில் விடுக்க
பாலர்களோடு பழகாமற் தனியே
பட்டகட்டை போல் பாலா இருந்தான்
அன்பான ஆசிரியை ஆட்டம்பாட்டம்
விந்தைப்பேச்சு எல்லாம்போச்சு
ஆத்தேஇந்த குத்தியனை ஆர்தான்
திருத்த என்றே வெறுக்க ஏறினான் இரண்டில்
குஞ்சா வேலா, குமராபாலா
இஞ்சபாரப்பு இப்படியிராதே
ஏதோபடித்தால் எப்படி வாழலாம்
என்றெல்லாம் கூறவும் ஐந்தும் கடந்தான்
ஆறில் வந்தான் மௌனம் கலைந்தான்

ஆசிரியர்கள் அவனைத் தட்டிக்கேட்டார்
வீரன் சூரனாய் வெஞ்சினங் கொண்டான்
தாயைத் தந்தையை வெட்டென எதிர்த்தான்
வீட்டிலில்லை பள்ளியில் இல்லை
வீதியிற்தானே பெரும்பகுதி கழித்தான்
எத்தனைசட்டம்பி எத்தனைமுயற்சி
எல்லாம் போனது பயனற்றசெயலாய்
ஆண்டுகள் ஓடி பதினொன்றும் போனது
அன்னை அன்பால் அமுதூட்டல் தொடர்ந்தாள்
தந்தை நொந்து மதுவில் மாண்டான்
தமக்கைகள் கிடைத்த வழியைப்பற்றினர்
தாயவள் நோயிலும் தள்ளாடி நடந்து
தரவை வெளியில் சாணி பொறுக்கி
வருகின்ற பட்டிக்கு வாய்க் கூற்றிவந்தாள்

சிறுபட்டிக்கு சிறு மீசை அரும்ப
சிவக்கொழுந்து மகள் கண்ணில் பட்டாள்
அழகாய் மினுக்கி ஆடை அணிந்து
தலையைக்கிளறி மருண்மை பூசி
கழுத்தில் கயிற்றை பின்னிக்கட்டி
கண்ணாடி முன் தன்னைப் பார்த்து
தனியோர் இடமாய் தனித்துநின்று
கொழுந்துக் கொடியை காதலாய் நோக்க
கழட்டினாள் செருப்பை காவாலி நாயே - என்று
கூடவே பறந்தது வார்த்தைகள் பல
காதல் கேட்ட கறுமம் உனக்கு
கடிதம் எழுத வார்த்தையும் தெரியுமோ
கொம்மா போடும் சோற்றைத்திண்டு
கொழுப்பேறிப் போச்சோ கோதாரி நாயே
கொஞ்சம்சிந்தி உன்னிலை உனக்கேபுரியும்
என்றாள் துளசி.
ஏமாந்தபாலா எடுத்தான் போத்தலை
மதுவில் இருந்தான் மயங்கி விழுந்தான்
பெத்தமனம் பித்தாயானது
சேய்நிலை கண்டு தாய் உயிர் போனது
ஊட்ட இன்று உத்தமி இல்லை
அணைக்க இன்றுயாருமே இல்லை
அவலம் புரிந்தது தவறு தெரிந்தது
யாரிடம் சொல்வது யார் கேட்பார்கள்
யாருமின்றி தானே அழிந்தான்
தெரு நாய்போல் அவனுடல் வீதியில் கிடந்தது.

# பல்லாண்டு வாழி

கோமாதா பெற்ற குழந்தைக்கு
கோவையில் இன்று நூற்றாண்டு
வாதரவத்தை வந்து உதித்தாள்
வான்புகழ் பரப்பி ஓங்கி நின்றாள்
ஞான ஒளி தனை நமக்களித்தாள்
நானிலம் வாழ வழி சமைத்தாள்
பாரினில் உன் புகழ் படர் தருவாய்
படர்ந்து பெருக பல்லாண்டு

சீலமர் உத்தமர் தோற்றுவித்தாள்
சிந்தையில் ஒளியைப் பெருகச் செய்தாள்
புத்தூர் பூம்பதி விளங்கச் செய்தாள்
புலமை விளக்கை ஏற்றி வைத்தாள்
நித்தம் நித்தம் பாங்கொலியால் அவள்
நீள் நிலத்தறிவைப் பெருக்கி வந்தாள்
அன்னை அவள் புகழ் பார் அறியும்
ஆண்டாண்டு வாழ்க பல்லாண்டு.

பொக்கணை, வாணி தனைஇணைத்து
பால் நினைந்தூட்டும் தாயானாள்
உப்பேரி சூழ் அன்னை அவள் உயர்
உப்பரிகை மேல் வீற்றிருந்து எமக்கு
தப்பா ஞானந்தனை வழங்கும்
தாயே வாழ்க பல்லாண்டு

செல்வி வி.விதித்தா
தரம் – 10



**கணித விஞ்ஞான மன்றம் –2010**



**ஆரம்ப பிரிவு மன்றம் – 2010**

# எதிர்காலம் உன்னிடத்தில்

இலங்கைத்தீவின் பிள்ளைகள் நாம்
இலவச நூல் கொண்டு
இன்றுமுதல் கற்றிடுவோம்
இனிய பள்ளி சென்று

கண்போன்ற புத்தகத்தை
கசங்காமல் காத்து
நாளைவரும் சந்ததிக்கு
நாம் அளிப்போம் நன்று.

பூப் போன்ற புத்தகத்தை
உறையிட்டுப் பேணி
பூரிப்போடு பெற்றிடுவோம்
சான்றிதழைத் தானே.

சின்னத்தங்கை குட்டித்தம்பி
சொல்லுவதை கேளும்
தயக்கம் வேண்டாம் பள்ளி வாரும்
பிள்ளை நேயம் உண்டு

ஐந்துமுறைக் கல்வியாலே
அகமகிழ்ச்சி உண்டு
ஆடல்பாடல் கூடல் தேடல்
ஆனந்தமாய் உண்டு

நாட்டின் சொத்தின் பெரும் பகுதி
நமக்குத்தானே உண்டு
நாளை அதை பாதுகாக்கும்
பெரும் பொறுப்பும் உண்டு

பாட்டி ஊட்டும் சோறும் கறியும்
பாலகனுக்கே உண்டு
பருவம் வந்தால் பாடுபட்டு
உண்ண வேண்டும் நீயும்

நாளை வரும் சந்ததியை நீயும்
நானிலத்து வருந்த விடலாமோ
பாட்டி, தாத்தா, அப்பா, அம்மா
பட்ட துயர் போதும்
பாரும் நீரும் பள்ளியிலே - பயின்று
நன்றாய் வாழும்.

அதியாதுரன்



## வானிசைக்க வாழ்த்துப் பாடி

ஆசிரியர்
திருமதி.ஜெ.ஜெமல்டா

இயற்கை எழில் நிறைந்த சோலையிலே
இன்னிசை பாடும் சிட்டுக் குருவிகளோசையிலே
நூற்றாண்டு காணும் கலைக் கூட மிது
வாதரவத்தையின் தனிப்பெரும் மாடமிது

சாலப் பொருந்தும் நல் மக்கள் வாழும்
நலமிக்க கிராமமது ஒளி விளக்காய்
அதிபர் ஆசிரியர் நூற்றுக் கணக்காய்
அன்போடு கற்றுக் கொடுத்தோரை நுணுக்கமாய்

பல்லாயிரம் மாணவ மணிகள் செல்வமதை
பண்போடு பெற்று பட்டமும் பெற்று
பாங்கான பெற்றோராய் வாழ்கின்றனரெனின்
புகழ்மிக்க பாடசாலை இதுவென்றறிவீரே

ஆலமரம் போல் வானுயர கலைக்கூடம்
வளர்ந்திட வழி சமைத்த பெருமைதனை
எடுத்துரைக்கும் சாலையது பாரினில் மேம்பட
வாதரவத்தை மிளிர வைத்து மகிழ்ந்திடவே

வறுமை ஒழிந்திட பெருமை சேர்ந்திட
சிறுவர் சிறுமியர் கல்வியில் உயர்ந்திட
கலையமுதம் பெருகிட வளமுடன் வாழ்ந்திட
இருபதாம் நூற்றாண்டில் உயர்ந்த கோபுரமாய்

ஒரு நூற்றாண்டு காணும் பொன் நாளில்
இன்பம் பொங்கிட முதலிடம் வகிக்கும்
பல நூற்றாண்டுகள் பண்புடன் ஒளி வீசிடவே
வாழ்க வாழ்கவென வானிசைக்க வாழ்த்துப்பாடி...

# விளையாட்டுப் போட்டி - 2010



பிரதம விருந்தினர் வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அவர்களும் சிறப்பு விருந்தினர் லயன் Dr.V.தியாகராஜா அவர்களும் வரவேற்கப்படுகிறார்கள்



விருந்தினர் பாண்ட் வாத்திய இசையுடன் மைதானத்திற்கு அழைத்து வரப்படுகிறார்கள்.



பிரதம விருந்தினர் விளையாட்டுப் போட்டியை ஆரம்பித்து வைக்கிறார்.



இடைவேளை உடற்பயிற்சிக் கண்காட்சி



சிறப்பு விருந்தினர் வெற்றியாளருக்கு பரிசில் வழங்குகிறார்.



பிரதம விருந்தினர் வெற்றியாளருக்கு பரிசில் வழங்குகிறார்.

# கல்வி

பாடசாலை சென்று
பாடங்கள் பல கற்றோம்
பயின்று நல்ல படிப்பினை
படித்தோம் பெரிய தலைப்பினை
உற்று நோக்கினோம்
இனிய வசனத்தை
கற்றோம் எம் வகுப்பிலே!

அதிபரின் அறிவு வார்த்தைகளும்
ஆசிரியரின் அன்பு அறிவுரைகளும்
கேட்டோம் எம் மனதிலே
அறிந்தோம் கல்வி கற்பினை
எழுதினோம் பரீட்சையை
எய்தினோம் நல்ல பேறுகளை
அடைந்தோம் பெரிய சித்திகளை!

கல்விச் சக்கரம் அழியாத சக்கரம்
சொந்தங்கள் அழியும் தேகம் அழியும்
தேவபோகங்களும் அழியும்
என்னை விட்டு அழியாது
பள்ளிப்படிப்பு
எங்கு சென்றாலும் என்னுடன்
வரும் கல்வி!

எதையும் இழப்போம் என்றென்றும்
அழியாத சொத்து அசையாத சொத்து
மகிழ்வான சொத்து கல்விச் சொத்து
விழிப்போம் அறிவுக்காக
உயர்வோம் நன்மைக்காக
படிப்போம் என்றும் பாடசாலையிலே
மறந்திடோம் எம் பள்ளி வாழ்வினை!

ஆக்கம்
செல்வி.க.ஜமேசா
தரம் - 09

# EARTH'S OCEANS:

## An Introduction

Oceans Cover about 70% of the Earth's Surface. The oceans Contain roughly 97% of the Earth's water Supply.

The oceans of Earth are unique in our Solar System. No other planet in our solar system has liquid water (although recent finds on Mars indicate that Mars may have had some liquid water in the recentpast) life on Earth originated in the seas, and the oceans continue to be home to an incredibly diverse web of life.

The oceans of Earth Serve many functions, especially affecting the weather and temperature. They moderate the Earth's temperature by absorbing incoming Solar radiation (Stored as heat energy) The always moving ocean Currents distribute this heat energy around the Globe. This beats the land and air during winter and Cools it during Summer.

## THE OCEANS

The Earth's oceans are all connected to one another. Until the year 2000, there were four recognized oceans: the Pacific, Indian, and Arctic In the Spring of 2000, the International Hydrographic Oranization delimited a new ocean, the Southern Ocean (it Surrounds Antarctica and extends to 60 degrees latitude). There are also many Seas (Smaller branches of an ocean); Seas are often partly enclosed by land. The Caribban Sea, and Mediterranean Sea.

| Ocean | Area (Square miles) | Average Depth (ft) | Deepestdepth (ft) |
|---|---|---|---|
| Pacific ocean | 64,186,00 | 15,215 | Marina Trench 36,200 ft |
| Atlantic ocean | 33,420,000 | 12,881 | Puerto Rico Trench, 28,230ft |
| Indian ocean | 28,350,000 | 13,203 | Java Trench. 25,344 ft deep |
| Southern ocean | 7,848,300 | 13,100-16,400 | The southern end of the Salth Sandwich Trench 23,736ft. |
| Arctic ocean | 5,106,000 | 3,953 | Eurasia Basin, 17,881 ft. deep. |

WHY IS THE OCEAN BLUE?

the ocean appears blue because it reflects the blue color of the sky. on a cloudy, gray day, the ocean appears gray.

Some oddly - Colored Seas:
The Black Sea looks almost black because it has a high conventration of hydrogen sulfide
(White appears black)

SALINITY

| Sea Salts | partsper Thousand |
|---|---|
| Chloride | 19.3 0/00 |
| Sodium | 10.7 0/00 |
| Sulfate | 2.7 0/00 |
| Magnesium | 1.3 0/00 |
| Calcium | 0.4 0/00 |
| Potassium | 0.4 0/00 |
| bicarbonate | 0.15 0/00 |
| bromide | 0.07 0/00 |
| other | 0.06 0/00 |

Muruganantham.
Jasinthiny
Grade - 11

# Model English Compositions

**1. Different Sources Of Knowledge**

"Knowledge is power". There are many Sources through which we can get this power. Books are one of the most important Sources of knowledge. We have learnt many things from books. As little children, We loved to read fairy - tales and other story books. But with time, as we grew we began to read more serious and educational books such as biographies, adventure stories, books on history, science, culture and religions. we learnt about our country and other countries by reading books.

Books give us not only knowledge, but also pleasure. Books and knowledge are inseparable in our lives.

Newspapers are another source. There are various newspaper publications. The newspaper provides us news from various corners of the country and even the world. We can learn about various books that are being published and films that are screened. We can also learn about the numerous plays that are staged and the exhibitions that are held in different places. The news of new inventions and discoveries reach us through the newspapers. The electronic media is also very helpful.

The encyclopaedia is another source of information. The word encyclopaedia comes from the classical Greek word, meaning a general education and the term was first used in 1541. The idea of producing an encyclopaedia is very old. An encyclopaedia is a complete summary of information in all branches of knowledge or a particular branch of knowledge.

A dictionary is a book from which people can find out what words mean, how they are spelt and even pronounced. Dr.Samuel Johnson is the father of the English Dictionary.

The internet is the latest source of knowledge. Even though it is of very recent origin, the influence it has on society is immeasurable. The scope is very wide.

**2. Water is our life**

People need water as much as people need air. Animals and plants too need water. If there was no water, we would all die.

We use water for cooking, washing clothes, generating electricity, washing our selves and for cultivation. Rain, wells, tube wells, water falls, tanks, ponds,rivers, and streams are some of the sources of water.

There is also. water in the sea. But we cannot drink it or use it to water plants and crops because it is salty. In Arab countries, sea water is desalinated. (Salt is removed).

People pollute water in waterways by washing clothes, bathing, washing aqnimals and washing vehicles. We should stop doing these activities to conserve water, because, water is our life.

### 3. Child abuse - stop it!

Children are considered precious by many. Therefore, We should not neglect them. However, today child abuse has become a major challenge we face in the world. There are various organisations working hard to prevent child abuse.

Child abuse can be identified in different ways. For instance, neglecting children, forcing them to sell or take hard drugs, taking advantage of their innocence, not giving proper protection or health care, are some of them. If every parent, took good care of his or her children child abuse could be stopped. Sending children to work without giving them the necessary education is a serious form of abuse. By these thoughless acts of adults, most innocent cgildren face difficulties in life. They suffer from mental, pyhsical and also social stresses.

Children are not born to spend their lives in a slave - like manner, at the mercy of adults. They also have their own rights. It is the children who will take over the country in the future, with many responsibilities.

So, it is the duty of all parents to give them a good education and bring them up as good citizens in a peace ful environment. If the children are good strong and healthy the country too... will have a rich resource. Child abuse is seen in many countries of the world. Action should be taken to prevent this, So that the country would be free from stress and trouble. Therefore, from now on, let's all join hands to stop this abuse and create a peaceful and harmonious world for children.

Miss.M.Pirashanthiny
&
Miss.K.Jamesha
Grade - 9 Students.
J/Vatharawattai Vigneswara
Vidyalayam.

# Honesty is the best policy

'Honesty is the best policy it is often said. When a person is truthful and sincere we say that he is honest. If a person is honest, then he will always keep promises, be forthright in all his dealings and not lie or pretend to be someone he's not. An honest person will always respect elders. He will also have a clear conscience.

An honest person may not be so rich, but he will win the respect of others. He owes no man anything. An honest person will always take firm and correct decisions. He will not be partial to anything or anyone.

We may meet lots of people who lie whenever they speak. They may be able to deceive people for a while but once people realise the truth, they aviod them and do not respect them.

Honest people have outstanding characteristics. They never steal, cheat or hesitate to pay their dedts.

Makenthiram.
Jasitha
Grade - 08

# கணிதப் பூங்கா











**22.06.2010 அன்று எமது பாடசாலையில் நடாத்தப்பட்ட கணிதப் பூங்கா 2010 நிகழ்வின் போது தரம் 6 முதல் 11 வரையான மாணவர் கள் கணிதச் செயற்பாடுகளில் ஈடுபட்டிருக்கும் காட்சி.**

# Quotation from shakespeare

Ingratitude

Blow, blow, thou winter wind,
Thou art not so unkind
As man's ingratitude

- As you like it

Truth

'Tis not the many oaths
that makes the truth,
But the plain single vow
that is vowed true.

- All's well That Ends Well

Violence

There is no sure foundation
Set on blood,
No certain life achieved by other's
death

- King john

Virtue

Nen's evil manners life in brass;
their virtues
We write in water.

- Henry VIII

The evil that men do lives after
them.
The good is oft interred with their
bones.

- Julius Caesar

Anna Selva Pakkiya rathan
Lavanya
Grade - 10



# சோழர் காலம்
## [ஓர்அறிமுகம்]

திரு.து.ஜீவானந்தன்
ஆசிரியர்

கி.பி 9ம் நூற்றாண்டு முதல் கி.பி 13ஆம் நூற்றாண்டு வரையுமான காலப்பகுதி சோழர் காலம் இக் காலத்தில் அரசியல் உன்னத நிலையில் இருந்தது. தமிழ்நாடு கண்ட பெரும் பேரரசில், சைவம், வைணவம், பௌத்தம், சமணம் ஆகியவை பகைமையின்றி வளர்ச்சி பெற்றன. பிரமாண்டமான கோயில்கள் எழுப்பப்பட்டன.

*அரசவை இலக்கியங்கள்*

முதலாம் குலோத்துங்க சோழனை பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு சயங்கொண்டார் கலிங்கத்துப் பரணி பாடினார்.

ஒட்டக் கூத்தர் விக்கிரம சோழன், இரண்டாம் குலோத்துங்க சோழன், இரண்டாம் இராஜ இராஜ சோழன் ஆகியோர் மீது தனித்தனியாக உலாக்கள் பாடியுள்ளார். அவை மூவருலா எனப் பெயர் பெற்றன.

இரண்டாம் குலோத்துங்க சோழன் மீது ஒட்டக் கூத்தர் பிள்ளைத் தமிழ் பாடினார்.

*காவியங்கள்*

சோழர் காலத்தில் தோன்றிய தண்டியலங்காரம் காவிய இலக்கணம் வகுத்தது. தன்னிகரில்லாத் தலைவனின் பெருமை கூறுவனவாக பொதுவாக சோழர் கால காவியங்கள் அமைந்தன.

சோழப் பேரரசு காவிய வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைந்தது. பெரும் பேரரசு, பெரும் கட்டடங்கள்(கோவில்கள்) பேரிலக்கியங்கள்(காவியங்கள்) என்பன நிலை பெற்றதால் 'காவிய காலம்' என்னும் பெயரை சோழர் காலம் பெற்றது.

சீவக சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி, நீலகேசி, சூளாமணி, யசோதர காவியம், உதயண குமாரண காவியம், நாக குமார காவியம், என்பன இக் காலத்தில் தோன்றிய காவியங்களாகும். கம்பராமாணயம் இக்காலத்தில் எழுந்த மிகச் சிறந்த காவியம் சேக்கிழாரின் திருத்தொண்டர் புராணம் காவிய அம்சங்களைக் கொண்டது.

சோழர் காலத்து காவியங்களில் கவிச்சுவை நிரம்பியனவாக கூறப்படுவன: கம்பராமாணயம், சீவகசிந்தாமணி, சூளாமணி என்பனவாகும்.

*சிற்றிலக்கியங்கள்*

பரணி, உலா, பிள்ளைத்தமிழ் ஆகியன முக்கிய சிற்றிலக்கிய வடிவங்களாக விளங்கின. பரணி அரசியல் அடிப்படையிலும், சமய அடிப்படையிலும் அமைந்தது. உலாவும் பிள்ளைத் தமிழும் அரசியல் அடிப்படையில் அமைந்தவை.

பிள்ளைத் தமிழ் : குலோத்துங்க சோழன் பிள்ளைத்தமிழ்
பரணி : கலிங்கத்துப்பரணி, தங்கயாகப் பரணி, கூடல் சங்கமத்துப் பரணி

பக்தி மரபு

சோழர் காலத்திலும் பல்லவர் - பாண்டியர் கால பக்தி மரபு தொடர்ந்தது. திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, நம்பியாண்டார் நம்பி, பட்டினத்துப் பிள்ளையார், தனிப்பாடல்கள் என்பன குறிப்பிடத்தக்கன.

இலக்கண நூல்கள்

சோழர் காலத்தில் வடமொழிக் கல்வி வளர்ச்சி பெற்றது. வட நூற் கருத்துகள், யாப்பு, அணி வகைகள் தமிழில் புகுந்தன. மணிப்பிரபாள நடை தமிழில் புகுந்தது. தமிழ் மொழி மரபில் சில மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின. அதற்கேற்ப புதிய இலக்கண நூல்கள் தோன்றின.

1. வீரசோழியம் - புத்தமித்திரன்
2. நேமிநாதம் - குணவீர பண்டிதர்
3. நன்னூல் - பவணந்தி முனிவர்
4. நம்பியகப்பொருள் - நாற்கவிராச நம்பி
5. தண்டியலங்காரம் - தண்டி
6. யாப்பெருங்கலம், யாப்பெருங்கல காரிகை - அமிர்தசாகரர்

பல்லவர், சோழர் காலத்தில் தமிழ் நாட்டில் வடமொழிக்கு இருந்த செல்வாக்கின் காரணமாக தமிழில் எழுத்து, சொல், பொருள், அணி, யாப்பு, என்னும் ஐவகை இலக்கணங்களில் ஏற்பட்ட மாற்றங்களை இன்னூல்கள் எடுத்துக் காட்டின.

சைவசித்தாந்த நூல்கள்

சோழர் காலத்தில் வைசித்தாந்த கருத்துக்களை விளக்கும் நோக்குடன் தத்துவ நோல்கள் தோன்றின.

1. திருவியலூர் உய்யவந்த தேவர் - திருவுந்தியார்
2. திருக்கடவூர் உய்யவந்த தேவர் - திருக்களிற்றுப் படியார்
3. மெய்கண்ட தேவர் - சிவஞான போதம்
4. அருணந்தி சிவாச்சாரியார் - சிவஞானசித்தியார்

பக்தி பாடல்களின் தொகுப்பு

பல்லவர் - பாண்டியர் காலத்தில் ஆழ்வார்கள், நாயன்மார்களால் பாடப்பட்ட பக்தி பாடல்கள் தொகுக்கப்பட்டன.

1. சைவத்திருமுறைகள் - நம்பியாண்டார் நம்பி
2. நாழாயிர திவ்விய பிரபந்தம் - நாதமுனிகள்

உரை நூல்கள்

தொல் காப்பியத்திற்கு முதல் முதலில் உரை எழுதியவர் இளம் பூரனர்

தொல் காப்பிய சொல் அதிகாரம் - சேனாவரையர்

தொல் காப்பிய பொருளதிகாரம் - பேராசிரியர்

யாப்பருங்கலம், வீரசோழியம் ஆகியவற்றிற்கு இக்காலத்திலேயே உரை எழுதப்பட்டன. மெய்கண்ட தேவர் தமது சிவஞான போதத்திற்கு தாமே உரை எழுதினார்.



# பெரிய புராணமும், வன் பக்தியும்

ஆசிரியர்
செல்வி.சி.கலாசினி.

சைவப் பண்பாட்டில் மிக முக்கிய அங்கமாக விளங்குவது பெரியபுராணம் ஆகும். தமிழ்ச் சைவர்களுடைய மிகமுக்கிய நூலாகிய பெரியபுராணம் சேக்கிழாரால் படைக்கப்பட்டது. சேக்கிழாரது காலம் இரண்டாம் குலோத்துங்கன் என அழைக்கப்படும் அநபாயன் என்னும் சோழ மன்னனின் காலமாகும். (கி.பி. 1133 - 1150) ஆனால் இரண்டாம் குலோத்துங்கனின் காலம் கி.பி. (1123 - 1148) என்றும் முதலாவது குலோத்துங்கன் காலத்தவர் (1073 - 1118) என்றும் சேக்கிழார் கூறப்படுவதைக் காணலாம். எனினும் சேக்கிழார் காலம் அநபாயனான இரண்டாம் குலோத்துங்கன் காலமெனவும் அது கி.பி. 12 ஆம் நூற்றாண்டு எனவும் எடுதாளப்படுதல் ஆராய்ச்சி முடிவுகளின்படி பொருத்தமானதாகும்.

பெரியபுராணத்திற்கு திருத்தொண்டா புராணம் என்ற பெயரை சேக்கிழார் இட்டார் என்பதை "இங்கிதனாமங்........ திருத்தொண்டர் புராணம் என்பாம்" என்ற நூற்பாயிரத்திலிருந்து அறிந்து கொள்ளலாம். இந்நூல் சைவ நாயன்மார்களது ஆன்மீக வாழ்வு பற்றிக் குறிப்பிடுகிறது. சிவனுக்கு தொண்டு புரிந்து இறைவனுக்கு கட்டுப்பட்டவர்கள் என்னும் கருத்தில் திருத்தொண்டர் என்னும் பெயரைச் சூட்டியுள்ளார் எனலாம். பின்னால் வந்த அறிஞர்கள் தான் இதை ஆழமான அன்பாகக் கருதி பெரிய புராணம் மிக அதியுயர்ந்த புராணம் எனக் கூறியுள்ளனர். "தொண்டர் புராணத் தொகைச் சித்தியோராறுந் தண்டமிழின் மேலாந்தரம்" என்று உமாபதிசிவம் கூறுவதிலிருந்தும் இதனை அறிந்து கொள்ளலாம்.

"புராணம்" என்பது "புராதன" என்ற சமஸ்கிருத சொல்லின் அடிப்படையில் "பழமையான கதை" எனக் கருதப்படுகிறது. "பக்தி" எனப்படுவது புராணங்களில் முன்னுரிமையாகக் கொண்டுள்ளது. "அன்பு" என்பது "சிவனை நோக்குவது" ஆகும். சிவனை வணங்குதல், தொண்டு செய்தல் என்பதை மக்களுக்கு ஊக்குவிப்பது என்பதை நாயன்மார்களின் கதைகளினூடாகப் பெரிய புராணம் குறிப்பிடுகிறது. பெரிய புராணத்தில் நாயன்மாரின் சரித்திரத்தினூடாக மிக முக்கிய நாயன்மார்களின் தகவல்களைக் காண முடிகிறது. சில தென்னிந்திய சரித்திரத்தேதிகளையும் குறிப்பிடும் இந்நூல் மற்றைய நூல்களை விட குறைவான கற்பனைப் பாத்திரங்களையே கொண்டுள்ளது எனலாம். பிந்திய புராணங்களை நோக்கும் போது இவ்வித்தியாசம் வருவதைக் காணலாம். சைவர்கள் பெரிய புராணத்தை சரித்திரீதியாக ஏற்றுக்கொள்கின்றனர்.

ஏனைய சமயங்களில் இக்கற்பனைகளை ஏற்றுக் கொள்வதில்லை. நாட்டுக் கதைகளின் சாயல் பெரியபுராணத்தில் காணலாம். ஆனால் இப்புராண உண்மைத்தன்மையின் பிரகாரம் நடைமுறை உண்மைகளை நிருபிக்க முடியாது என்பதும் கவனிக்கத்தக்கது.

உலகின் பார்வையில் சமூக ரீதியாக சமா்ப்பிக்கப்பட்டதே இந்நூல் ஆகும். தமிழர்கள் பெரிய புராணத்தினை தங்கள் குணாதிசயங்களைப் பிரதிபலிக்கும் சரித்திரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட நூலாக இது காணப்படுகிறது.

சமயப்பூசல் ஒன்று வந்து விட்டால் அரசியல் செல்வாக்குடைய சமயம் பிற சமயங்களைப் பழிவாங்கத் தவறியதில்லை என்பது உலக சமயங்களின் வரலாறாகும். அன்பு, சகோதரத்துவம், உயிர்களிடத்தில் இரக்கம் என்பவற்றைப் பேசிய எல்லாச் சமயங்களும் இப்பழிவாங்கும் பணியில் குறையே வைக்கவில்லை. சைவசமயமும் இதற்கு விதிவிலக்கல்ல கைத்தழுவிய கறிக்கோள் கொண்டிருந்த சேக்கிழாரும் இதில் விலக்கில்லை. எனவே சமயம் வேறு என்ற தத்துவமே என்றும் உண்மையாகும். இது பற்றிய விளக்கத்தைத் தருவதாகவும் பெரிய புராணம் அமைகிறது.

பெரிய புராணம் விருத்தத்தில் மூன்றில் ஒரு பிரிவினம், இது இரு காண்டங்களைக் கொண்டது. பதின்மூன்று சருக்கங்களையுடையது. முதல் ஐந்து சருக்கங்களை முதற்காண்டம் என்றும் பிரித்துள்ளனர். ஒவ்வொரு சருக்கங்களிலும் ஐந்து முதல் எட்டு வரையான நாயன்மார்களின் சரித்திரத்தைக் கூறுகிறது. முதலும் கடைசி அதிகாரமும் சுந்தரரின் சரித்திரத்தைக் கூறுகிறது. இலைமயிந்த சருக்கத்தில் கண்ணப்ப நாயனாரின் சரித்திரம் கூறப்படுகிறது.

பெரிய புராணத்தில் மொத்தப்பாடல்கள் 4281 ஆகும் ஆனால் உமாமதி சிவாச்சாரியாரின் சேக்கிழார் புராணப்படி 4253 பாடல்கள் பெரியபுராணத்தில் உள்ளதாக கூறப்பட்டுள்ளது. ஆகவே பின்வந்தோரால் 28 பாடல்கள் பின்னால் இடைச் செருகப்பட்டதாக இருக்கலாம் எனக் கூற முடிகிறது. உமாபதி சிவாச்சாரியால் ஆக்கப்பட்ட சேகிழார் புராணத்தில் செக்கிழாரது வாழ்க்கை அடிப்படை விபரங்கள் கூறப்பட்டுள்ளன. இதன்படி சேக்கிழார் வேளான் குலத்தைச் சேர்ந்தவர். இயற்பெயர் அருண்மொழித்தேவர் குலப் பெயர் சேக்கிழார் அநபாயச் சோழனுக்கு பிரதம மந்திரியாக இருந்தார். இவருக்கு உத்தம சோழப்பல்லவன் எனும் பெயரைச் சூட்டி மன்னன் கௌரவித்தான்.

சமண காவியமான சீவக சிந்தாமணியை மன்னன் விரும்பிப் படிப்பதைக் கண்ட சேக்கிழார் அதைத் தடுக்க விரும்பினார். அரசரை நோக்கி நீர் விரும்பிப் பராட்டி வரும் இது சமண நூல் இது இன்மைக்கு மகாது மறுமைக்கு மாகாது. இதைவிட்டு உத்தமமாகிய சிவ கதையைப் பயின்றால் இம்மை, மறுமை, வீடு என்ற மூன்று பலனும் கிடைக்கும். அப்படிச் செய்யாமல் இப் பொய்நூல் கற்று பொழுது போக்குவது கரும்பிருக்க இரும்பு கடித்தலும் விளக்கிருக்க மின்மினித்தீ காய்தலும் போல உள்ள தேயாகும். என்றார்.

சைவநூல்கள் போல் சீவகசிந்தாமணி இம்மையையோ மறுமையையோ கூறவில்லை என்ற தாக்கத்தை மன்னனுக்கு ஏற்படுத்தி மன்னனின் மனதை மாற்றி அடியவர்களைப் பற்றி அறியுமாறு கூறியதும் மன்னன் அடியார் கதைகளை ஆராயுமாறு செலவினங்களையும் வழங்கினான். உடனே சேக்கிழார் சிதம்பரம் சென்று தில்லை நடராஜப் பெருமானைப் பணிந்து நான் பாட இருக்கும் பெரு நூலுக்கு முதல் அடி தந்து ஆசிர்வதித்தருளுக என வேண்ட அப்பொழுது 'உலகெலாம்' என கூத்தபிரான் அடியெடுத்துக் கொடுக்க பெரியபுராணத்தை பாடலானார்.

சேக்கிழார் தனது புராணத்தில் சேர்த்துக் கொண்ட கதைகள் அவரத காலத்திற்கு முற்பட்டதாகும். அதனால் நாயன்மார்கள் பற்றி அறிவதற்கு அவர்கள் வாழ்ந்த இடங்களுக்குச் சென்று அங்குள்ள மக்களுடன் உரையாடி நாயன்மார் பற்றிய வரலாற்றை அறிந்து தனதுகதைகளை வளப்படுத்திக் கொண்டார். சைவ ஆன்மீக பாரம்பரியங்கள் இந்நூலில் நன்கு விபரிக்கப்பட்டுள்ளன. இது தென்னிந்திய சைவத்தின் முக்கிய வளர்ச்சிப் படியாகவும் உள்ளது. சேக்கிழார் பெரிய புராணத்தைப் பாடியதும் அதன் விளக்கத்தையும், கவர்ச்சியான

உரைகளையும் கேட்ட மன்னன் சேக்கிழார் பெருமானுக்கு "தொண்டர்சீர் பரவுவார்" என்னும் பெயரை வழங்கி கௌரவித்தான்.

பெரிய புராணத்திற்கு முதல் நூலாக அமைந்த சுந்தரமூர்த்தி நாயனார் அருளிய திருத்தொண்டர் தொகையும் வழிநூலாக நம்பியாண்டார் நம்பி பாடிய திருத்தொண்டர் திருவந்தாதியுமாகும். இவற்றின் சார்பு நூலாக எழுந்ததே பெரிய புராணமாகும். ஒவ்வொரு நாயன்மார் பற்றியும் கதைகளை உருவாக்கி திருத்தொண்டர் திருவந்தாதியிலிருந்து தகவல்களைப் பெற்று வேண்டிய மாற்றங்களைச் செய்து இந்நூலை ஆக்கியுள்ளார். உருமாற்றங்கள் செய்ய புராண மரபு சேக்கிழாரை அனுமதித்தது.

நாயன்மார் பிறந்த இடம், அவர்களுடைய குடும்பப் பின்னனி விசேடமாக சிவனிடம் அவர்கள் காட்டிய பற்று, சிவனால் அவர்களுக்க காட்டப்பட்ட அருள் என்பன பற்றி பெரிய புராணத்தில் அழுத்திக் கூறப்பட்டுள்ளது. அதாவது அன்பு அருள் என்பன பற்றி அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. மேலும் நாயன்மார்களால் மேற்கொள்ளப்பட்ட வன்செயல்களையும் பெரிய புராணத்தில் சேக்கிழாரால் கூறப்பட்டுள்ளமையைக் எகாணலாம். தனியே அன்பு, அருள் என்பன பற்றி மட்டும் கூறவில்லை தமிழ்ச் சைவத்தினதும் காலாச்சாரத்தினதும் விழுமியங்களையும் கூறியுள்ளார். நாயன்மார்கள் வன் செயலில் ஈடுபட்டமையைக் காணலாம். வன்னன் பின் எண்ணக்கருவை நாயன்மார்கள் மேற்கொண்ட வன்னன்புச் செயல்களை நோக்குவோம்.

வன்மையும் அன்பும் இரு வேறுபட்ட கருத்துடைய பதங்களாகும். வன்னன்பு என்பது ஒரு வன்மையான வெளிப்பாடாகும். இது கடவுளிடம் செலுத்தப்படும் மானசீகமான தூண்டலாகும். வன்னன்பு என்பது ஒரு மூர்க்கமான ஈடுபாடு எனப்படுகிறது. பக்தியில் மூர்க்கம் கொள்வது வன்னன்பு எனலாம். அன்பு செலுத்துதலில் மூர்க்கத்தனம் எனக் கொள்ளலாம். ஏனெனில் வன்மை என்பது பலம், கடுமை, வன்செயல், கோபம், சக்தி, தொழில் வல்லமை என்ற பல கருத்துக்களை வழங்குதலாகும். பெரிய புராணத்தில் நாயன்மார்கள் மூர்க்கத்தை தங்களுக் கோவன்றிப் பிறருக்கோ காட்டுவதைக் காணலாம். சிவனுக்கோ சிவனடியார்களுக்கோ ஊறு செய்வதைத் தண்டித்தல், தங்களுடைய தொண்டுகளுக்கு, சேவைகளுக்கு இடையூறு செய்பவர்களைத் தண்டித்தல், பூசைக்குரிய பொருட்களை அழுக்காக்குதலைத் தடுத்தல் போன்றன எல்லாம்' வன்னன்பிற்பாற்படும்.

பெரிய புராணத்தில் சிவவழிபாட்டுக்கு இடையூறு நேர்ந்தால் அதைத் தங்களால் தடுக்க முடியாவிட்டால் தங்களைத் தாங்களே துன்புறுத்தல் வன்னன்பின் வகையில் அடங்கும். சிவனின் மீது கொண்ட அளவற்ற அன்பால் தங்கள் அன்பின் வெளிப்பாட்டை தடுக்கும் எல்லாக் காரணிகளையும் எதிர்த்தல் அல்லது தங்களையே அர்ப்பணித்தல் வன்னன்பு வகையில் அடங்கும் பெரிய புராணத்தில் அன்பு வன்னன்பின் மூலம் வெளிப்படுத்தப்படுகிறது.

எனவே வன்னன்பு என்பது அன்பு செலுத்துதலின் அதிதீவிர ஈடுபாட்டின் கொரேத்தன்மை எனக் கூறிக் கொள்ள முடிகிறது. அதாவது அன்பு செலுத்துபவர் அன்புக்குரியவருக்காக தன்னைத்தானே ஒறுக்கும் பிறரையும் ஒறுத்துக் கொண்டு மூர்க்கமாக நடந்து கொள்ளுதலே வன்னன்பு எனக் கூற முடிகிறது. சாதாரண அன்பு என்பது அதாவது மென் அன்பு என்பது அமைதியான அகம் சார்ந்ததொன்றாகவும், அகிம்சையாகவும் வெளிப்படுத்தப்படுவதாக அமைவு பெறுகிறபோது வன்னன்பு என்பது அசாதாரணமாக அமைவு பெறுவதாகும். அதாவது

ஆக்கிரமிப்புச் சார்ந்த புறநிலையிலும் இம்சை சார்ந்த புறநிலையிலும் அன்பு என்ற பார்வையில் அகநிலையிலும் வெளிப்படுத்தப்படுவதாகவும் அமைவு பெறுகிறது எனக் கூறிக் கொள்ளலாம்.

பெரியபுராணத்தில் சிவனடியார்கள் சிவன்மேல் காட்டிய அதிதீவிர அன்பினால் தங்களையும் பிறரையும் அழிக்கும் வகையில் வன்னன்புச் செயல்களில் ஈடுபட்டுள்ளமையினை அறிய முடிகிறது. இவை ஒரே வகையானவையால் ஆயுதங்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டவையுமாகவுள்ளன. நாயன்மார்களால் மேற்கொள்ளப்பட்ட வன்னன்புச் செயல்கள் பின்வருமாறு -

1. இயற்பகை - மனைவியையும் இனத்தவரையும் வாளால் வெட்டிக் கொன்றார்.
2. எறிபத்தர் - கோடாரியால் பட்டத்து யானையையும் ஐவரையும் கொன்றார்.
3. கண்ணப்பர் - தன் கண்களைத் தோண்டி இறைவனுக்குப் பதித்தார்.
4. அறிவட்டாயர் - அரிவாளால் தனது கழுத்தை வெட்டியவர்.
5. மூர்த்தி - தனது கையை அரத்தில் அராவினார்.
6. திருக்குறிப்புத் தொண்டர் - தனது தலையை கல்லுடன் மோதியவர்.
7. சண்டேஸ்வரர் - தந்தையின் காலை அரிவாளால் வெட்டினார்.
8. குலச்சிறையார் - எண்ணாயிரம் ஜைனரைக் கொன்றார்.
9. ஏயர் கோன் கலிக்காமர் - தன்வாளால் வயிற்றைப் பிளந்து அரிந்தார்.
10. மூர்க்கர் - தனது கட்டளையை ஏற்க மறுத்தவரைக் கட்டாரியால் குத்தினார்.
11. சிறுத்தொண்டர் - சிவனடியாருக்கு மகனைக் கறி சமைத்துக் கொடுத்தார்.
12. சேரமான் பெருமாள் - தனது வாழ்க்கையை முடிக்க வாளெடுத்தார்.
13. புகழ்ச் சோழர் - எரியும் நெருப்பில் இறங்கி உயிர் நீத்தார்.
14. கலிக்கம்பர் - கூரிய வாளால் தனது மனைவியின் கையை வெட்டினார்.
15. காளியார் - ஆயுதத்தால் தனது தொண்டையை அறுத்தவர்.
16. சக்தி - சிவனடியாரை நிந்திப்பவர்களுடைய நாக்கை அறுத்தவர்.
17. காளர் சிங்கன் - மனைவியின் கையை வெட்டியவர்.
18. செறுத்துணையார் - அரசியின் மூக்கை வெட்டினார்.
19. கோட்புலி - உறவினரை வாளால் வெட்டி கொன்றார்.
20. நம்பியாரூரர் - தன்னைக் கொல்ல கத்தியை உருவியவர்.

என்பனவாகும்.

இவ் வன்னன்புச் செயல்களில் அதாவது வன்பக்திச் செயல்களில் சேரமான் பெருமானதும், சுந்தரரதும் செயல்கள் சிவனால் தடுத்தாட் கொள்ளப்பட்டதோடு அரிவட்டாயர், திருக்குறிப்புத் தொண்டர், காளியர் ஆசியவர்களது செயல்களும் திருத்தாட் கொள்ளப்பட்டமையால் இவை முற்றுப் பெறவில்லை என்றே கூறலாம். ஏனையவர்களுடைய வன்னன்பு என்று சொல்லப்படுகின்ற வன்பக்திச் செயல்கள் முற்றுப் பெற்றன.

இவ்வன்னன்புச் செயல்கள் நான்கு வகைப்பட்டதாகக் காணப்படுகிறது. எதிரிகளைத் தண்டித்தோர். பத்துப்பேர், தங்களைச் தண்டித்தோர் எட்டுப்பேர், சிவனடியாருக்காக மகனைத் தண்டித்தவர் ஒருவர் என தங்களைத் துன்புறுத்துவதிலிருந்து சிவன் அவர்களைக் காப்பாற்றினார். என்பதோடு நாயன்மார் மற்றவரைத் தண்டிக்க அனுமதியளித்தும் பாதிக்கப்பட்டோரைக் காப்பாற்றியும் உள்ளனர் என்பதையும் இவ்வன்னன்புச் செயல்களின் மூலமாகிய வன்பக்திச் செயல்கள் மூலம் அறிய முடிகிறது.

# வாதரவத்தைப் பிரதேச நோக்கு

பு. மதுர்ஷா,
தரம் – 8,
யா/ வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயம்,
வாதரவத்தை.

அமைவிடம்

யாழ்ப்பாண மாவட்டத்தில் வலிகாமம் கிழக்குப் பிரதேச செயலகத்திற்குட்பட்ட ஒரு கிராமம் வாதரவத்தை. இது இப்பிரதேச செயலகத்திலே பரப்பளவில் பெரியதான ஒரு கிராமசேவகர் பிரிவாகும். J/280 என்று இலக்கமிடப்பட்டிருக்கும் வாதரவத்தைக் கிராமசேவகர் பிரிவில் வாதரவத்தை, வீரவாணி, பெரிய பொக்கணை என்று மூன்று கிராமங்கள் காணப்படுகின்றன. இதன் பரப்பளவு 768 ஹெ ஆகும். இதில் கடனீரேரி, சதுப்பு நிலம் 480ஹெ இலும் பற்றைக் காடுகள் 162 ஹெ ஆகவும், பயன்பாட்டு நிலம் 126 ஹெ ஆகவும், விவசாயத்திற்கு 62 ஹெ உம் பயன்படுகின்றன. விவசாயத்திற்கு பயன்படும் நிலத்தில் 2/3 பங்கு நெற்செய்கைக்கே பயன்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

வாதரவத்தையின் புவியியல் எல்லைகளாக தெற்கே தென்மராட்சிப் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட மட்டுவில் வடக்கும், கிழக்கே சரசாலை மேற்கும், வடக்கே கரவெட்டிப் பிரதேச செயலகத்திற்குட்பட்ட கப்பூதுக் கிராமமும், மேற்கே புத்தூர் கிராமமும் காணப்படுகின்றன. எனினும் வாதரவத்தைப் பிரதேசத்தை இலகுவில் வரையறுக்கக் கூடியதாக இக்கிராமத்தின் நான்கு புறமும் கடனீரேரிகள் சூழ்ந்து காணப்படுவதால் இது மாரிகாலத்தில் ஒரு தீவாகக் காட்சி தரும். இதனால் மாரி காலத்தில் பாலங்களிடப்பட்ட ஒன்றிரண்டு வீதிகளின் மூலமே ஏனைய பிரதேசங்களை விட வேறுபட்டதாகவும் தனித்துவம் வாய்ந்ததாகவும் காணப்படுகின்றது. எனினும் இத்தன்மைகள் தொடர்பாக இன்னமும் பூரணமான ஆய்வுகள் மேற்கொள்ளப்படவில்லை.

பாறைகள்

பாறைகளைப் பொறுத்த வகையில் மயோசின் (Miocene) காலச் சுண்ணக்கற் பாறைகளை அதிகம் கொண்டுள்ளன. ஆனால் இவை உவர்த்தன்மை கொண்டனவாகக் காணப்படுகின்றன. இத்தகைய சுண்ணக்கற் பாறைகளை வாதரவத்தையின் அனைத்துப் பகுதிகளிலும் காணக் கூடியதாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

மண்

மண்ணானது இடத்துக்கிடம் வேறுபட்ட தன்மை கொண்டதாகக் காணப்படுகின்றது. வாதரவத்தை, வீரவாணி, பெரிய பொக்கணை என்ற மூன்று குடியிருப்பு நிலங்களும், சாம்பல்நிற நரைநிற மண்ணாகக் காணப்படுகின்றன. கேதுவு, இரட்டாங்காலி, வேலங்காடு, ஆவரஞ்சாட்டி, தண்டார்பிட்டி, தோட்டப்புறத்தி, தோரணைக்கந்து, மணிக்கம்பிராரி போன்ற பகுதிகளில் வண்டல் மண் ஓரளவுக்குக் காணப்படுகின்றன. இதனால் இப்பகுதிகளில் தோட்டச் செய்கை நடைபெறுகின்றது.

இதனைவிட இட்டுத்திட்டி, கொந்தனியன்தூவு, மரிக்காரைப்பிட்டி, நாகம்பிராலி போன்ற பகுதிகளில் கரையோர மணற்படிவுகள் காணப்படுகின்றன. மேலும் இப்பகுதி மண்ணில் இயல்பாகவே உவர்த்தன்மை காணப்படுகின்றது. இதற்கு கடனீரேரிகள் இப்பகுதியைக் சூழக் காணப்படுகின்ற தன்மையைக் கூறலாம்.

## தரைத்தோற்றம்

தரைத்தோற்றம் தொடர்பான நிலைமைகளில் வாரவத்தை பெரிதும் ஒரே அளவான உயரத்தைக் கொண்ட சமதரையாகக் காணப்படுகின்றது. எனினும் இட்டுத்திட்டி, சுடலைப்பிட்டி, ஓணான்பிட்டி, நடுவில்பிட்டி, கொந்தனியன் தூவு, நாகம்பிராலி, இரட்டாங்காலி போன்ற பிட்டிப் பகுதிகளும் திட்டிப் பகுதிகளும் ஏனைய பகுதிகளைவிட உயரம் கூடியனவாகக் காணப்படுகின்றன. இதனைவிட கோடை காலப்பகுதிகளில் கடனீரேரி காணப்படும் பகுதிகள் வரண்டு காணப்படுவதனால் அப்பகுதிகள் உயரம் குறைந்த பள்ளப் பகுதிகளாகக் காணப்படுகின்றன.

## காலநிலை

காலநிலை நிலைமைகள் யாழ் குடாநாட்டின் ஏனைய பகுதிகளுடன் ஒப்பிடும் போது ஒத்த தன்மையாகக் காணப்பட்டாலும் இப்பகுதி பெருமரங்கள் அற்ற வெளிப்பகுதியாகக் காணப்படுவதால் காற்றுவீசும் காலங்களில் அதனை உணர முடியும். மேலும் பெப்ரவரி தொடக்கம் - செப்ரெம்பர் வரையிலும் அதிகளவான வெப்பத்தினை உணர முடியும்.

## இயற்கைத் தாவரங்கள்

இயற்கைத் தாவரங்கள் என்ற வகையில் இப்பகுதியின் கிழக்குப் புறமாக பற்றைக் காடுகளும், முட்புதர்களும் காணப்படுகின்றன. இவை பூவரசம்பிட்டி, பெரியாண்டி, முரகோயில் மற்றும் பாலைக்கட்டுப் பகுதிகளிலிருந்து ஆரம்பித்து சரசாலை மேற்குவரை தொடர்ச்சியாகக் காணப்படுகின்றன. இக்காட்டில் தில்லை, பொற்பத்தை, பீச்சு, விளாத்தி, நாவல், காரை, சூரை, கரும்பை, கிஞ்ஞா, துவரை, தாழை என்பன போன்ற தாவரங்கள் காணப்படுகின்றன. குடியிருப்புப் பகுதிகளில் பூவரசு, சீமைக்கிளுவை, கிளுவை, வேம்பு, புளி, பாவட்டை (ஆடாதோடை) என்பன காணப்படுகின்றன. இவற்றுக்கான நீரானது பருவமழை மூலம் மட்டுமே கிடைக்கின்றது. இதனால் இவை கோடைக் காலப் பகுதியில் ஏற்படும் அதிக ஆவியுயிர்ப்பினைத் தடுக்கும் நோக்கில் இலைகளை உதிர்த்துக் காணப்படுகின்றன. தொடர்ச்சியான நீர்ப்பாவனை கிடைக்குமாயின் இப்பிரதேசத்தில் இயற்கைத் தாவரங்கள் நன்கு வளர்ச்சி பெறும். ஆனால் வாதரவத்தை மக்களின் நுகர்வு மற்றும் வர்த்தகத் தேவையின் பொருட்டு இப்பகுதி இயற்கைத் தாவரங்கள் அழிக்கப்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## நீர்வளம்

நீர்வளத்தினைப் பொறுத்தவரை இப்பிரதேசம் துரதிஸ்டவசமான பிரதேசம் என்றே கூறலாம். ஏனெனில் யாழ் குடாநாட்டின் இயற்கை வளமான தரைக்கீழ்

நீர் வளமானது (Groundwater) இப்பிரதேசத்தில் உவர்த்தன்மையானதாகக் காணப்படுகின்றது. 1965களுக்கு முன்னர் நன்னீராகக் காணப்பட்ட இப்பகுதித் தரைக் கீழ் நீரானது பின்னர் உப்புநீராக மாறிவிட்டது. தற்போது இங்கு கிடைக்கும தரைக்கீழ் நீர் உவராக இருப்பதனால் இதனை எத்தகைய தேவைக்கும் பயன்படுத்த முடியாது இப்பகுதி மக்கள் தாங்கெணாத் துன்பத்தை அனுபவிக்கின்றனர். இப்பகுதி கடனீரேரிகளால் சூழப்பட்டுள்ளது. வாதரவத்தையின் மேற்குப் பகுதியினூடாக (மாக்கடல்) பிரவேசிக்கும் தொண்டைமனாறு கடனீரேரி வடக்காக இக்கிராமத்தைச் சுற்றி வந்து தென்பகுதியினூடாக (வண்ணாத்திப் பாலம்) பிரவேசிக்கும் உப்பாற்றுடன் கிழக்குப் பகுதியில் (மல்லிகைப் பரப்பு) கலக்கின்றது. இந்நீரேரிகள் மாரிகாலத்தில் நீர்நிறைந்து காணப்படும். இது உவர் நீருற்றாகவே காணப்படுகின்றது. இப்பகுதியில் தோண்டப்படும் கிணறுகள் இப்பகுதியின் கடனீரேரிகளின் ஆழத்தைவிட ஆழமாகத் தோண்ப்படுவதனாலேயே கடனீரேரியின் உவர்நீர் தரைக்கீழ் நீராகக் காணப்படுகின்றது. யாழ்ப்பாணக் குடாநாட்டின் இரண்டு பெரிய கடனீரேரிகளான உப்பாறு, தொண்டைமானாறு என்பன வாதரவத்தைப் பிரதேசத்திலேயே ஒன்றாகக் கலக்கின்றன. இதனால் இரண்டு கடனீரேரிகளை இணைத்தும் தேவைக்கு நீரின்றி மக்கள் அல்லறப்படுகின்றனர். மேலும் இக்கடனீரேரிகள் மாரிகாலத்திலேயே நீரினை தேக்கி வைத்திருக்கின்றன. கோடைக் காலத்தில் இவை வரண்டு காணப்படுகின்றன. இதனால் வைகாசி, ஆனி, ஆடி போன்ற மாதங்களில் கடும் காற்றுக்கள் வீசும் போது புழுதி வாரியிறைக்கப்பட்டு குடியிருப்புக்கள் மீது கொட்டப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

குளங்கள் இப்பிரதேசத்தில் காணப்படுகின்றது. ஆனால் இவை மாரிகாலத்தில் மட்டும் நீர் நிரம்பிக் காணப்படுகின்றன. ஆனாலும் இவற்றின் பயன்பாடு ஒப்பீட்டளவில் குறைவாகும். இவ்வகையில் இங்கு விழுதுவு பெரியகுளம், கூடைக்கிராய், கிராய், வேட்டுக்குளம், இயமாவில் குளம், மணிக்கம்பாரிக் குளம், ஆவரஞ்சாட்டிக் குளம் என்பனவற்றைக் குறிப்பிட்டுக் கொள்ளலாம். இவை கோடையில் வரண்டும் மாரியில் நீர் நிறைந்தும் காணப்படுகின்றன.

**இயற்கை வளங்கள்**

இயற்கை வளங்களைப் பொறுத்தவரையில் இப்பகுதியில் எத்தகைள வளமும் இல்லை. நீர்வளம் இல்லாமையினால் நில வளத்தைப் பயன்படுத்த முடியவில்லை. ஆனால் இற்றைக்கு 35 வருடங்களுக்கு முன்னர் நீர்வளம் சிறப்பாகக் காணப்பட்டதாகவும், இதனால் அக்காலத்தில் நிலவளம் சிறப்பாகக் காணப்பட்டதாகவும், இதனால் அக்காலத்தில் நிலவளம் (Land Resource) நீர்வளம் (Water Resource) என்பன சிறப்பான பயன்பாட்டிற்கு உட்படுத்தப்பட்ட என்பது குறிப்பிடத்தக்கது. இதனைவிட வாதரவத்தைப் பிரதேசம் எங்கும் சுண்ணக்கற் பாறைகள் காணப்படுகின்றன. இதனை வீதி அமைத்தல், கட்டடங்களை அமைத்தல் போன்ற நிர்மாண (Construction) தேவைகளுக்குப் பயன்படுத்தலாம். இதனால் இதனை அகழ்ந்து விற்பனை செய்வதில் பலர் ஈடுபட்டனர். எனினும் யாழ் - கண்டி வீதி மூடப்பட்டமையால் இதனுடைய தேவை குறைந்ததனால் இதனை எவரும் அகழவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். இதனைவிட 1995க்கு முற்பட்ட காலப்பகுதியில் இப்பகுதியில் உப்பு இயற்கையாகவே விளைந்திருக்கும். இதனால் இதனை மக்கள் அள்ளி விற்பனை செய்தனர். எனினும் தற்போது இக்கிராமத்திற்கு உட்பட்ட பகுதிகளில் சிறியளவு உப்பு விளைகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

### கிராமத்தின் உட்பிரிவுகள்

வாதரவத்தை J/280 கிராம சேவகர் பிரிவு வாதரவத்தை, வீரவாணி, பெரிய பொக்கனை என்ற மூன்று பகுதிகளைக் கொண்டிருந்தாலும் இவற்றுக்கிடையில் குறிச்சிகள் பல காணப்படுகின்றன. இன்றும் இப்பகுதியில் வசிப்பவர்களுக்கு இப்பெயர்களைச் சொன்னாலேயே குறித்த இடம் தொடர்பாக உடன் அறிந்து கொள்வார்கள். இந்தவகையில் வீரவாணிப் பகுதியில், புளியடிப்பிட்டி, வடலிப்பிரிவு, பாலைக்கேணி, சூடுவேந்தன், காலைப்பாலை, வெட்டுக்குளம் என்பனவும், வாதரவத்தைப் பகுதியில் கந்தன் தோட்டம், ஒதியடி, கிராய், கூடடைக்கிராய், கல்லுத்தோட்டம், இட்டுத்திட்டி, ஆவரஞ்சாட்டி, குரக்கன்பத்தை, தாண்டார்பிட்டி, தோட்டப்புறத்தி, இயமா, வேலங்காடு என்பனவும், பெரிய பொக்கணைப் பகுதியில் கேதுவூர், கட்டைக்காடு, அம்பலா, மொட்டையர் கலட்டி, பெரிய வேலன்திடல், சின்னவேலன்திடல், மணிக்கப்பராரி, தோறணைக்கந்து, வெள்ளெருவன், ஆலடிகொத்துக்கட்டி, கண்டியடிப்பள்ளம், முந்தல், பொடுங்கபுட்டி என்பனவும் காணப்படுகின்றன. இதனைவிட பெரியாண்டி, பூவரசம்பிட்டி, பனிம்பில், முரகோயில், பரட்டைக்காடு, மரிக்காரைப்பிட்டி, சோனகன்கூர், மான்பாய்ந்த வாய்க்கால், நாகம்பிராலி போன்றனவும் இப்பிரதேசத்தில் காணப்படுகின்றன.

இவற்றுக்கான பெயர்கள் எல்லாம் காரணப் பெயராக அமைந்தன என்பது குறிப்பிடத்தக்கது. ஏனெனில் முன்பு தனியொருவர் காரணத்துக்காக இட்ட பெயர்கள் நாளடைவில் அவ்விடத்துக்கான நிரந்தரப் பெயராக அமைந்தன என்பதும் குறிப்பிடதக்கதாகும்.

### குடித்தொகை நிலைமைகள்

சமூக பொருளாதார நிலைமைகளில் குடித்தொகையினை நோக்கும் போது இப்பகுதியில் தற்போது 1256 (2007) பேர் காணப்படுகின்றனர். அத்துடன் இங்கு 302 (2007) குடும்பங்கள் காணப்படுகின்றன. ஆனால் 1990க்கு முன்னால் இப்பகுதியில் 1500க்கு மேற்பட்ட மக்களும் 350 குடும்பங்களும் காணப்பட்டன. தற்போது இப்பிரதேசத்தில் குடித்தொகை குறைவாகவே காணப்படுகின்றது. இதற்கு 1995ல் இடம்பெற்ற இடம்பெயர்வும் திருமணம் மற்றும் தொழில் வாய்ப்புக்காக இப்பகுதி மக்கள் வேறிடம் செல்கின்ற நிலைமையும் இப்பகுதி குடித்தொகையின் எண்ணிக்கையைக் குறைத்துள்ளன. இப்பகுதியில் இன்று ஆண்கள் பெண்களை விட அதிக எண்ணிக்கையால் கூடியே காணப்படுகின்றனர்.

1995ல் இடம்பெயர்ந்தவர்களில் மிகக் குறைவான எண்ணிக்கையைக் கொண்டவரே மீளத் திரும்பியுள்ளனர். ஏனையோர் தாம் இடம்பெயர்ந்து சென்ற இடங்களிலேயே குறிப்பாக வன்னிப் பகுதியில் தங்கியுள்ளனர். இந்த வகையில் இப்பகுதி மக்கள் தாம் இடம்பெயர்ந்த இடங்களிலும் குழுவாகவே வசிக்கின்றனர். பூநகரி, நாகபடுவான், முழங்காவில், பாண்டியன் குளம், ஐயங் குளம், கரும்புள்ளியான் குளம், விசுவமடு, உடையார் கட்டு, ஸ்கந்த புரம், கிளிநொச்சி, கோட்டை கட்டிய குளம், அம்பலப்பெருமாள் குளம், போன்ற பகுதியிலே இவர்கள் வாழ்ந்து வருகின்றனர். இதனால் தற்போதுள்ள வாதரவத்தை குடித்தொகை குறைந்து காணப்படுகின்றது.

| ஆண்டு | குடும்பங்களின் எண்ணிக்கை | சனத்தொகை |
|---|---|---|
| 1985 | 365 | 1475 |
| 1995 | 355 | 1330 |
| 1996 | 175 | 627 |
| 1997 | 184 | 685 |
| 1998 | 208 | 789 |
| 1999 | 214 | 816 |
| 2000 | 213 | 810 |
| 2001 | 218 | 833 |
| 2002 | 260 | 950 |
| 2003 | 298 | 1152 |
| 2004 | 298 | 1152 |
| 2005 | 298 | 1156 |
| 2006 | 300 | 1192 |
| 2007 | 302 | 1256 |

## பிறப்பு வீதம்

வாதரவத்தையின் பிறப்பு வீதமானது மிகவும் குறைவாகக் காணப்படுகின்றது. இதற்கு கல்வியறிவும், ஓரளவுக்குக் கிடைப்பனவுள்ள சுகாதார, மருத்துவ வசதிகளையும் குறிப்பிட்டுக் கொள்ளலாம். இப்பகுதி மக்கள் தமது பொருளாதார நிலைமை ஸ்திரமற்ற தன்மை காணப்படுவதனால் தமது குடும்ப அங்கத்தவர்களின் எணண்ணிக்கையை அதிகரிக்க விரும்பவில்லை. மேலும் கல்வியறிவும் குறிப்பாகப் பெண்களின் கல்வியறிவும் அதிக குழந்தைகள் வேண்டாம் என்ற எண்ணத்தைத் தோற்றுவித்துள்ளது. மேலும் இங்கு சுகாதார, மருத்துவ வசதிகள் ஓரளவுக்குக் கிடைப்பதனால் குடும்பக் கட்டுப்பாட்டு முறைகளை இவர்கள் கடைப்பிடிக்கின்றனர். இந்தவகையில் நிரந்தர, அரைநிரந்தர, தற்காலிக குடும்பக்கட்டுப்பாட்டு முறைகளை கடைப்பிடிக்கின்றனர். இதனால் பிறப்பு வீதமானது 1000 : 18 என்ற அளவில் காணப்படுகின்றது.

## இறப்பு வீதம்

இறப்பு வீதமும் யாழ் குடாநாட்டின் ஏனைய பகுதிகளுடன் ஒப்பிடும்போது குறைவாகவே உள்ளது. இதற்கும் மருத்துவ, சுகாதார வசதிகளின் கிடைப்பனவும், வாதரவத்தையின் இயற்கைச் சூழலும் காரணம் எனலாம். மேலும் இயற்கை இறப்புக்கள் மட்டுமே இடம்பெறுகின்றன. ஏனைய வன்முறை தற்கொலை இறப்புக்கள் மிகக் குறைவு என்றே கூறலாம். 1000 : 10 என்ற வகையில் இறப்புவீதம் உள்ளது. ஆயுள் எதிர்பார்ப்பானது வாதரவத்தையில் உயர்வாகவே உள்ளது. சராசரியாக இது 76 ஆக உள்ளது. இதற்கு இப்பகுதி மக்களின் உணவுப் பழக்க வழக்கங்களும், புத்துணர்ச்சி அளிக்கக்கூடிய வாதரவத்தையின் வனப்புமிகுந்த சூழலுமே காரணம் எனக் கூறலாம். மேலும் இப்பகுதி மக்களின் அன்றாட உணவில் புரதம் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

### சிசு மரணம்

சிசு மரணவீதமும் வாதரவத்தையில் குறைவாகும். இதற்கு வாதரவத்தையில் காணப்படும் மருத்துவ சுகாதார வசதிகளைக் காரணமாகக் குறிப்பிடலாம். மேலும் தற்போது பிறக்கும் குழந்தைகள் எல்லாமே மருத்துவமனைகளிலேயே பிறக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கதாகும். ஆனால் 1980களுக்கு முன்னர் போதிய மருத்துவ சுகாதார வசதிகளின் பற்றாக்குறை காரணமாக சிசுமரண வீதம் உயர்வாக இருந்தது. தற்போது இது 1000 : 03 என்ற அளவில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

### விவாகம்

குடித்தொகை சார்ந்த நிலைமைகளில் விவாக நிலைமையினை நோக்கினால் பல்வேறு விடயங்கள் புலப்படும். விவாக வயதினை நோக்கும் போது ஆண்களுக்குச் சராசரியாக 23 வயதும் பெண்களுக்கு 21 வயது ஆகவும் காணப்படுகின்றது. ஆனால் இதற்குக் குறைவாகத் திருமணம் செய்பவர்களும் உள்ளனர். ஏனைய பிரதேசங்களுடன் ஒப்பிடும் போது இப்பகுதியில் இளவயதுத் திருமணங்கள் அதிகமாகவே உள்ளன.

திருமணங்கள் தாய், தந்தையரின் விருப்பத்துடன் கூடிய பேச்சுத் திருமணங்களும், காதல் திருமணங்களும் காணப்படுகின்றன. வாதரவத்தையில் 2006ம் ஆண்டு நடைபெற்ற திருமணங்களில் 53% மானவை மணமகன், மணமகள் இருவருமே வாதரவத்தைப் பகுதியைச் சேர்ந்தவர்களாக உள்ளனர். 47% மானவை மட்டுமே மணமகள் அல்லது மணமகன் வேறிடத்தைச் சேர்ந்தவராக உள்ளனர். வெளியிடத் திருமணங்களில் அதிகம் பங்கெடுப்பவர்களாக ஆண்களே உள்ளனர். குறிப்பாக இப்பகுதியைச் சேர்ந்த அரச உத்தியோகம் புரியும் ஆண்களில் 96% மானவர்கள் வெளியிடத் திருமணத் தொடர்புகளைப் பேணுகின்றனர். இதற்கு இந்தஸ்து, மற்றும் சீதனம் என்பன முக்கியமான காரணியாகும். முக்கியமான விடயம் யாதெனில், வெளியிடத்தில் திருமணம் செய்பவர்களில் பலர் திரும்பவும் ஊருக்குள் வருவதோ அல்லது கிராமத்தின் அபிவிருத்தியில் பங்கெடுப்பதோ மிகவும் குறைவு. திருமணங்கள் பெரிதும் பதிவு பெற்றனவாகக் காணப்படுகின்றன.

### விவாக வாழ்வு முறிவுகள்

வாதரவத்தையில் ஏனைய பகுதிகளுடன் ஒப்பிடும் போது விவாகரத்துக்கள் மிகவும் குறைவாகும். சமூக ஒத்திசைவு மற்றும் புரிந்துணர்வுகள் காரணமாக இப்பிரதேசத்தில் விவாகரத்துக்கள் இல்லை என்றே கூறலாம். ஆனால் கணவனால் கைவிடப்பட்ட அல்லது மனைவியால் கைவிடப்பட்டவர்களும், விதவைகளும் இங்கு காணப்படுகின்றனர். கணவனால் கைவிடப்பட்டவர்கள், பெரிதும் வெளியிடத்தைச் சேர்ந்த ஆண்களாலேயே கைவிடப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இதனைவிட வேறிடத்துக்குத் தொழில் நிமித்தம் சென்ற ஆண்கள் அப்பகுதிகளில் வேறு திருமணங்களைச் செய்வதனால் கைவிடப்பட்டவர்களினால் எண்ணிக்கை அதிகமாகக் காணப்படுகின்றது.



# அன்னையே உன்னை

திரு.கு.கானமூர்த்தி,
பழைய மாணவன்,
இலண்டன்.

நூறகவை நிறைந்திங்கு வீறுடனே நடைபயிலும்
வாதவூரின் முத்தாகும் விக்னேஸ்வரா வித்தியாலயமே
ஆனா சொல்லித் தந்தாய் நீ அறிவுபல தந்தாய் நீ
பாற்போற்றும் பல அறிஞர் ஆக்கித் தந்தாய் நீ

வளம் பல இல்லைத்தான் என்றாலும்
தலைநிமிர்ந்தே நின்றாய் நீ
கல்லூரிகள் என்ன மகா வித்தியாலயங்கள் என்ன
அத்தனைக்கும் சிம்ம சொப்பனமாய் நின் மாணவர்கள்

உன் குழந்தைகள் என்று எல்லோரையும்
அரவணைத்து அறிவுக்கண் திறந்து
அறிஞர் சபையிலே அரங்கேற்றி வைத்து
பெருமை பல சேர்த்திட்ட அன்னையே நீ வாழ்க

வளப்பகிர்வில் பல ஓரங்கட்டல்கள்
நிகழ்ந்தாலும் கல்வி வளத்தாலே
உயர்ந்து நின்றாய் நீ
ஆரம்ப கட்டத்தில் அழிவு பல சந்தித்தும்
வளர்ச்சிக்கு எதுவும் தடைக்கல்லே இல்லை இல்லை

ஐயம்பிள்ளை வல்லிபுரம் அடிக்கல்லை நட்டு வைக்க
அடுத்து வந்த அதிபர்களின் அயரா உழைப்பாளே
வீறு கொண்டெழுந்து விண்ணைத் தொட்டு
நிற்கும் அன்னையே நீ வாழி

கல்வி கலை அன்றி விளையாட்டு என
அனைத்துத் துறைகளையும் எங்களிற்கு ஊட்டி
ஆன்றோர் சபையினிலே முன்வைத்த
அன்னையே அன்னிய தேசம் சென்றாலும்
என்றும் மறவேன் உன்னை

அன்பு பண்பு என வாழ்க்கைப்படி
அனைத்தும் அனைத்து அறிவூட்டி
உயர்ந்து நிற்கும் உன் செல்வங்களால்
உவகையுற்று உளப்பெருமை கொள்கின்றாய்

வாதரவத்தை! முன்னர் பலரறியார் இப்பெயரை
பனைவளம் இங்குண்டு பார் போற்றும்
கல்விச் செல்வம் இங்குண்டு பார்போற்றும்
கல்விச் செல்வம் இங்குண்டு வாய்க்கு ருசியான
வற்றாளைக் கிழங்குமுண்டு வற்றாத ஊற்றாக
அறிவுக்கண் திறக்கும் அன்னை நீ இங்கே

நூறாண்டல்ல நூறு நூறு யுகங்கள்
உன் புகழ் உலகெங்கும் ஒலிக்க
நீ நீடுழி வாழ வேண்டும்
உயிருள்ள வரைக்கும் உன்நாமம் நான் மறவேன்
வாதவூரின் இரத்தினமே எம் வாழ்வு சிறக்க
அறிவளித்த அன்னையே வாதவூரில் என்றும்
வாண்மை பெற்று வாழிய நீ பல்லாண்டு.

## அக்கினிக்குஞ்சு

அக்கினிக் குஞ்சுகள் வந்து
அடுக்காய்ப் பொழிந்தது அன்று
பற்றி எரிந்தது பாரும்
பார்க்குமிடமெல்லாம் சாம்பல் மேடு
ஓடுமிடமெங்கும் ஓயா ஓலம்
ஓடும் குருதி வழி நீளும் பயணம்
குஞ்சுகள் துடித்துக் கிடக்கத் தாய்
அஞ்சி ஓடும் அவலம்
நீள்நிலம் வாழ் குடி குறுகி
நின்றது கடற்கரை ஓரம்
அடித்தழைத்தனர் ஒருவர்
தடுத்தடித்தனர் ஒருவர்
யார் எம்மைக் காப்பார் பரனே
முள்ளி வாய்க்கால் வழி எம் நினைப்பே

செல்வன் ஜெ.டிசாந்
தரம் – 11

## யாழ்ப்பாணத்திற்கு இரணை மடு நீர் வந்தால்.....

## (குட்டிக் கதை)

அது ஒரு வறிய கிராமம் அங்கே விவசாயம் செய்வதற்கு போதுமான நீர் காணப்படவில்லை. அங்குள்ள நீர் நிலைகள் எல்லாம் உவர்த்தன்மை உடையவனவாக இருந்தன. விவசாயம் என்ற சொல்லைக் கேட்டவுடனே அக்கிராம மக்களுக்கு வெறுப்பே உண்டாகும். வளமான மண்வளம் அக்கிராமத்தில் காணப்பட்டது. மாரிகாலங்களில் ஒரு சிலர் மட்டுமே விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். ஆனால் இம் மக்களுக்குப் போதுமான இடவசதிகள் பெறுவது பெரும் இடைஞ்சலாக இருந்தது.

மாணவர்கள் நீண்ட தூரம் நடந்து பாடசாலைக்குச் சென்று வரும் வழியில் ஆடியும், பாடியும் தமது பொழுதைப் போக்கி வீடு வந்து சேருகின்றனர். முன்னொரு காலத்தில் அக்கிராமம் விவசாயத்திலும், பண்ணை வளர்ப்பிலும் மேலோங்கிக் காணப்பட்டதாக அறிய முடிகின்றது.

இத்தகைய கிராமத்தில் தான் கீதன் என்ற சிறுவனும் தனது, தாய்,தந்தையருடன் வாழ்ந்து வந்தான். இவர்கள் தமது வாழ்வை வறுமையால் அரைகுறையாகவே நடத்தி வருகின்றனர். கீதன் தன்னுடைய கிராமத்தின் வரலாறுகளை அறியும் போது தனது கிராமத்தையும், தன்னுடைய குடும்பத்தையும் எவ்வாறு முன்னேற்றலாம் என்ற சிந்தனையில் ஆழ்ந்திருப்பான். அவன் தனது வகுப்பில் முதன் நிலை மாணவனாகத் திகழ்ந்து வந்தான். கீதன் பத்திரிகைச் செய்திகளை நாளாந்தம் வாசித்து வந்தான்.

அன்று ஒரு நாள் சனிக்கிழமை கீதன் பத்திரிகை வாசிக்கச் சென்ற போது இரணைமடு குளத்திலிருந்து யாழ்ப்பாணத்திற்கு நீர் விநியோகம் செய்யப்பட இருப்பதாக அறிந்தான். பத்திரிகையை பார்த்த மறு கணமே ஆனத்தத்தில் துள்ளிக் குதித்தான். தனது கிராமத்திற்கு நீர் வந்தால் கீதன் விவசாய வளர்ச்சி பற்றி கற்பனையில் ஆழ்ந்தான்.

அன்று இரவு 7.30 மணியளவில் இரவு உணவை முடித்த பின் தனது கிராமத்தை எப்படி முன்னேற்றுவேன் என்று கற்பனை செய்து கொண்டு உறக்கத்தில் ஆழ்ந்தான். உறங்கிக் கொண்டிருந்த கீதன் தன்னுடைய கிராமத்திற்கு நீர் கால்வாய் மூலம் வந்து விட்டது. கிராமத்தில் குளங்கள், நீர்த்தேக்கங்கள் போன்றனவற்றில் நீர் நிரம்பிக் காணப்பட்டன.

அங்கு வாழ்ந்த மக்கள் சந்தோசமாக விவசாயம் செய்யத் தொடங்கினர். கீதனும் தனது குடும்பத்தோடு விவசாய நடவடிக்கையில் ஈடுபட்டான். எல்லாப் பயிர்களும் செழித்து நல்ல விளைச்சலைக் கொடுத்தன. கீதன் விவசாய நடவடிக்கையில் ஏனையோரை விட அதிக அக்கறை கொண்டு விவசாயம் செய்தான். கீதன் தனது கல்வி அறிவைப் பயன்படுத்தி மக்களுக்கு உதவிகள் செய்தான்.

பயிர்கள் நல்ல விளைச்சலைக் கொடுத்தன. வெளிநாடுகளுக்கு தனது உற்பத்திப் பொருட்களை அனுப்பி சிறந்த வருமானத்தைப் பெற்றான். தன்னுடைய பொருட்களை வைத்து உற்பத்திப் பொருட்களின் சந்தை ஒன்றை அமைத்துக் கொண்டான். தனது உள்ளூர் வளங்களைப் பயன்படுத்தி தொழிற்சாலை

ஒன்றை ஆரம்பித்தான்.

அவனுடைய தொழிற்சாலையில் 50க்கு மேற்பட்ட ஊழியர்கள் வேலை செய்து வருகின்றனர். இதனால் அக்கிராம மக்கள் அனைவருக்கும் வேலை கிடைத்ததுடன் மாணவர்களும் துவிச்சக்கர வண்டியில் பாடசாலை செல்ல முடிந்தது. கிராமத்தின் வறுமை நீங்கி அனைவரும் வசதி படைத்தவர்களாகவே வாழ்ந்து வந்தனர். வசதி படைத்தவர்கள் ஏனைய வறிய கிராமங்களுக்கு தம்மாலான உதவிகளைச் செய்து வந்தனர்.

கீதன் தனது உற்பத்தியை மேலும் மேலும் பெருக்கினான். வெளிநாடுகளுக்குப் பொருட்கள் செல்வதால் அவனது வருமானம் உயர்ந்தது இதனால் அவன் சர்வதேச உற்பத்திச் சான்றிதழையும் பெற்றான்.

தற்போது கீதனின் தொழிற்சாலையில் இருபதிற்கு மேற்பட்ட வாகனங்கள் பொருட்களை ஏற்றல் இறக்கல் செயற்பாடுகளுக்காக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. அவனின் தொழிற்சாலையில் இருந்து பல்லாயிரக்கணக்கான பொருட்களை ஏற்றிச் சென்ற லொறி ஆனையிறவுப் பாலத்திற்குள் தடம்புரண்ட செய்தி கீதனின் காதில் விழுந்தது. ஐயோ! என்று அலறினான். அப்பொழுது தான் கீதனுக்குப் புரிந்தது கனவு என்று எப்படியும் தன்னுடைய கிராமத்தை முன்னேற்றுவேன். என்ற இலட்சியத்தோடு மீண்டும் நித்திரை செய்தான்.

கீதன் தன்னுடைய கனவைப் போலவே கிராமத்தை வளர்ச்சி பெறச் செய்வான் என்று நம்புகிறேன்.

கு. சுரேகுலன்.
தரம் – ௯

## ஓணான்

மூரி மட்டை யோடு மட்டையாய்
மறைந்திருந்து ஓணானே - நான்
கிட்ட நெருங்கும் போது - நீ
கீழ் மேலாய் தலையசைத்து எனக்கு
என்ன செய்தி சொல்லுகிறாய் புரியவில்லை
நான் போகும் கருமம் நன்றாய் நடக்குமா? அன்றி
நடு வழியில் தடைப்பட்டுப் போகுமா
உன்னிலை கண்டு என் மனம் தளர்கிறது
உன் செயல் கண்டு அஞ்சி நிற்கின்றேன்
பஞ்சு மிதக்குமென்றாய் அன்று
பாதாளத்துள் இரும்பு போகுமென்றாய்
இன்று உன் மண்டையாட்டம் எதற்கு
இப்போ புரிகிறது உனக்கப்பால் வீற்றிருக்கும்
வண்டை வா வா என்கிறாய்

செல்வன் றெ. நிவேதன்
தரம் 10

# கிரிக்கெட்

கனவான்களின் விளையாட்டு என சிறப்பிக்கப்படும் விளையாட்டு கிரிக்கெட் கிரிக்கெட்டின் தாயகம் இங்கிலாந்து. கிரிக்கெட் தோன்றியது இங்கிலாந்தில் 12 ஆம் நூற்றாண்டின் இடைப் பகுதியிலாகும். கிரிக்கெட் ஆட்ட முறைகள் 1774இல் உருவானது. கிரிக்கெட்டில் 1870 இல் விக்கெட் அறிமுகமானது. கிரிக்கெட் சம்பந்தமான விடயங்களை தரும் சஞ்சிகை விஸ்டன் ஆகும். கிரிக்கெட் மட்டை வில்லோ மரத்தால் செய்யப்படுகின்றது. கிரிக்கெட் உலகின் பிதாமகர் டொனால்ட் பிரட்மன் ஆவார். உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி நான்கு ஆண்டுகளுக்கு ஒருதடவை நடை பெறுகின்றது. முதலாவது உலகக் கிண்ணப் போட்டி இங்கிலாந்து நாட்டில் நடந்தது. இதில் மேற்கிந்திய தீவுகள் சம்பியனானது.

1996இல் நடந்த 6 வது உலகக் கிண்ணப் போட்டியில் இலங்கை அணி சம்பியனானது. அதிக தடவைகள் உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றிய நாடு அவுஸ்ரேலியா ஆகும். இலங்கை அணிக்கு டெஸ்ட் அந்தஸ்து 1982ஆம் ஆண்டு கிடைத்தது. ஹட்ரிக் என்பது ஒரு ஓவரில் தொடர்ச்சியாக மூன்று விக்கெற்றுக்களைக் கைப்பற்றுதல். முதலில் ஹட்ரிக் சாதனை நிகழ்த்தியவர் ஸ்போப் பேர்த் ஆவார். டக் - வேர்த் லூயிஸ் முறை என்பது கிரிக்கெட் போட்டி நடை பெற்றுக் கொண்டிருக்கும் போது காலநிலை சீரின்மை ஏற்படின் முடிவை அறிவிக்கப் பயன்படும் முறை.

கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் வேகமாக 100 விக்கெட்டுக்களும் 1000 ஓட்டங்களும் பெற்ற வீரர் கபில் தேவ் ஆவார். டெஸ்ட் போட்டியில் இளவயதில் சதமடித்தவர் முகம்மட் அஷ்ரப்புல் ஆவார். ஜென்டில்மேன் ஆட்டம் எனப்படும் விளையாட்டு கிரிக்கெட் ஆகும். உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டியில் இரு கிண்ணம் வென்ற கப்டன்கள் ரிக்கிபொன்டிங், கிளைவ் லொயிட் உலகின் முதலாவது கிரிக்கெட் மைதானம் லோர்ட்ஸ் ஆகும். மிக இளம் வயதில் முஸ்டாக் முகம்மது என்பவர் கிரிக்கெட் விளையாடினார். 2011ஆம் ஆண்டு உலகக் கிண்ணம் நடக்கும் இடம் தென்னாசியா ஆகும். முதல் 20 - 20 கிண்ணத்தைக் கைப்பற்றிய நாடு இந்தியா (2007) ஆகும். கிரிக்கெட் போட்டியில் (ஒருநாள், டெஸ்ட்) அதிக ஓட்டமெடுத்தவர் சச்சின் டெண்டுல்கர் ஆவார். ஒருநாள், டெஸ்ட் போட்டிகளில் அதிக விக்கெட்டுக்களைக் கைப்பற்றியவர் முத்தையா முரளிதரன் ஆவார்.

**வி.நிஷாந்தாஸ்**
**தரம் - 6**

# மாணவர் சேமிப்பு அலகு திறப்பு விழா







கடந்த 16.07.2010 அன்று அச்சுவேலி மக்கள் வங்கிக் கிளையினரால் சிசு உதான மாணவர் சேமிப்பு அலகு திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் மக்கள் வங்கித் தலைமையகத்தின் ஆராய்ச்சிப் பணிப்பாளர் திரு.W.புஸ்பகுமார அவர்களும் வட பிராந்திய முகாமையாளர் திரு.S.பத்மநாதன் மற்றும் மக்கள் வங்கி அதிகாரிகளும் கலந்து கொண்டனர். சிசு உதான சேமிப்பு அலகு பிரதம விருந்தினரால் திறந்து வைக்கப்பட்டது.

## ஹிப்போக்கிரடீஸ்

மருத்துவம் ஒரு கடினமான கலையாகும். அதிகபட்ச ஒழுக்கத்தையும் மக்கள் மீது ஏற்படும் கருணையையும் அதிலிருந்து பிரித்து விட முடியாது. "கடந்த காலத்தை ஆராயுங்கள். நிகழ்காலத்தை தீர்மானியுங்கள். எதிர் காலம் குறித்து எதிர்வு கூறுங்கள் இவ்வாறு இக்கலையில் ஈடுபடுங்கள் மனிதர்களிடம் எங்கு அன்பு ஏற்படுகின்றதோ அவ்விடத்தில் இக் கலையும் தோற்றம் பெறுகிறது." என்று ஹிப்போகிரடிஸ் குறிப்பிட்டுள்ளார். மருத்துவத்துறைக்குச் செய்த அருஞ் சேவைகளுக்காக மருத்துவத் துறையின் தந்தை என்று சிறப்பித்துக் கூறப்படுபவர் ஹிப்போக்கிரடீஸ் ஆவார்

கி.மு 460ல் கிரேக்கத்தின் கோஸ் எனும் தீவில் இவர் பிறந்தார். சிறுவயது முதல் ஆய்வுகளில் அதிக அக்கறை கொண்டவராக இவர் திகழ்ந்துள்ளார். மருத்துவத் துறையை தனது தந்தையிடமும் ஹெரக்லைடஸ் மற்றும் கெரடிகஸ் ஆகிய ஆசிரியர்களிடமிருந்தும் கற்றுக் கொண்டார்.

பண்டைய காலத்தில் கீழைத்தேயப் பகுதிகளைப் போன்றே மேற்கத்தேய பகுதிகளிலும் தீய சக்திகளினாலேயே நோய்கள் ஏற்படுகின்றன. என மூட நம்பிக்கை பரவலாகக் காணப்பட்டது. இவ்வாறு தீய சக்திகளினால் ஏற்பட்ட நோய்களைக் குணப்படுத்தும் எஸ்குலாவியசிஸ் எனும் பெயரிலான பிரசித்தி பெற்ற தேவாலயம் ஒன்று கோல் தீவில் இருந்தது. அங்குள்ள மதகுருமார்களால் இறந்தவர்களைக் கூட உயிர்ப்பிக்க முடியும் என்று அப்பகுதி மக்கள் அதீத நம்பிக்கை கொண்டிருந்தனர். அதற்காகப் பூசைகளும் செய்தனர். எனினும் தீய சக்திகளுக்காக பூசைகள் செய்வதனூடாக நோய்கள் குணமடையப் போவதில்லை என்பதனை மருத்துவம் கற்றிருந்த ஹிப்போக்கிரடீஸ் விளங்கிக் கொண்டார். ஆனால் மக்கள் மத்தியில் வேரூன்றியிருந்த அதீத நம்பிக்கைகளுக்கு எதிராகத் திடீரென்று செயற்பட முடியாது என்பதை அவர் நன்கு புரிந்து கொண்டார்.

இதனால் மூட நம்பிக்களை ஒழிக்கும் பணிகளை இவர் படிப்படியாகவே மேற்கொண்டார். மருத்துவம் பற்றிக் கற்பதற்கு முன்னர் உடல் பற்றியும் உடல் அமைப்புப் பற்றியும் 'நன்கு கற்பது அவசியம் என்று ஹிப்போக்கிரடீஸ் கருதினார். இன்றளவில் மருத்துவத் துறையை கற்கும் போது இந்த அணுகு முறையே கடைப்பிடிக்கப்படுகின்றது. மருத்துவர் ஒருவர் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் குறித்தும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். அவையாவன.

மருத்துவர் ஒருவர் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறையை குறிக்க வேண்டும். நோயாளியின் கண்கள், சருமம், உடல், வெப்பநிலை, உணவு விருப்பு - வெறுப்பு, மலம், சலம் என்பவ்றைப் பரிசோதித்துப் பார்க்க வேண்டும்.

நோயாளிகளை அன்புடன் கவனிக்க வேண்டும்.

மேற்கத்தேய மருத்துவத்துறையில் பொது மக்கள் சுகாதாரம் எனும் கோட்பாட்டினை முதலில் முன்வைத்தவர் ஹிப்போக்கிரட்டீஸ் ஆவார். அவரால் எழுதப்பட்ட நீர், காற்று மற்றும் சுற்றுப்புறச்சூழல் எனும் நூலில் ஒரு குறிப்பிட்ட பகுதிக்குச் சேவையாற்றுவதற்காகச் செல்லும் மருத்துவர் ஒருவர் அப்பகுதியில் நிலவும் காற்று, நீர் மற்றும் சூரிய ஒளி பற்றியும் அங்கு வாழும்

மக்களின் வாழ்க்கை நிலை, உணவுப்பழக்கம் ஆகியவற்றையும் அறிந்து வைத்திருக்க வேண்டும். இதன் ஊடாக அங்கு பரவும் நோய்கள் குறித்து அந்த மருத்துவரால் புரிந்துணர்வு ஏற்படுத்திக் கொள்ள முடியும். என்று குறிப்பிட்டுள்ளார்.

ஹிப்போக்கிரட்டிஸினால் மேற்கத்தேய மருத்துவத் துறை குறித்து முன்வைக்கப்பட்ட பல விடயங்கள் தற்பொழுதும் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. அவர் மிகவும் ஆராய்ச்சி பூர்வமானவர். அனுபவரீதியாக பல விடயங்களைக் கற்றுக் கொண்டவராவார். தனது அனுபங்களை பிறருக்குக் கற்றுக் கொடுத்தார். அவரின் போதனைகளை செவிமடுக்கவும் அவரிடம் மருத்துவம் கற்கவும் என பலரும் அவரை நாடினர். அன்பான பேச்சு, ஆதரவான நடத்தைப்பாங்கு காரணமாக மக்களின் நன்மதிப்பைப் பெற்றார்.

நோயாளிகளை மிகவும் மரியாதையாகவும் கருணையாகவும் அவர் நடத்தினார். மருத்துவரின் செயற்பாடுகள் நோயாளர்களில் உளவியல் ரீதியாகச் செல்வாக்குச் செலுத்தவதாகவும் மருத்துவரின் இரக்க சுபாவம், நட்பு ரீதியான நடத்தைகள் அபாயகரமான நோயாளிகளைக் கூட குணப்படுத்தி விடும் என்று ஹிப்போக்கிரட்டீஸ் குறிப்பிட்டுள்ளார். இவர் கி.மு 370இல் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

செல்வன்.லி.தயிந்தாஸ்
தரம் – 11

# கல்வியின் சிறப்பு

வெள்ளத்தால் அழியாது வெந்தழலால் வேகாது வெந்தாலும் கொள்ளத்தான் முடியாதது என கல்வியின் சிறப்புப் பற்றி அறிஞர் கூறியிருக்கக் காண்கின்றோம். இத்தகைய கல்வி பற்றி புகழ்ந்துரைக்காத அறிஞரே இல்லை. கல்வி ஒருவருக்கு அழிவில்லாத நிலையான சொத்து. அது பிறரால் திருடப்பட முடியாதது. அதை இயற்கையால் கூட அழிக்க முடியாது. கொடுக்கக் கொடுக்க கூடுமே ஒழிய குறையாது. இத்தகைய கல்விச் செல்வம் பற்றி நோக்குவோம்.

மன்னனையும் கல்வி கற்றோரையும் சீர்தூக்கிப்பார்த்த ஒளவையார் மன்னனுக்கு தன் தேசத்தில் மட்டுமே சிறப்பு எனவும் கற்றவனுக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு எனவும் கூறி கல்வியின் சிறப்பு வலியுறுத்துகின்றார்.

மேலும் அவர் கல்வி கற்காத ஒருவனை கனகத்தினுள் நிற்கும் மரங்களை விட சிறந்த மரம் ஆவான் என்பதன் மூலம் கல்வி கற்காததால் ஏற்படும் இழிநிலையை காட்டுகிறார். கல்வியின் சிறப்பைப் பற்றி வான் புகழ் வள்ளுவர் கூறுமிடத்து

கண்ணுடையவர்கள் என சொல்லக் கூடியவர்கள் கற்றோர்கள் எனவும் கற்காதவர்கள் முகத்திலே இரண்டு புண்களை உடையவர்கள் எனவும் கல்வி கற்காதவனை இழிவாகவும், கல்வி கற்றவனை உயர்வாகவும் கூறுகிறார்:

கல்வியே இந்த உலகில் மனிதனை மனிதனாக வாழ வைக்கும் எனவும், அது ஏழேழு பிறப்புக்களுக்கும் உதவும் எனவும் வள்ளுவர் தனது குறழ்கள் மூலம் சிறப்பித்துக் கூறியிருக்கிறார். கல்வியானது ஏனைய செல்வங்கள் போல் அன்றி அதை உடையவர்களுக்கு மேலும் மேலும் இன்பத்தையே பயக்கும் பொருள் செல்வத்தை பிறருக்கும் கொடுத்தால் அது எம்மிடத்தே முடிந்து போகும் ஆனால் கல்விச்செல்வத்தை பிறருக்கு கொடுக்கக் கொடுக்க பெருகும்.

கல்வி அறிவுள்ளவர்களை பிறர் போற்றி மதிப்பர். ஆனால் செல்வம் உள்ளோரை திருடர்கள் அழிக்க முயல்வர். அவர் சொத்தையும் திருடர்கள் அபகரிப்பார். கல்விச் செல்வம் உடையவர்கள் தமது கல்விச்செல்வத்தை தமக்குமாத்திரமின்றி மற்றவர்களுக்கும் பயுன்படும்படி உதவி செய்வர். ஆனால் பொருள் செல்வம் உடையவர்கள் அவ்வாறு செய்ய மாட்டார்கள்.

செல்வமானது கண்ணுக்குத் தெரியக்கூடிய பருப்பொருளாகவே உள்ளது. ஆனால் கல்வியானது கண்ணுக்குப்புலப்படாத நுண் பொருளாக உள்ளது. இதனால் கல்வி ஏனைய செல்வங்களை விட சிறப்பானதாகும்.

பு.மதுர்ஷா.
தரம் - 8

# நாடுகளின் சிறப்புக்கள்

| | |
|---|---|
| இந்து சமுத்திரத்தின் முத்து | இலங்கை |
| சூரியன் மறையும் நாடு | இங்கிலாந்து |
| காகித வீடு/சூரியன் தெரியும் வீடு | ஜப்பான் |
| நள்ளிரவில் சூரியன் தெரியும் நாடு | நோர்வே |
| அதிகாலை அமைதி நாடு | கொரியா |
| இந்தியாவின் வாசல் | மும்பாய் துறைமுகம் |
| சீனாவின் துயரம் | குவாங்கோ நதி |
| நைல் நதியின் கொடை | எகிப்து |
| ஆயிரம் வாவிகள் நாடு | பின்லாந்து |
| உலகின் கூரை | பமீர் |
| உலக சர்க்கரைக் கிண்ணம் | கியூபா |
| ஐரோப்பாவின் விளையாட்டு மைதானம் | சுவிற்சலாந்து |
| ஐரோப்பாவின் காப்பகம் | பெல்ஜியம் |
| ஐரோப்பாவின் நோயாளி | துருக்கி |
| மரகதத் தீவு | அயர்லாந்து |
| பொற் கோபுர நாடு | மியன்மார் |
| குகை வீடு/இருண்ட கண்டம் | ஆபிரிக்கா |
| மர வீடு | பிலிப்பைன்ஸ் |
| புல் வீடு | ஹவாய் |
| பற்றை வீடு | அவுஸ்ரேலியா |
| மூங்கில் வீடு | கலிபோர்னியா |
| செங்கட்டி வீடு | சீனா |
| சுரங்க வீடு | சைபீரியா |
| பனிக்கட்டி வீடு | கிறீன்லாந்து |
| குடிசை வீடு | வடஅமெரிக்கா |

செல்வன்.யோ.பிரதாபன்
தரம் - 11

# பாடசாலைக்கு போட்டோக் கொப்பி இயந்திரம் அன்பளிப்புச் செய்த நிகழ்வு – 2010




அமரர் சரவணமுத்து கிருஸ்ணபிள்ளை நினைவாக அன்னாரது குடும்பத்தவர்களான

திருமதி சிவபாக்கியம் கிருஸ்ணபிள்ளை
திரு.கிருஸ்ணபிள்ளை பாலகிருஷ்ணன்
திரு.கிருஷ்ணபிள்ளை பாலச்சந்திரன்
திரு.கிருஷ்ணபிள்ளை பாலகணேசன்
திரு.கிருஷ்ணபிள்ளை பாலமனோகரன்
திரு.கிருஷ்ணபிள்ளை பாலேஸ்வரன்
திருமதி.வி.கௌரிதேவி
செல்வி.சசிகலாதேவி கிருஷ்ணபிள்ளை

ஆகியோர் இணைந்து வழங்கிய 142, 500/= பெறுமதியான போட்டோ பிரதியாக்கும் இயந்திரம் கடந்த 23.07.2010 அன்று இவர்களது குடும்ப உறவினரும் இப்பாடசாலையின் முன்னாள் உப அதிபருமான திரு.சரவணமுத்த குமாரசாமி அவர்களால் பாடசாலை அதிபரிடம் கையளிக்கப்பட்டது.

## காலத்தில் பணியாற்றிய ஆசிரிய மணிகள்

எமது பாடசாலையில் கடந்த காலங்களில் பணியாற்றிய ஆசிரியர் விபரங்களைத் திரட்ட முயற்சித்தோம். கைவசம் இருக்கும் பாடசாலை ஆவணங்கள் மற்றும் கிடைத்த தகவல்கள் என்பனவற்றின் அடிப்படையில் அரை நூற்றாண்டுக்கும் பிந்திய விபரங்களையே எம்மால் உறுதிப்படுத்த முடிந்தது. அந்தவகையில் எமக்குக் கிடைத்த தகவல்களின் அடிப்படையில் பணியாற்றிய ஆசிரியர் விபரங்களை இங்கே தருகின்றோம். தகவல் கிடைக்காமையால் ஒரு சில ஆசிரியர்களின் பெயர் விபரங்கள் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் குறிப்பிடப்படாதிருப்பின் அதற்காக வருந்துகின்றோம்.

**மலர்க் குழு**

1. திரு.த.கனகரத்தினம்
2. திரு.மு.நாகரத்தினம்
3. திருமதி.சு.வடிவேலு
4. திருமதி.யு.ஜெபரட்டினம்

} 1955 இல் பணியாற்றினர்

| | | |
|---|---|---|
| 5. | திரு.அ.நாகரத்தினம் | (English Teacher) |
| 6. | திரு.மு.சுப்பிரமணியம் | (1957) |
| 7. | திரு.வ.தினகரிப்பிள்ளை | (1958) |
| 8. | திரு.வ.சந்திரசேகரம் | |
| 9. | திரு.சு.நடராசா | (1959) |
| 10. | திரு.அ.சிதம்பிரப்பிள்ளை | (1960) |
| 11. | திரு.ப.தாமோதரம்பிள்ளை | (12.6.1961) |
| 12. | திருமதி.வ.நடராஜா | |
| 13. | திரு.த.கந்தசாமி | 16.07.1962 - 31.12.1972 |
| 14. | திரு.நா.இராமலிங்கம் | 1965.01.06 - |
| 15. | திரு.சுபொன்னையா | 1966.02.11 - 1969.06.22 |
| 16. | திருமதி.சு.சிவபாக்கியரத்தினம் | 1967.04.03 - 14.09.1967 |
| 17. | திரு.க.சிவபாதம் | 1968.11.01 - 1970.02.07 |
| 18. | திரு.வீ.இளையதம்பி | 1969.06.25 - 31.121970 |
| 19. | திரு.ச.கணபதிப்பிள்ளை | 1970.02.07 - 31.12.1972 |
| 20. | திரு.ச.குமாரசாமி | 1971.02.03 - 1994 |
| 21. | திரு.ஞ.யோகநாதன் (கணித/விஞ்ஞா) | 1972.01.01 - 31.12.1976 |
| 22. | திரு.மு.இராசரத்தினம் | 1972.01.01 - 16.02.1973 |
| 23. | திரு.மா.கனகரத்தினம் | 1972.09.01 - 18.09.1973 |
| 24. | திரு.ச.நா.கணேசன் | 1973.02.05 - |
| 25. | திரு.சு.தம்பிராசா | 1973.02.07 - 1981.01.15 |
| 26. | திரு.க.சபாபதி | 1973.02.15 - 1977.02.10 |
| 27. | திரு ந.அருளம்பலம் | 1873.02.15 - 24.02.1983 |

| | | |
|---|---|---|
| 28. | திரு.வே.பரிமேலழகபிள்ளை (English) | 15.02.1974 - |
| 29. | திரு.அ.கனகசபை (English) | 1975.01.07 - |
| 30. | திரு.அ.மறைக்காடர் (English) | 1975.09.11 - 09.01.978 |
| 31. | திருமதி.க.பாலசுப்பிரமணியம் | 1976.01.01 - 24.01.1977 |
| 32. | திரு.ந.தவநீதராசா | 1977.23.05 - 1977 (சில மாதங்கள்) |
| 33. | திரு.பா.சுவாமிநாதன் (கணிதம்) | 1977.02.01 - 01.02.1979 |
| 34. | திரு.கு.மேகநாதன் | 1977.06.09 - 26.09.1985 |
| 35. | திரு.கா.தருமரத்தினம் | 1978.05.23 - 18.01.1982 |
| | | 1990.06.15 - 03.03.1996 |
| 36. | திரு.த.வரதராசா | 1978.05.23 - 05.01.1989 |
| 37. | திரு.அ.வை.முத்துசாமி | 1982.02.01 -19.07.1982 |
| 38. | திருமதி.த.சிவஞானசுந்தரம் | 1982.02.01 - 29.04.1985 |
| 39. | திருமதி. பொ.இரத்தினம் | 1982.02.01 - 01.06.1986 |
| 40. | திரு.வ.நவரத்தினம் | 1982.02.09 - 15.05.1982 |
| 41. | திரு.த.பஞ்சநாதன் (கணி/விஞ்) | 1982.01.18 - 10.02.1982 |
| 42. | திருமதி.சி.திருச்சிற்றம்பலம் (விவசாயம்) | 1982 - 01.06.1984 |
| 43. | திரு.செ.செல்லத்துரை | 1982.03.05 - 05.01.1989 |
| 44. | ஜனாப்.ஏ.ஏச்.இஸ்ஸத்தில் லாபிர் (விஞ்ஞானம்) | 1982.07.29 - 01.06.1984 |
| 45. | திரு.பி.அன்ரனி (கணிதம்) | 1982.07.01 - 21.09.1982 |
| 46. | திரு.சி.யோகசிங்கம் (English) | 1984.02.01 - 18.10.1991 |
| 47. | திரு.க.பாலசுப்பிரமணியம் (விவசாயம்) | 1985.03.23 - 31.12.1994 |
| 48. | திரு.என்.தெவேந்திரராசா | 1977.01.24 - |
| 49. | செல்வி.புஸ்பலீலா சுப்பையா | 1986.01.13 - 05.01.1989 (இந்து சமயம்) |
| 50. | திரு.த.சிவகுமாரன் (சமூகக்கல்வி) | 1986.01.06 - 05.01.1989 |
| 51. | திரு.ஏ.பாலேந்திரன் (சமூகக்கல்வி) | 1986.01.01 - 01.09.1989 |
| 52. | திரு.கா.நடேசு | 1985.02.27 - 11.03.1988 |
| 53. | செல்வி.புஸ்பலதா திருநாவுக்கரசு (Maths/Science) | 1989.06.10 - 11.02.1992 |
| 54. | திரு.மா.தங்கத்துரை | 1985.04.04 - 30.10.1998 |
| 55. | திரு.ப.பாலசுப்பிரமணியம் | 1986.01.01 - 05.01.1989 |

56. திரு.S.ஏ.சிவசிதம்பரநாதன் (Bsc) 1985.04.29 - 05.01.1989
57. திரு.ச.இரவீந்திரநாதன் 1987.01.05 - 1991 (Science)
58. திரு.செ.சிவஞானஅன்பு 1988.10.21 - 01.09.1994 (Social)
59. செல்வி.ச.சோமசுந்தரம் 1988.10.21 - 31.12.1989
60. திருமதி.பாமா உதயகுமார் 1989.11.28 - 20.08.1991
61. செல்வி.தயாபரி இராமலிங்கம் 1988.10.20 - 02.10.1997
62. திரு.க.வல்லிபுரநாதன் 1989.11.23 - 31.12.1989
63. திரு.பு.ஸ்ரீஸ்கந்தராசா (விஞ்) 1990.03.28 - 30.03.1997
64. செல்வி.ந.மங்களேஸ்வரி 1990.01.03 - 31.12.1993 (Music)
65. திருமதி.இ.அருளானந்தம் (Sc Trd) 1990.01.16 - 20.03.1990
66. செல்வி.S.கலாவாணி 1990.01.03 -
67.செல்வி.L.J.லொறிற்றா 1991.10.14 - 30.06.1993
68. திரு.அ.அருந்தவநேசன் 1991.10.25 - 01.01.1994
69. செல்வி.P.சாந்தி 1990.01.03 -
70. திரு.க.பரமராசு 1992.02.14 - 1995
71. திரு.P.P.S.ராஜா 1993.09.03 -
72. செல்வி.மா.ஜெயந்தி (வர்த்தகம்) 1995.01.02 - 01.01.1998
73. செல்வி.சந்திராதில்லை சிவலோகநாதன் (Science) 1996.11.01 - 17.01.2000
74. திருமதி.ப.நாகராசா 1997.01.20 - 21.01.2000 (இந்து சமயம்)
75. செல்வி.ஞா.ஞானலட்சுமி 1997.09.10 - 01.04.2001 (Maths)
76. திருமதி.செல்வமணி செல்லத்துரை (சங்கீதம்) 1998.01.01 - 24.09.1998
77. செல்வி.S.கோமதி 1998.09.21 - 01.01.2001 (ஆரம்பம்)
78. செல்வி.க.லலிதானந்ததேவி 1998.04.07 - 2007.01.01 (தமிழ்)
79. திரு.S.பிறீசேதுபரன் 1996.01.11 - 1998 (Bsc)
80. திரு.பொ.தவராசா (English) 1998.04.20 - 05.02.2005
81. திருமதி.க.அமரசிங்கம் 1994.05.31 - 1995
82. திரு.க.விஜயதேவன் 1998.07.16 - 29.02.2003 (Maths)
83. செல்வி.மு.வசந்தராணி 1998.04.07 - (ஆரம்பக் கல்வி)
84. திருமதி.ல.பத்மராஜா 1998.01.01 - 01.03.1999
85. திரு.செ.சிவநேசன் 1988.10.21 -
86. திரு.சூ.கோபாலகிருஷ்ணன் 1996.01.01 - 2006 (வர்த்தகம்)
87. திரு.க.செந்தில்குமரன் 1997.01.03 - (விவசாய விஞ்ஞானம்)
88. திரு.S.மனோகரன் (Part time English) 1997.06.09 -
89. திரு.S.தேவகுமார் (Part time English) 1995.01.02 -

90. திருமதி.சா.கெங்காதரன் 1995.01.06 - 01.01.1998
(மனையியல்)
91. திரு.வே.முகுந்தன் 1996.11.01 -2001.01.01 (கணிதம்)
92. திரு.கா.சிவசுப்பிரமணியம் 1997.01.02 - 04.01.1999 (ஆரம்பக்கல்வி)
93. திரு.அ.பேரின்பநாயகம் 1990.03.28 - 1997.01.04 (விவசாயம்)
94. திரு.ம.இரங்கநாதன் 1988.10.21 - 06.01.1994 (தமிழ்)
95. திரு.S.R.மயில்வாகனம் 1993.05.03 -
96. செல்வி.இந்திரா தில்லைசிவலோகநாதன் 1998.04.07 - 20.05.2002
(விஞ்ஞானம்)
97. திரு.பொ.சற்குணநாதன் 1998.09.15 - 09.06.2003
(Bsc)
98. திரு.இ.வசிகரன் 1999.05.05 -
(P Eng)
99. திரு.S.முருகதாஸ் 2001.01.22 - 2001.05.09
100. திரு.ஐ.ரமேசன் 2000.01.03 - 15.07.2003
101. திரு.க.பரமேஸ்வரன் 2000.01.03 - 2006.01.01(ஆரம்பக் கல்வி)
102. திரு.சி.நகுலேந்திரன் 2000.01.03 - 17.01.2000
103. திரு.S.லிங்கேஸ்வரன் 2003.01.03 - 17.01.2000 (கணிதம்)
104. திரு.க.கலைக்குமார் 2005-2007 (விஞ்ஞானம்)
105. திரு.கு.சுந்தரச் செல்வன் 1998-2006 (கணிதம்)
106. திரு.நா.மகேந்திரராசா 1998 - 2002 (விஞ்ஞானம்)
108. திரு.வ. தவபாக்கியராசா (B.com)

# மாணவர் தலைவர்களுக்கு சின்னம் சூட்டும் நிகழ்வு - 2010




28.07.2010 அன்று நடைபெற்ற மாணவர்தலைவர்களுக்கு சின்னம் சூட்டும் நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் கல்விக் கோட்ட கல்விப் பணிப்பாளர் திரு. சி. சித்திரவடிவேல் அவர்கள் கலந்து கொண்டார்.

# நூற்றாண்டில் இடமாற்றம் பெற்றுச்

# சென்ற ஆசிரியர்கள்

1. திரு.கு.கிபாகரமூர்த்தி 1998.02.23 - 2010.06.06 (விஞ்ஞானம்)
2. திரு.சி.பொன்சிவநேசன் 03.01.2000 - 2010 (ஆரம்பக்கல்வி)
3. திரு.இ.சந்திரராஜ் 03.01.2000 - 06.06.2010 (விஞ்ஞானம்)
4. திருமதி.வெ.கேதீஸ்வரன் 2005.09.12 - 2010 (நூலக ஆசிரியர்/BA)
5. திரு. தி.முருகையா 2006.01.04 - 06.06.2010 (கணிதம்/Bsc
6. திரு.கு.சரவணேஸ்வரன் 2008.03.17 - (Bsc)

**தற்காலிக இணைப்பில் பணியாற்றிச் சென்றோர்**

1. செல்வி.சத்தியரஜனி குமாரசாமி (மன்னார்) 2008.01.02 - Geo (Spl)
2. திரு.பா.இளங்கோ 2008.01.02 - BA
3. திருமதி.சிவசோதி இராஜேஸ்வரன் (ஆரம்பக் கல்வி) (கிளிநொச்சி) 2009.10.22 - 2010.08.08
4. திரு.இ.தங்கராசா (துணுக்காய்) 2009.10.30 - 2009 (ஆரம்பக்கல்வி)
5. திரு.சி.பத்மதாசன் (மன்னார்) 2009.11.03 - B.A

## நூற்றாண்டின் ஆசிரிய குழாம்

1. திரு.J.A.தவநாயகம் 2009.07.07 - இன்றுவரை
   BA MEd, Dip in Ed.D.S.Mgt
2. திரு.மு.பேரின்பமூர்த்தி 1998.02.23 - இன்றுவரை
   Com - Trd
3. திரு.க.சேயோன் 2004.06.04 - இன்றுவரை
   Dip in Music
4. திரு.P.பிரதீபன் 2003.03.24 - இன்றுவரை
   Art - Trd
5. திரு.ந.சிவாகரன் 2003.06.09 - இன்றுவரை
   Agri Trd
6. திருமதி.சத்தியபாமா தவக்குமார் 2003.06.19 - இன்றுவரை
   Pri - Trd
7. திரு.பொ.பரஞ்சோதி 2006.07.03 - இன்றுவரை
   pri Trd
8. திரு.S.ரவிச்சந்திரன் 2010.06.16 - இன்றுவரை
   Bsc, Dip in Ed
9. திரு.சு.இந்திரகுமார் 2010.07.14 - இன்றுவரை
   Bsc,Dip in Ed
10. திருமதி.இலக்குணதேவி கனகலிங்கம் 2007.06.25 - இன்றுவரை
    BA (Geo)
11. செல்வி.வித்யா குமாரசாமி 2008.12.01 - இன்றுவரை
    BA (Hons) (Eco)
12. திருமதி.J.ஜெமல்டா 2008.12.03 - இன்றுவரை
    BA
13. திரு.க.கிருபாகரன் 2008.12.01 - இன்றுவரை
    BA
14. திரு.து.ஜீவானந்தன் 2008.12.03 - இன்றுவரை
    BA Hons (Tamil)
15. திரு.இ.கோகுலன் 2008.12.27 - இன்றுவரை
    H.N.D.A
16. திரு.ஆ.சிவசுதர்சன் 2008.11.25 - இன்றுவரை
    English.Trd, H.N.D.E (தற்காலிக இணைப்பு)
17. திரு.து.சயந்தன் 23.07.2009 - இன்றுவரை
    Eng.Trd
18. செல்வி.கலாசினி சின்னராசா 2009.11.16 -இன்றுவரை
    (T.A)




**J/Vatharawattai Vigneswara Vidyalayam**
**Foot Ball Team - 2010**




**Vatharawattai Vigneswara Vidyalayam**
**Net Ball Team - 2010**



**Primary Students (1-5)**



**Junior Secondary Students (6-9)**




**Senior Secondary Students (10,11)**



**வலயமட்டத்தில் முதலிடம் பெற்ற தாச்சிப்போட்டி அணியினர்**

# ANNAI BOOK DEPOT

*No, 7 Hospital Road,*
*New Market*
*Jaffna.*

**T.P : 021 222 9881**



# KAJAMUGAN
## Hardware

Leading Hardware Merchant in
Jaffna Pennisulla

Prop: E.S.P. Nagatnam

147, 149, Stanley Road, Jaffna.
Tel: 021 222 2833
Fax: 021 222 2368

Head Quarters
103, Old, Moor Street,
Colombo - 12
Tel : 0112 542985
Fax : 0112 542984

E Mail : Kajamuganhw @ Hotmail. com

## பேப்பர் ஹவுஸ்

இதோ யாழ் நகரில் பாடசாலை மற்றும்
காரியாலய உபகரணங்கள், அச்சுக்
கூடங்களிற்கான பலவர்ண காகிதாதிகள்,
மாணவ மாணவிகளிற்கான புதிய
டிசைன்களில் பைகள், கவர்ச்சிதரும்
அப்பியாசக் கொப்பிகள் மற்றும்
கணனி உபகரணங்கள்,
பொலித்தீன் றோல் வகைகள்.

**"அற்லஸ்" டிஸ்றிபியுடர்ஸ்**

மொத்த சில்லறை விற்பனையாளர்
300, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 5343

## ஆஸ்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்

சகலவிதமான பாடப்புத்தகங்கசள், காகிதாதிகள்,
பாடசாலை உபகரணங்கள், மருத்துவ புத்தகங்கள்,
மருத்துவ உபகரயங்கள், அனைத்தையும் ஒரே இடத்தில்
நியாய விலையில் பெற்றிட நீங்கள் நாட வேண்டிய இடம்

இல: 212, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.




தொ.பே.
021 222 5542

# றெஸ் பொயின்ட்

விதம் விதமான ஆடைகள், நவ நாகரீக ஆடைகள் மற்றும்
சகலருக்குமான சகல ஆடைகளையும் பெற்றுக்கொள்ளலாம்



## DRESS POINT



'A Point in Jaffna to Select Dresses For Whole Family'

23, Grand Bazaar,
Jaffna.

T.P : 021 222 6833
Cell : 0777 592642
077 3164685

metropolitan

மெற்றோ பொலிற்றன் நிறுவனத்தின்
யாழ். மாவட்ட ஏக முகவர்

## நவகலா

கனொன் போட்டோகொப்பி இயந்திரம், பக்ஸ் இயந்திரம், கனொன் பிறிண்டர்ஸ்,
ரோணியோ மெசின் இவற்றின் original உதிரிப்பாகங்கள், ரோணர் வகைகள்
IBM Computer, ACER Computer அனைத்தையும், ஒரே இடத்தில்
விற்பனைக்குப் பிந்திய சேவையுடனும்,
உத்தரவாதத்துடனும் பெற்றுக் கொள்ளலாம்.



மற்றும் Double A A4இ A3 paper மொத்தமாகவும்,
சில்லறையாகவும்
எம்மிடம் பெற்றுக்கொள்ளலா





200, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். T.P : 021 222 5462

பாலர் வகுப்பு முதல் பட்டதாரி வகுப்புவரை
சகல பாடநூர்களும் மற்றும் உபகரணங்கள்
வாழ்துமடல்கள், சஞ்சிகைகள், காகிதாதிகள்,
அனைத்தையும் பெற்றுக்கொள்ள அன்புடன் நாடுங்கள்.

# சுபான் புத்தக நிலையம்

பிரதான வீதி, அச்சுவேலி

Poobalasingam
Book
Depot

No : 4, Hospital Road,
Jaffna.

பூ
பா
ல
சிங்கம்
புத்தகசாலை

இல : 4
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

T.P :
021 222 6693


மக்கள் வங்கி... என்றும் உங்களுடன்...
மாணவர் மலர்ச்சிக் கணக்கு
சிசு உதான
மக்கள் வங்கியின் வனிதா வாசனா
பரிதை
ஜனஜய
சேமிப்புடன் முன்னோக்
மழலைகள் மலர்ச்சிக் கணக்கு
இசுறு உதான
60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு 20% மேலதிக வட்டி
பாடசாலை மாணவர்களுக்கு விசேட புலமைப் பரிசில் திட்டம்
நிலையான வைப்புக்களுக்கு கவர்ச்சிகரமான வட்டி வீதங்கள்...
மாணவர்கள், முன்பள்ளி சிறார்களுக்கான விசேட பரிசுப் பொருட்கள்...
SMS Banking மற்றும் பல்வேறுபட்ட கடன் வசதிகளுடன்...
2006 2007 2008
2008
2009
2009
www.peoplesbank.lk
மக்கள் வங்கி

# Wood Sons

Quality Furniture in
Wood Cane & Steel

Distributors For
Arpico Products

Residence
224/14, Brown Road,
Jaffna.

No. 68-70
Manipay Road,
Jaffna.

Tel :
0212 222 2430

# VANI TEX

SPECIALIST IN
WEDDINGSAREES
& SHALWAR
KAMEEG

81, Grand Bazaar,
Jaffna.




Tel : 021 222 5578

# Sivakanesan Textiles

Wholesale & Retail Dealers in Textiles

Specialist in Wedding Sarees



No : 41, Grand Bazaar,
Jaffna, Srilanka.
Tel : No: 021 222 2063

# குருபரன் கல்வி நிறுவனம் - புத்தூர்

- தரம் 3 தொடக்கம் O/L வரையான சகல வகுப்புக்களும் நடைபெறுகின்றன.
- A/L கலை வகுப்புக்களும் நடைபெறுகின்றன.
- அனைத்து வகுப்புக்களும் தரமிக்க ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவையில் நடைபெறுகின்றது.



நிறுவன முதல்வர்
திரு. N. அன்ரன்

வீ.எம்.கே. ஜுவல்லறி

தொ.பே : 021 222 7339
021 222 4339

ஓடர் நகைகள் குறித்த
தவணையில் செய்து தரப்படும்

105, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

G.S. LINGANATHAN & CO

NO; 13,14,51
GARAND BAZAAR
JAFFNA.

T.P ; 3139, 8107


ASEER VANIGA
NILAIYAM

Paper, Stationery,
Exercise Books and
Wedding Cards

No: 202 A,
K.K.S Road,
Jaffna.

T.P: 021 222 2842 Mobile : 0777721740
021 222 5485 Fax : 021 222 2842

# நன்றி நவில்கின்றோம்



* எமது பாடசாலையின் நூற்றாண்டு சிறப்பு மலருக்கு ஆசிச் செய்திகளை வழங்கிய நல்லை ஆதீன குருமுதல்வர் அவர்களுக்கும், புத்தூர் மெதடிஸ்த மிஷன் பொறுப்புக்குரு அவர்களுக்கும் நன்றிகள்.
* வாழ்த்துச் செய்தியை வழங்கிய பிரதம விருந்தினரும் கௌரவ அமைச்சருமான கே.என்.டக்ளஸ் தேவானந்தா அவர்களுக்கும் நன்றிகள்.
* வாழ்த்துச் செய்திகளை வழங்கிய மாகாணக் கல்வியமைச்சின் செயலாளர், மாகாணக்கல்விப் பணிப்பாளர், மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர், மாவட்டச் செயலாளர், வலயக் கல்விப் பணிப்பாளர், பிரதேச செயலர், கோட்டக்கல்விப்பாளர், பிரதேச சபைத் தலைவர், முன்னாள் அதிபர்கள், கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர், பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர், கிராம அலுவலர், பழைய மாணவர் சங்கம் ஆகியோருக்கு நன்றிகள்.
* ஆக்கங்களை வழங்கிய கல்விமான்கள், முன்னாள் ஆசிரியர்கள், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்களுக்கும் நன்றிகள்.
* நிதியுதவி வழங்கிய அனைவருக்கும், விளம்பரங்களைத் தந்துதவிய வர்த்தகர்களுக்கும் நன்றிகள்.
* இம்மலரை அழகுற வடிவமைத்துதவிய M-கொழும்பு பிறின்டேர்ஸ் நிறுவனத்துக்கும் இதயம் கனிந்த நன்றிகள்.

- மலர்க்குழு -



# நன்றி நவில்கின்றோம்

- [illegible]
- [illegible]
- [illegible]
- [illegible]
- [illegible]
- [illegible]



யாழில் ஸ்ரீகொழும்பு பிறிண்டேர்ஸ் 666, கே.கே.எஸ் றோட்
(யாழ் இந்துக் கல்லூ அருகாமை) யாழ்.